Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 03 சனிக்கிழமை (19-07-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 7

# செஞ்சிலுவை, ஐ. நா. அதிகாரிகள்

# புலிகளுடன் மல்லாவியில் பேச்சு!

## கப்பல் சேவை குறித்து

கொழும்பு, ஜூலை 19

வடக்குக்கான பயணிகள் கப்பல் மற்றும் சரக்குக் கப்பல்களுக்கு வழித் துணை வழங்குவது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையில் மல்லாவியில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

வடக்குக்கான பயணிகள் கப்பல் மற்றும் சரக்குக் கப்பல் சேவைகளை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திடமும் அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

இதனை அடுத்தே விடுதலைப் புலிகளின் நோக்கத்தை அறிந்து கொள்வதற்காக அந்த இரு நிறுவனங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் 2 இளம் பெண்கள் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 19

படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு இளம் பெண்கள் பலியான சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றது.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் இருவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்—

அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் — பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (இ-15]

## இலங்கையர் உட்பட 330 பேர் இத்தாலிய பொலீஸாரால் கைது!

### ஏற்றி வந்த துருக்கிய கப்பலும் சிக்கியது

கொழும்பு, ஜூலை 19

இத்தாலிக்கு அருகில் உள்ள சிசிலிதீவுக்கடலில் இலங்கையர் உட்பட 330 வெளிநாட்டவர்கள் இத்தாலியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை, பங்களாதேஷ் நாடுகளையும், வேறு நாடுகளையும் சேர்ந்த இவர்கள் சிசிலிதீவின் தென்—கிழக்கு கரையோரத்தில் துருக்கிக் கப்பல் ஒன்றில் இருந்து சிறு றப்பர் படகுகளில் இறக்கப்பட்ட போது கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாலிய கரையோரக் காவல்படையினர் துருக்கிய கப்பலைச் சுற்றி வளைத்து அதனை துறைமுகத்துக்கு எடுத்துச் சென்றனர்.

சட்ட விரோதமாக ஆள்களை ஏற்றி வந்ததுக்காக அக்கப்பலின் 5 மாலுமிகள் கைது செய்யப்பட்டனர்,

கைதான 330 குடியேற்றக்காரர்களும் விளையாட்டு மைதானம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## சடலத்துக்குள் மறைந்து கிடந்த சிசுவின் சடலம்!

### மரண வீட்டில் பரபரப்பு!!

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஆஸ்பத்திரியில் மரணமான வயோதிபரின் சடலத்தை அங்கிருந்து எடுத்து வந்து வீட்டில் இறுதிக் கிரியைகள் செய்ய ஆயத்தமான உறவினருக்குப்பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

பிரேதப் பெட்டிக்குள் வயோதிபரின் சடலத்தின் ஆடைக்குள் இருந்து சிசு ஒன்றின் சடலம் வெளிப்பட்டது.

பருத்தித்துறை சாரையடி என்னும் இடத்தில் மரண வீடு ஒன்றில் இந்தப் பரபரப்பான சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவந்ததாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் ஷெல்!

## 4 பொதுமக்கள் பலி!!

வவுனியா, ஜூலை 19

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் ஏவிய இருஷெல்கள் மாங்குளம் நகர்ப்பகுதியில் நேற்றுக் காலை 11-30 மணியளவில் வீழ்ந்து வெடித்ததில் 4 பொதுமக்கள் உயிரிழந்தனர், 6 பேர் காயமடைந்தனர்.

சங்கானையைச் சேர்ந்த பெரியதம்பி செல்வமலர் (22 வயது), குடத்தனையைச்சேர்ந்த செல்வராசா ஜனார்த்தனன் (14 வயது) மற்றும் சிங்கார வடிவேல் குருநாதன் (14 வயது), சிதம்பரப்பிள்ளை வன்னியசிங்கம் (13 வயது) ஆகியோரே இறந்தவர்களாவர்.

பெரியதம்பி விக்கினேஸ்வரன் (18 வயது — சங்கானை), பரமேஸ்வரன் கலாநிதி (14 வயது, குடத்தனை), பரமேஸ்வரன் (11 வயது, குடத்தனை), கணேசலிங்கம் அனுக்ஷா (16 வயது, உருத்திரபுரம்), திருஞானசம்பந்தர் ஹேமமாலினி (19 வயது), ராசலிங்கம் சுகந்தன் (9 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலையடுத்து அப்பகுதி மக்கள் மூடை முடிச்சுக்களுடன் இடம் பெயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூலை 19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 35 தமிழ் பெண்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நிரந்தர இடவசதி, அடிப்படை வசதி ஆகியன வழங்கக்கோரி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் ஒருவார காலத்துக்கு நீராகாரம் அருந்தி நடத்தப்படும் என்றும் —

அதற்குள் வசதிகள் செய்து தராத பட்சத்தில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமாக மாறும் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-164-173)

## இலங்கை ஹெலிகள் தாக்கி இந்திய மீனவர் இருவர் பலி!

### மற்றும் இருவர் காயத்துடன் தப்பினர்

புதுடில்லி, ஜூலை 19

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இரு ஹெலிக்கொப்ரர்கள் தாக்குதல் நடத்தியதில் இந்திய மீனவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

தமிழ்நாட்டின் கோடிக்கரைக்கு தென்கிழக்கே உள்ள கடலில் நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்த மீனவர்கள் இருவரும் நீந்திச் சென்று தமிழ்நாட்டுக் கரையை அடைந்தனர்.

இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போதே தாம் தாக்குதலுக்கு உள்ளானதாக இவர்கள் இருவரும் தெரிவித்தனர். (இ-5)

## கொடிகாமம் தாக்குதலில் 4துப்பாக்கிகளும்அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடந்த 16 ஆம் திகதி கொடிகாமத்தில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது படையினரிடமிருந்து நான்கு துப்பாக்கிகளும் புலிகளினால் அபகரிக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் தாக்குதல் தொடர்பாக 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி பலகல்ல விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் லண்டன் பயணம் குறித்து பலதரப்பட்ட ஊகங்கள்

### பதில் அளிக்க அமைச்சர்கள் மறுப்பு

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக பலதரப்பட்ட ஊகங்கள் நிலவுகின்றன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், தபால், தொலைத் தொடர்பு தகவற்றுறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரிடம் ஜனாதிபதியின் விஜயம் தொடர்பாக செய்தியாளர்கள் சரமாரியாகக் கேள்விகள் கேட்டனர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு அரச எம்.பிக்களின் அங்கீகாரத்தைக் களுத்துறையில் நடந்த கூட்டத்தில் பெற்றுக்கொண்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Econo 90 Honda (நீலம்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்). [48447]

புதிய (Yamaha) 2.3K.V. ஜெனரேற்றரும், Sharp போட்டோ பிரதி மெசினும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. சிவராஜா, 17/1, கைலாயபிள்ளையார்கோயில் மேற்கு வீதி, நல்லூர். [48435]

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர்வித்தியாலயத்துக்கும், பரி.யோவான் கல்லூரிக்கும், கச்சேரிக்கும் மிக அண்மையில் உள்ள 2½ பரப்புக் காணியுடன் கூடிய சகலவசதிகளும் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு. இதைவிட 1 பரப்பு காணி, தென்னை, பலா, எலுமிச்சம்மரம் ஆகியவற்றுடன் கூடியவையும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. இரத்தினசிங்கம், 138, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [48458]

## தேவை

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம், [48264]

## திருமண சேவை

சகல மதம், உத்தியோகம், தொழில்சார் மணமக்கள் தேர்வுக்கான நம்பகமான, நேர்மையான சேவை, இலகுவான செயல் முறைகள் ஊடாக வழங்கப்படுகிறது, 'சேவை நம்பகம்' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். [48419]

## திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டுவீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [48263]

## புத்தகப்பிரியர்களே!

உங்கள் வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய பயன்மிகு நூல்களை படித்துப் பயன் பெற விஜயம் செய்யுங்கள் 'லிங்லெண்டிங் லைபிரறி' 41, தபாலக வீதி, சாவகச்சேரி, தொடர்பு: 'லிங்லெண்டிங் லைபிரறி, சாவகச்சேரி. [48401]

## ஆண்டு 6-11

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் விசேட பெறுபேறுடைய எல்லாப் பாடங்களும் வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (48422)

## மரம்

சர்க்கரைவேம்பு. வேம்பு, பலா, கரிசலாங்கண்ணி, அகத்தி, பொன்னாவரசு, யோகாசனப் படம் — மில்க்வைற் சோப் / சலவைத்தூள் வெற்றுறை 10 அல்லது ரூபா 10 ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், இயற்கை தரும் இன்மருந்துகள், குழந்தை வளர்ப்புக்கலை, 'நீமியா' தென்னம்பிள்ளை விற்பனைக்கு உண்டு. 'மில்க்வைற்'. ]சி/1140]

## விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் i, ii 1997 ஆம் ஆண்டுக்கான A/L பரீட்சைக்கமைவான மாதிரி வினா விடைவடிவிலமைந்தது புதிய பதிப்பு:- ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [48450]

## நாடகம்

இந்த நூலை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாடகங்கள் பல ஒவ்வொரு மாதமும் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. அதன் இரகசியம் ரூபா 50 அக்கரைச் சீமையில் ரூபா25 தொடர்பு: No 30, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். (48453)

## பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து இரண்டு பிள்ளைகளை பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். No. 163, பலாலி றோட், கோண்டாவில். [48456]

## தவறிவிட்டது

பொன்னுத்துரை தங்கேஸ்வரனின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, இத்தாலிகுடியுரிமை காட். மற்றும் பேமிற் முதலியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். மொடோன் ஸ்ரோர்ஸ் நெல்லியடி. (48457)

## 'தர்ம சாஸ்தாவே சரணம்'

நம்பிச் சரண் புகுந்த நல்லவர்களைக்
காப்பாற்றும் அனலையம்பதியிலே
வீற்றிருக்கும் கருணையின் உருவே
கருணைக் கடலே பூரணை புட்கலை
நாயகனே மணி கண்டா இன்று
தேர் ஏறி வந்து துன்பத்தில்
துவளும் மக்களின் துயர் தீர்ப்பாயாக.

ஆக்கம்!

**கனகசபை சுந்தரலிங்கம்**
**மணிகண்டன் தரகுசேவை நிலையம்**
**காரைநகர்.**

(48448)

## கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19 தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அபிவிருத்தி நிதிக்காகப் பழைய மாணவர் சங்க ஆதரவில் நடைபெறும் முத்தமிழ் மாலை கலை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 6-30 மணி முதல் வித்தியாலய அரங்கில் நடைபெறும்.


## தாவடி
## ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்



ஸ்ரீ சண்முகப் பெருமான் தேவியாருடன்
ஆடித் திங்கள் 3 ஆம் நாள்
இன்று காலை (சனிக்கிழமை 19 - 07 - 97)
புதிய சித்திரத் தேர் ஏறி பவனிவருவார்.
(வசந்த மண்டப பூசை காலை 9-00 மணிக்கு நடைபெறும்)
**சித்திரத் திருத்தேர் திருப்பணிச்சபை.**
(சி-1150)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**நான்காம் ஆண்டு** — **அறுபதாம் நாள்**



### அமரர் சின்னப்பொடி தர்மலிங்கம்
(புறோக்கர் தருமு)

மண்ணில்; **28-03-1944** — விண்ணில்; **18-08-1993**

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்து,
எங்கள் குடும்பத்தின் குல விளக்காயிருந்து,
எங்களை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
ஈந்துவக்கும் இன்பமதை இயல்பாகக்கொண்டவரே!
மின்னல் போல் மறைந்தீரே! — நான்கு
ஆண்டுகள் சென்றாலும் மாறாது மறையாது
ஒளி வீசும் உங்கள் திருமுகம்.



### செல்வி தர்மலிங்கம் சைமினி
(யா/ பல்கலைக்கழகம் நுண்கலைப் பிரிவு மாணவி — 1997)

மலர்வு: **22-12-1975** — உதிர்வு; **21-05-1997**

இன் முகம் காட்டி இனிக்கப் பேசும் இனியவளே!
உன் கலகலப்பான கதைகள் கேட்காத காலமோ
இரு மாதங்கள்
இள நகை பூத்த இளையவளே!
கல்வியில் திறமை காட்டி வளமாக நீ வாழ்ந்த
வயதோ இருபத்தியிரண்டு
வாழ்க்கைக் கனவுகள் எல்லாம் பாதி வழியில்
போனதேனோ?
நம்பி நின்றாய் நீயே! ஆயின் ஏமாற்றி விட்டான்
கொடிய கூற்றுவன்
அழுது அழுது தீர்த்தாலும் ஆறாது எம் நெஞ்சம்
எத்தனை காலமானாலும் — எம்
நெஞ்சை விட்டகலாது உன் நினைவு.

என்றும் மறக்க முடியாத பாச நினைவுகளுடன் உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**அன்பு மனைவி, அம்மா, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

இமையாணன் [illegible]

(48452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் தாக்குதல்களின் மூலமாக புலிகள் தரப்பு விடுக்கும் செய்தி!

### பாலியல் வல்லுறவு சம்பவங்கள்

வடக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இவ்வாரத்தில் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவங்கள் பாலியல் வல்லுறவு தொடர்பான இரு செய்திகளாகும். இரண்டிலும் பாதுகாப்புப் படையினர் மீதே குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கின்றது,

முதலாவது சம்பவம் கடந்த வாரம் வெள்ளியன்று அராலி தெற்குப் பகுதியில் இடம் பெற்றது.

இளம் மாணவி ஒருவர் வீட்டில் தனித்திருந்த சமயம் மற்றொரு சிப்பாயின் துணையுடன் சென்ற சிப்பாய் ஒருவர், துணையை வெளியே காவலுக்கு இருத்தி விட்டு, வீட்டுக்குள் புகுந்து, மாணவியின் வாய்க்குள் சீலையை அடைந்து விட்டு மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் குறித்து முறைப்பாடு கிடைத்த ஒருசில மணி நேரத்திலேயே சம்பந்தப்பட்ட சிப்பாய், அடையாளங் காணப்பட்டு, பொறுப்பதிகாரியினால் பொது மக்கள் முன்னிலையில் வைத்து நையப்புடைக்கப்பட்டார்.

பின் மேல்விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டிருந்த சிப்பாயை, மேற்படி பாலியல் வல்லுறவுச் சம்பவத்தின் போது வெளியே காவலுக்கு இருந்த சிப்பாயும் கடுமையாகத் தாக்கினாராம்.

பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட சிப்பாய், சம்பந்தப்பட்ட பெண்ணுடன் நட்பு ரீதியில் பழகினார் எனத் தான் நினைத்ததாகவும் —

அவர்கள் வீட்டுக்குள் கதைத்துக் கொண்டிருப்பார்கள் என்று நம்பி தான் வெளியே நின்றிருந்ததாகவும் —

ஆனால் அந்தப் பெண்ணை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியதன் மூலம் தன்னையும் அச்சிப்பாய் சிக்கலில் மாட்டி விட்டு விட்டார் எனவும் —

இந்தச் சிப்பாய் இப்போது கூறுகின்றார்.

முதலாவது குற்றவாளியைச் சிக்கலில் மாட்டி விட்டு விட்டு தான் தப்புவதற்கு இரண்டாவது சிப்பாய் மேற்கொள்ளும் நாடகமாகவும் இது இருக்கலாம்.

எனினும் வழக்குத் தொடர்பாக இருவரும் கைது செய்யப்பட்டு இருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மாணவி கிருஷாந்தி மற்றும் உரும்பிராய் யுவதி ரஜனி ஆகியோர் பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவங்களை அடுத்து தமது பெயர் பெருமளவில் 'ரிப்பேர்' ஆனதால் குழம்பிப் போயிருந்த வடக்கு இராணுவ வட்டாரங்கள், அராலிச்சம்பவத்தில் படு உஷாராகச் செயற்பட்டு பெயரைப் பாதிக்காமல் காப்பாற்றிக் கொள்ள முயன்றன.

அராலிச் சம்பவம் வெள்ளியன்று இடம் பெற்றது.

ஆனால் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக சுயமான செய்திகளை வெளியிடுவதாயின் அதற்குத் தகுந்த ஆதாரங்கள், சாட்சியங்களை வைத்திருக்க வேண்டிய — கட்டாய — நெருக்கடியான — நிலை பத்திரிகைகளுக்கு இருந்தது படையினருக்கு வாய்ப்பாகப் போய் விட்டது.

வெள்ளிக்கிழமை முற்பகல் நடந்த சம்பவம் பற்றிய செய்தி சனியன்றோ அல்லது ஞாயிறன்றோ பத்திரிகைகளில் வெளிவரவில்லை. தகுந்த ஆதாரங்களையும் சாட்சியங்களையும் ஞாயிறன்றே திரட்ட முடிந்ததால் திங்களன்றே அது பற்றிய செய்திகள் பிரசுரமாகின; கொழும்புப் பத்திரிகை நிறுவனங்களுக்கும் உள்ளூர்ப் பத்திரிகையாளர் மூலம் தகவல்கள் எட்டின.

ஆனால் சம்பவம் நடந்த இரண்டாம் நாளே [ஞாயிறன்றே] பத்திரிகைகளுக்கு முந்திக்கொண்டு, இச் சம்பவம் பற்றிய அறிக்கை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல வெளியிட்டு விட்டார்.

பாலியல் வல்லுறவு பற்றிய பத்திரிகைச் செய்தி பிரசுரமான அன்றே அது தொடர்பாக இராணுவத் தரப்பு அறிக்கையும் பிரசுரமாகி விட்டதால் இராணுவத் தரப்பு தன்னைச் சற்று நியாயமானதாகக் காட்டிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுப் போய்விட்டது.

இராணுவத் தரப்பின் அறிக்கையில் அராலிச் சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அத்தகைய ஈனச் செயலில் ஈடுபட்ட சிப்பாய் ஏனைய படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், அந்தச் சிப்பாய்க்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அச் சிப்பாய்க்கு இராணுவத் தரப்பு எந்த வகையிலும் உதவாது என்றும், பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்துக்கு இராணுவம் சகல உதவிகளையும் வழங்கும் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

இராணுவம் 'பரிசுத்தமான' அமைப்பாகவே செயற்பட விரும்புகின்றது என்று கூறும் விதத்தில் அந்த அறிக்கை தயாரிக்கப் பட்டிருந்தது.

மேற்படி பாலியல் வல்லுறவு பற்றிய செய்தி முதல் நாள் தனியாகப் பிரசுரமாகியிருந்திருந்தால் யாழ்ப்பாண மக்கள் கொதித்துப் போயிருந்திருப்பார்கள். அடுத்தநாள் பிரசுரமாகக் கூடிய எந்த இராணுவ அறிக்கையும் குடாநாட்டு மக்களை ஆற்றுப்படுத்தியிருக்க முடியாது. — ஆனால் இரண்டும் ஒரே நாளில் பிரசுரமானதால் மக்களின் மன நிலை கொதிக்க முன்னரே சாந்தப்படுத்தியாகி விட்டது.

அதாவது இத்தகைய நெருக்கடியான செய்திகளைப் பிரசுரிப்பதற்கு — அவற்றுக்கான ஆதாரங்களைத் தேடிக் கையில் எடுப்பதற்கு — பத்திரிகைகளுக்கு ஏற்படும் தாமதம் இராணுவத் தரப்புக்கு பேருதவியாக அமைந்துவிட்டது.

மற்றைய பாலியல் வல்லுறவுச் சம்பவம் பற்றிய விவகாரம் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அலுவலகம் வெளியிட்ட அறிக்கை மூலம் அம்பலத்துக்கு வந்தது.

வல்லையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் குறித்து ஒன்றுக்கொன்று முரணான — குழப்பமான தகவல்களே — வெளியாகியுள்ளன. எதனையும் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.



கிருஷாந்தி விவகாரம் அரசுத் தரப்புக்குள்ளேயே ஆவேச அலைகளை ஏற்படுத்தியது. அச் சம்பவத்துக்கு கொழும்பில் வீதியில் நின்று எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசுத் தரப்பு எம். பியான வாசுதேவ நாணயக்கார.

இந்தப் பத்தி எழுத்தாளருக்கு இராணுவத் தரப்புக் காட்டிய — சட்ட வைத்திய அதிகாரியின் — அறிக்கையில் —

## சமர்க்களம்

அந்தப் பெண்மணி பாலியல் உறவுக்கு உட்படுத்தப் பட்டதற்கான சான்றுகள் இருப்பதாகவும், ஆனால் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டதற்கான சான்றுகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் அப்பெண் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவே சாதிக்கின்றார்.

இதிலிருந்து ஒரு விடயம் தெரியவருகின்றது. அது என்னவென்றால்—

யாரேனும் பெண், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படும் சமயத்தில் அச்சத்தினால் — பீதியினால் — மயக்கத்தினால் கூட அடங்கிப்போய் விடக்கூடாது. பின்னர் குற்றவாளியின் குற்றத்தை நிரூபிப்பதற்காக கடுமையாக எதிர்த்துப் போராடி, காயங்களை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும். இப்படி சட்டம் எதிர்பார்க்கின்றது.

### ஜெனரல் பலகல்ல நடத்திய மாநாடு

இந்தச் சம்பவங்களுக்கு இடையில் கடந்த செவ்வாயன்று யாழ்ப்பாணத்திலும், தீவகப்பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள 512 பிரிகேட் மற்றும் 514 பிரிகேட்டுகளையும் சேர்ந்த படை அதிகாரிகளை யாழ்ப்பாணம் ஞானம் ஹோட்டலில் உள்ள 512 பிரிகேட்டின் தலைமையகத்திற்கு அழைத்து 51ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல மாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்த மாநாட்டில் பெரும்பாலும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது குறித்தே ஜெனரல் பலகல்ல பிரஸ்தாபித்ததாகத் தெரிகின்றது

படையினரால் அடிப்படை மனிதஉரிமைகள் மீறப்படுவது குறித்து மனித உரிமைகள் அமைப்புகள் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு பார்த்திருப்பதாகவும்—

அத்தகைய அவப் பெயர் அரசின் முழு இராணுவ நடவடிக்கை வெற்றிகளையும் தகர்த்து விடும் எனவும்—

எனவே குடாநாட்டில் தமது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பிரிகேட்டுக்கள் மற்றும் பட்டாலியன்களில் அவ்வப் பகுதியில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பான அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக தனித்தனி மனித உரிமை விசாரணைப் பிரிவுகளைத் தான் நியமிக்கப் போவதாகவும்—

ஜெனரல் பலகல்ல குறிப்பிட்டதாக இராணுவ அதிகாரிகள் மட்டத்திலிருந்துதெரிய வந்தது.

யாழ்.நகரப் பகுதியில் சந்திக்குச் சந்தி தடை நிலையங்களை அமைத்து மக்களை தொல்லைப்படுத்துவதால் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் இடைவெளி அதிகரித்து வருவதாகவும்—

எனவே நகரப்பகுதியில் உள்ள தடை நிலையங்கள் பலவற்றை மூடிவிடும் படியும்—

ஜெனரல் பலகல்ல உத்தர விட்டார்.

அவ்வாறு மூடுவது நகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என சில அதிகாரிகள் மாநாட்டில் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

ஆனால் மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கும், குடாநாட்டில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் இது அவசியமானது என்பதால் — ஓரேநாளில் இல்லாவிட்டாலும் —கொஞ்சம் கொஞ்சமாகத் தடை நிலையங்களைக் குறைக்கும்படி படையணித் தளபதி உத்தரவிட்டார்.

### உதயன் - சஞ்சீவி கண்காணிப்பில்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் — சஞ்சீவி பத்திரிகைகள் தொடர்பாக படை வட்டாரங்கள் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

பத்திரிகையின் இராணுவ, போர்ச் செய்திகளுக்குப் பொறுப்பான ஆசிரிய பீட அலுவலருக்கு இது தொடர்பாக முக்கியக் கடிதம் ஒன்றும் இராணுவ உயர் பீடத்தால் அனுப்பப்பட்டிருக்கின்றது.

## பாசுபதன்

''யாழ்ப்பாணத்தில் இயங்கும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடன் பல தடவைகள் நீங்கள் தொடர்பு வைத்துள்ளீர்கள் என்பது தொடர்பாக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் இந்த விடயம் குறித்து இதுவரை இராணுவத்துக்கோ பொலீஸுக்கோ நீங்கள் தகவல் ஏதும் தரவில்லை.

''தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக தங்களுக்குத் தெரிந்த தகவல்களைத் தராமல் இருப்பது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமாதலால், புலிகள் தொடர்பான தகவல்களைத் தராமல் இருப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளும்படி இத்தால் உங்களுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் தற்போது வசிக்கும் பொறுப்புள்ள ஒரு பிரஜை என்ற முறையில் இந்த ஆலோசனையை கருத்தில் எடுத்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.''

— இவ்வாறு உதயன் — சஞ்சீவி நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்துக்குப் பொறுப்பான 51 ஆவது படையணியின் கட்டளைப் பீடத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

### கடற்பாதையும் தடுப்பும்

வடக்கு, கிழக்கு கடற்பாதையில் போக்குவரத்துக்குத் தடை விதிக்கும் நோக்கம் தங்களுக்கு உள்ளது என்ற தொனிப்பட விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகம் இவ்வார முற்பகுதியில் வெளியிட்ட அறிக்கையுடன் —

வடக்கு — கிழக்கு இனப் போர் இந்தக் கறுப்பு ஜூலை மாதத்தில் புதிய திருப்பத்தை எடுத்திருக்கின்றது.

வடக்கு — கிழக்கு கடற்பகுதியில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற மூன்றாவது கப்பல் தாக்குதல் சம்பவமே வட கொரிய கப்பலான 'மொராங் பொங்'கடத்தப்பட்ட போது நிகழ்ந்தது.

கடந்த மே 29 ஆம் திகதி, திருகோணமலை துறைமுகத்துக்கு வெளியே பிற்குடாவில் (Back Bay) பத்து நாள்களாக நங்கூரமிட்டுக் காத்து நின்ற கிரேக்க சரக்குக் கப்பலான 'ஏதேனா' இனந்தெரியாத கடற்கண்ணி ஒன்றில் சிக்கி சேதமடைந்தது.

அப்போது இக்கப்பல் சேதமடைந்தது குறித்துப் பெரிதும் அலட்டிக் கொள்ளப்படவில்லை.

சுமார் அறுபது கோடி ரூபா பெறுமதியுடைய — 42 ஆயிரம் தொன் நிறையுடைய — கோதுமையுடன், பிரிமா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரடி அரங்கு

யாழ்ப்பாணத்துக்கு என அனுப்பப்பட்ட ஒரு தொகுதி புதிய பஸ்களில் ஐந்து இன்னும் யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரவில்லையாம்.

இந்த பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு விட்டன என்கின்றன சம்பந்தப்பட்ட கொழும்பு வட்டாரங்கள்.

ஆனால் வந்து சேரவில்லை என்கின்றன வட பிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள்.

ஐந்து — பாரிய — புத்தம் புதிய பஸ்களுக்கு இடைவழியில் என்ன கதி நேர்ந்தது? வழி நடுவில் கபளீகரம் செய்த 'அதிகாரத்தார்' யாரோ?

பஸ் விழுங்கி பகாசுரன்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள் போலும்.

★ ★ ★

'ராகிங்'கால் ஏற்பட்ட சோக நிலை இது.

பல்கலைக்கழகங்களுக்குப்புதிதாகஅனுமதி பெறும் மாணவர்களுக்கு,ஆங்கிலம் போதிப்பதற்கான 'கெல்ற்' வகுப்புகள் குடாநாட்டில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள நான்கு நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

பல்கலைக்கழகத்துக்குப் புகும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு அவசியமானது. அதற்காகவே பல்கலைக்கழகத்துக்குள் புகுமுன்னர் — பல்கலைக்கழகக் கல்விப் போதனை ஆரம்பிக்க முன்னர் — வெளியேயுள்ள நிலையங்களில் வைத்தே அந்த மாணவர்களுக்கு விசேடமாக இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆனால் பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முன்னரே — இந்த வகுப்புக்கு வரும் மாணவ, மாணவிகள் சிரேஷ்ட மாணவர்களின் துஷ்ட ராகிங்கிற்கு ஆளாக்கப்படுவதால், இந்த வகுப்புகளுக்கு வரும் மாணவர்களின் தொகை எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு வீழ்ச்சி கண்டு விட்டது என மனம் புழுங்குகின்றார் இப்போதனைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர்.

நான்கு நிலையங்களில் இந்த வகுப்பு நடந்தாலும் ஒரு நிலையத்தில் கல்வி பயிலும் மாணவரின் பெற்றோரும், ஊரவர்களும் சேர்ந்து இந்த 'ராகிங்' கோணங்கிகளை ஒரு கை பார்த்ததாகவும் —

அதன்பின்னர் கோணங்கிகள் ஓடி மறைந்து விட்டதாகவும் —

இப்போது அந்தப் பக்கம் அவர்கள் தலை காட்டுவதில்லை எனவும் — ஒரு தகவல்.

ராகிங்கிற்கு பயந்து — கல்வி போதனை பெறுவதற்கான அடிப்படை உரிமையைக் கோட்டை விட்டு — பிள்ளைகளை 'கெல்ற்' வகுப்புக்கு அனுப்பாமல் வீட்டில் மறித்து வைக்கும் பெற்றோர் மேற்படி ஒரு நிலையத்தில் உள்ள பெற்றோரின் முன்மாதிரியைப் பின்பற்றலாமே? 'ராகிங்' கோணங்கிகளை ஓட ஓட விரட்டி, உரிமையை எப்போது நிலை நாட்டப் போகின்றீர்கள்?

★ ★ ★

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை ஒன்று குடாநாட்டுப் பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலை ஒன்றில் புதன், வியாழக் கிழமைகளில் நடந்த விஞ்ஞானப் பிரிவுப் பரீட்சைக்கு மாணவர்கள் கூண்டோடு 'மிஸ்ஸிங்'.

பரீட்சை பற்றிய அறிவித்தலோ, நேர அட்டவணையோ நேர காலத்துடன் வழங்காமல், இறுதி நேரத்தில் வழங்கப்பட்டதால் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை என்கின்றது மாணவர் தரப்பு.

குடா நாட்டின் ஏனைய பாடசாலை மாணவர்கள் எல்லோரும் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார்களே! இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் பரீட்சை அறிவித்தல், நேர அட்டவணை எல்லாம் தாமதமாகக் கிடைத்தனவோ? அந்த மகேஸ்வரனுக்குத் தான் வெளிச்சம்.

★ ★ ★

'லயன் எயர்' நிறுவனத்தின் பலாலி — இரத்மலானை பயணிகள் விமான சேவை கடந்த ஒரு வார காலமாக இடம் பெறவில்லை.

இதற்கான காரணங்கள் குறித்துப் பொது மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள்.

'லயன் எயர்' நிறுவனம் பயணிகள் விமான சேவைக்கு அப்பால், படையினருக்கான விமான சேவையிலும் முழு மூச்சாக ஈடுபட்டு வந்தது. அத்தகைய சேவைக்கான கட்டணமாக சுமார் பத்துக் கோடி ரூபாவுக்கும் கூடுதலான தொகை அரசுத் தரப்பால் சம்பந்தப்பட்ட விமான சேவை நிறுவனத்துக்குக் கட்டப்படாமல் நிலுவையாக உள்ளதாம். இதனால் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பெரும் நிதிப்பற்றாக்குறையை அந்த நிறுவனம் எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் அந்த நிதி முற்றாகச் செலுத்தப்படும் வரை விமான சேவையை அந்நிறுவனம் இடைநிறுத்தியதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புடைய ஒருவர் தெரிவித்தார்.

அந்த நிலுவை செலுத்தப்பட்டதும் பயணிகள் சேவை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம் என்றும் அந்த எம். பி. குறிப்பிட்டார்.

★ ★ ★

யாழ்ப்பாணத்து வீதிகளின் கேவல நிலை குறித்து எரிச்சல்படாத யாழ். வாசிகளே இருக்கமாட்டார்கள் என்று கூறலாம்.

உயர் படை அதிகாரிகள் பயணம் செய்யும் பலாலி வீதி போன்றவை ஒழுங்காக உள்ளன; ஏனைய வீதிகளின் கதி அதோ கதி தான்!

இப்போது இரண்டாயிரம் பரல் தார் கப்பலில் வந்திருப்பதாகத் தகவல்.

யாழ். வீதிகள் திருந்துமா? குண்டு குழியில் விழுந்து எழும்பும் அவல நிலை நீங்குமா?

-மின்னல்

# கப்பல் தாக்குதல்களின்....

(3ஆம் பக்கத் தொடர்)

ஆலையின் இறங்குதுறைக்குச் செல்வதற்காக இந்தப்பாரிய கப்பல் காத்து நின்ற போது அதன் அடித்தளப் பகுதியில் குண்டு வெடித்தது.

ஆனால் அதன் பின்னர் பேசாலைக் கடலில் 'மிஷன்' பயணிகள் கப்பல் எரிக்கப் பட்டதையும் —

வடபகுதிக்குபொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 'மொராங்பொங்' சரக்குக் கப்பல் சுண்டிக்குளம் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டதையும் அடுத்து —

'ஏதேனா' கப்பலையும் புலிகளே தாக்கியிருப்பார்கள் என்ற வலுவான சந்தேகம் படை வட்டாரங்களில் உருவாகியிருக்கின்றது.

தாக்குதலுக்கு உள்ளான 'ஏதேனா' கப்பலின் இயந்திர அறை பலத்த சேதமடைந்துள்ளது.

எனினும் இக்கப்பலில் இருந்த கோதுமைத் தானியம் இறக்கப்பட்ட பின்னர், இன்னொரு கப்பலால் இக்கப்பல் கட்டி இழுக்கப்பட்டு தற்போது சிங்கப்பூருக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. அங்கு இக்கப்பல் திருத்தப்படும் எனத் தெரிகின்றது.

இக்கப்பல் தாக்கப்பட்டதை அடுத்து, திருகோணமலைத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களை, துறைமுகத்தினுள் இடம் கிடைக்கும் வரை துறைமுகத்துக்கு வெளியே உள்ள கடற்பகுதியில் காத்துநிற்க வேண்டாம் என உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இடம் கிடைக்கும் வரை காலித் துறைமுகத்துக்கு வெளியேயுள்ள கடற்பகுதியில் காத்து நிற்கும் படியும் —

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து தகவல் கிடைத்ததும் காலியிலிருந்து புறப்பட்டு நேரடியாகத் திருகோணமலைத் துறைமுகத்துக்குள் செல்லும் படியும் —

உத்தரவிடப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

கடற்படைக் கப்பல்கள் அல்லது வர்த்தக, பயணிகள் கப்பல்கள் மீது கடற்புலிகள் நேரடித் தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே இலங்கைக் கடற் பகுதியில் சேவையிலீடுபடும் இத்தகைய கப்பல்களுக்குக் காப்புறுதிப் பணமாக அதிக தொகையை காப்புறுதி நிறுவனங்கள் அறவிட்டு வந்தன. இலங்கைக் கடற்பகுதியில் சேவையில் ஈடுபடுவது அதிக ஆபத்தானது என அந் நிறுவனங்கள் அப்போது காரணம் கூறி வந்தன.

ஆனால் இப்போது இக்கப்பல்கள் மீது நேரடித் தாக்குதல்கள் நிகழ்ந்துவிட்டதால் காப்புறுதிக் கட்டணமும் மேலும் பல மடங்கு அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கலாம். அச் செலவுகளைக் கப்பல் கம்பனிகள் ஸ்ரீலங்கா அரசின் மீதும் மக்களின் மீதும்தான் சுமத்தப் போகின்றன.

அதாவது தற்போதைய நிலையில் வடக்கு—கிழக்குக்கான கப்பல்சேவைக் கட்டணம் கணிசமான அளவில் உயரும் என எதிர்பார்க்கலாம்.

சரி. இந்த சேவைகள் எப்போது ஆரம்பமாகப்போகின்றன? இதுதான் குடாநாட்டுமக்கள் மத்தியில் இன்று கிளப்பப்படும் வினா.

கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மூலம் அரசுக்கும் படைகளுக்கும் புலிகள் ஒரு செய்தியை அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

வடக்குக் கிழக்குக் கடலில் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் சேவைகளை இனி [illegible] முடியாது என்பதுதான் அது.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசுக்கு மூன்று வழிகள்தான் உள்ளன.

1. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அல்லது அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் உதவியுடன் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல்கள் சேவைகளை திருகோணமலை — காங்கேசன்துறை (இல்லையேல் பருத்தித்துறை) —மன்னார் ஆகியவற்றுக்கு இடையில் நடத்துவது.

2. அல்லது இச்சேவைகளை கடற்படைப் பாதுகாப்புடன் தனித்து நடத்துவது.

3. இல்லையேல் வடக்கிற்கான தரைவழிப் பாதையை உடனடியாகத் திறப்பது.

முதலாவது விடயம் செஞ்சிலுவை அல்லது அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன்கப்பல்சேவையை நடத்துவதாகும். இதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளன.

குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிற்பகுதியில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த— பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவே பாதுகாப்பு வழங்கிவந்தது.

அதே நடைமுறையை இப்போதும் பின்பற்ற வேண்டியிருக்கும். எனினும் அதிலும் சில சிக்கல்கள் உள்ளன.

செஞ்சிலுவைப் பாதுகாப்பு வழங்குவதாயின் வடக்குக் கிழக்கில் பணியாற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் ஆளணி எண்ணிக்கை கணிசமான மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கான ஆயத்த நிலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

பயணிகள் மற்றும் பொது மக்களுக்கான பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு மட்டுமே செஞ்சிலுவைப் பாதுகாப்புக் கிடைக்கும்.

இதனால் படையினருக்கான பொருள்களை அல்லது துருப்புக்களை ஏற்றி வரும் கப்பல்களை தனித்து—இலகுவாக—அடையாளம் காண வழி ஏற்படும். இதை படைத்தரப்பு விரும்புமா என்பது தெரியவில்லை.

அத்தோடு தாம் கைப்பற்றிய குடாநாட்டுக்குபொருள்களை அனுப்ப செஞ்சிலுவைப் பாதுகாப்பைக் கோர வேண்டிய இக்கட்டான நிலையிலேயே அரசுப்படைகள் உள்ளன என்ற நிலையும், யுத்த அரங்கத்தில் —சர்வதேச மட்டத்தில் படைத்தரப்பின் ''இமேஜை', பெரிதும் பாதிப்பதாக அமைந்துவிடும்.

என்றாலும்செஞ்சிலுவைப் பாதுகாப்புடன் கப்பல்களை வடக்கே அனுப்புவதற்கான திட்டம் குறித்து ஆரம்ப மட்டத்தில் கொழும்பில் ஏற்பாடுகள் நடைபெற்றதாகத் தெரிகின்றது.

ஆனால் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் விடயத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஈடுபடுவதற்கு வாய்ப்பில்லை என ஒரு சில கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் பங்கு, பணி, கடமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும்—

அதன் ஆளணி கட்டமைப்பின் பிரகாரமும்—

இதற்கு வாய்ப்புகள் இல்லை என்கின்றன அந்த வட்டாரங்கள். வடக்கிற்கான கப்பல் சேவையைக் கடற்படைப் பாதுகாப்புடன் நடத்துவது அடுத்த விவகாரம்.

ஆனால் வடக்கே வந்து திரும்பும் பயணிகளின் எண்ணிக்கை, வடக்கே அனுப்பப் படவேண்டிய பொருள்களின் அளவு, அதற்குத் தேவையான கப்பல்கள்ஆகியவற்றை கணித்துப் பார்க்கும் போது இக்கப்பல்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கும்படி கடற்படையைக் கோருவது 'குருவி தலையில் பனம்பழம் வைப்பது போலவே' இருக்கும்.

ஸ்ரீலங்கா கடற்படையின் ஆளணி அளவு, அது தற்போது ஆற்றும் பணிகள் ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் இது இயலாத காரியம் என்பது புரியும்.

என்றாலும் கடற்படை தன்னால் இப்பணி இயலாது என்று கூற விரும்பாமல் புது வழி ஒன்றைப் பிரேரிக்கின்றது.

சேவையில் ஈடுபடும் கப்பல்கள் தரையிலிருந்து முப்பது மைல்களுக்கு அப்பால் பயணஞ் செய்ய இணங்கினால் கடற்படைப் பாதுகாப்பு வழங்கலாம் என்பதே அந்தத் திட்டம்.

அதாவது —

சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு கப்பலுக்கும் அருகில் சென்று தனித்தனியாகப் பாதுகாப்புக் கொடுக்காமல் ஆழ்கடலில் பல மைல் இடைவெளித் தூரங்களில் ஆங்காங்கே தள்ளித் தள்ளி சில பீரங்கிப் படகுகள் மற்றும் கட்டளைக் கப்பல்களை நிறுத்துவதன் மூலம் கடற்பாதைக்கு பாதுகாப்புக் கொடுக்கலாம் எனக் கடற்படை எண்ணுகின்றது.

கரையிலிருந்து இவ்வளவு தூரம் ஆழ்கடலுக்கு வந்து கப்பல்களுக்குக் குழப்பம் எதையும் விளைவிக்க கடற்புலிகள் முயன்றாலும் அவர்கள் அப்படிக் கப்பல்களை நெருங்க முதல் அல்லது மீண்டும் அவ்வளவு தூரம் அவர்கள் தப்பிக் கரைக்குச் செல்லுமுன்னர் மடக்கி விடலாம் எனக் கடற்படை கருதுகின்றது போலும்.

இத்திட்டம் பயனளிக்குமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இனிமேல் கடல் வழிப் பாதை பெரிய அலுப்புத் தருவதாக இருக்கப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம்.

தரைவழிப் பாதையைத் திறப்பது தற்போதைய இக்கட்டு நிலையைச் சமாளிப்பதற்கு மூன்றாவது வழியாகும். ஆனால் அதற்கு இப்போதைக்குச் சாத்தியம் இல்லை என்பது தெளிவு.

வன்னிச் சமர்க்களம் உணர்த்தும் பாடம் அது தான்.

கடல் வழிப்பாதை இடுக்கண் இன்றி போக்குவரத்துக்கு உரியதாய் இருந்த போது தரை வழிப் பாதையைத் திறக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த முயற்சியும் தடைப்பட்டு கடல் வழிப் பாதையும் தடைப்பட்டிருக்கும் இந்நிலையைப் பார்க்கும்போது 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்பது போல நிலைமை' என முச்சந்தி முரளி கூறுவது சரி போலவே தெரிகின்றது.

## மெய்வன்மைப் போட்டி ஒத்திவைப்பு ஏன்?

திருகோணமலையில் நடைபெற ஏற்பாடாகியிருந்த வடக்கு— கிழக்கு மாகாணத்தின் கல்வி வலயங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், வவுனியாவுக்கு இடம் மாற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது இப்போட்டிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் ஒன்று கூறுகின்றது.

காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டிருப்பது உண்மையானால் —

வடக்கு — கிழக்கில் தகுதி உள்ள மெய்வல்லுநர்கள் — மாகாணங்களுக்கு இடையிலான — அகில இலங்கை மெய் வன்மைப் போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலையே ஏற்படும்.

அது ஒருபுறமிருக்க, இப்போட்டிகள் திருகோணமலையிலிருந்து இடம் மாற்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 17 — 01 — 1928



இறப்பு: 19 — 07 — 1995

## திருமதி அமலோற்பவம் அருளானந்தம்

எமது அன்பு அன்னையை அன்புடன் நினைவுகூருகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்.**


அருளானந்த பவனம்,
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(48460)

# முதலாம் ஆண்டு நினைவு கூரல்

பிறப்பு:
28 - 10 - 1931

இளைப்பாறுதலுக்குள்:
06 - 07 - 1996



## தம்பு இராமலிங்கம்

(முன்னாள் A. G. A. மன்னார்)

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எங்கள் துயர் — ஆயினும்
கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களால்
தேற்றப்படுகின்றோம் நாம் இங்கு.

''We Give thanks to God
always For you'' Col. 1:3

உங்கள் நினைவில் வாழும்:
**குடும்பத்தினர்**

58, கலைமகள் வீதி,
அரியாலை.

(48454]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

1924 — 08 — 24



1996 — 07 — 29

## அமரர் ஆறுமுகம் விஜயரத்தினம்

(இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி)

**திதி: சதுர்த்தசி 1997 - 07 - 19**

ஆண்டொன்று சென்றாலும் ஆறுமோ -எம்துயர்?
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! நீங்கள்
ஓடி மறைந்ததும் விதிதானோ?
தன்குடும்பம் மட்டும் அன்று, தான்; வாழ்ந்த
சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்கா
உங்கள் நுண்மான்புகழ் கண்டு பல்கலைக்கழக
கல்விமான்களே வியந்தனரே.

தங்கள் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

வி. கனகராசா (ஆசிரியர்)
எழுதுமட்டுவாள்.

(48375)

## கப்பல்...

(நாலாம் பக்கத் தொடர்)

றம் செய்யப்பட்டதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ஆனால் போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு வந்த அநாமதேய மிரட்டல்களே அதற்கு முக்கிய காரணம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை, பிரபல பாடசாலைகளின் இரு அதிபர்கள் உட்பட பலர் உயிரிழக்கவும் பலர் காயமடையவும் காரணமான துக்கச் சம்பவம் இடம்பெற்று சில நாள்களுக்குள் இத்தகைய ஆடம்பர மெய்வன்மைப் போட்டியை நகரில் நடத்தலாமா என்ற சர்ச்சை ஏற்கனவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் மிரட்டல் தொலைபேசி அழைப்புக்களும் சேர்ந்து கொள்ள, மெய்வன்மைப்போட்டி இடம் மாற்றப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

தங்கத்துரை படுகொலையின் பின்னர், மிரட்டல் அழைப்புகளுக்கு 'வெயிட்' அதிகம் கொடுக்கின்றார்களாம் அதிகாரிகள்.

## நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஊரடங்கு தளர்வு?

ஈழத் தமிழ் மக்களின் முக்கிய ஸ்தலங்களில் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றது.

''உற்சவத்தை ஒட்டி யாழ். நகரில் ஊரடங்கு தளர்த்தப்படுமா?''

படையின் உயரதிகாரி ஒருவரிடம் இக்கேள்வி கேட்கப்பட்டது.

''மக்களிடமிருந்து அத்தகைய கோரிக்கை ஒன்று முன்வைக்கப்படுமானால் சாதகமாக அது பரிசீலிக்கப்படும். திருவிழா நாள்கள் முழுவதும் இவ்வாறு ஊரடங்கைத் தளர்த்த முடியாவிட்டாலும் முக்கிய திருவிழா நாள்களிலேனும் ஊரடங்கைத் தளர்த்தலாம்'' — என்று பதிலளித்தார் அந்த மூத்த அதிகாரி.

கடந்த தடவை தேர்த் திருவிழா சமயம் இரண்டாயிரம் பக்தர்களே கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவர் என்ற குழறுபடி அறிவிப்பு ஒன்று வந்ததும் —

அதனால் பக்தர் மத்தியில் ஏற்பட்ட குழப்பங்களும் தெரிந்தவையே.

இம்முறை அப்படி நேராமல் பார்த்துக் கொள்வது அதிகாரிகளின் கைகளில் தங்கியுள்ளது.


விற்பனையாகின்றன

**புவியியல் A\L**

கலாநிதி
க. குணராசா

★ சூழலியல்
★ மானிடப் புவியியல்
★ சுற்றாடற் புவியியல்
★ புள்ளி விவரப்-பட வரை கலை
★ எறியங்கள்
★ இட விளக்கவியற் படங்கள்

**கமலம் பதிப்பகம்**

82, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(48465)



**நான்**

உளவியல் மஞ்சரி
ஏப்ரல்-ஜூன் மாத இதழ்
வெளிவந்து விட்டது.

தென்மராட்சி, வடமராட்சி, யாழ். நகரில்
உள்ள புத்தகக் கடைகளில்
[illegible]

(48421)


## போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன

பி. ஜெ. பர்னான்டோ ஸ்தாபனத்தின் ஆதரவில் யாழ். கல்வித்திணைக்கள வலயம் 1 இன் நலன்புரிக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்றையதினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது. இன்றும் நாளையும் தொடர்ந்து போட்டிகள் நடைபெறும்.

**விளையாட்டுச் செயலாளர்**
**நலன்புரிக்கழகம்**
**யாழ். கல்வி வலயம் 1**

(48477)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி செல்லத்துரை

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை 17 - 07 - 1997 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், இரத்தினேஸ்வரி (ஆசிரியை, முல்/அம்பலவன் பொக்கணை கனிஷ்ட உயர்தர வித்தியாசாலை), இராஜேஸ்வரி, சிவேஸ்வரி, கணேசமூர்த்தி (ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), விமலச் சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18 - 07 - 1997 அன்று அச்சுவேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**செ. கணேசமூர்த்தி**
(மகன்)

பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி.

(48472)

## திருமதி தையல்நாயகி கதிரவேலு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ். 3 ஆம் குறுக்குத்தெருவில் வசித்தவருமான திருமதி தையல்நாயகி கதிரவேலு 17-7-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சட்டத்தரணி ப. கதிரவேலுவின் பாசமிகு மனைவியும், செங்ககுமாரன் (பொறியியலாளர், லண்டன்), கலாநிதி சிவகுமாரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20-7-97) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பில் கனத்தை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நா. சிவபாதசுந்தரம்**
1,(148), 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி:
16, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை.

(48471)

## திருமதி மாரிமுத்து நமசிவாயம்

அராலி தெற்கை வசிப்பிடமாகவும், திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து நமசிவாயம் 18-07-97 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் அராலி தெற்கு விஸ்வப் பிரம்மகுலத் தோன்றல் அமரர் அம்பலவாணர் நமசிவாயம் (சின்னத்துரை) ஆச்சாரியார் அவர்களின் அன்பு மனைவியும், வைரமுத்து அவர்களின் அன்புத் தாயாரும், நாகரத்தினத்தின் அன்பு மாமியாரும், இரத்தினகுமார் (லண்டன்), புனிதவதி (கனடா), கௌசல்யா (லண்டன்), கலாவதி (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), கருணசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுதிஸ்ரன், சாம்பவி, பிரணவன், கபிலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், அமரர் கந்தையா மற்றும் சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி நாகேஸ்வரி இராஜதுரையின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19-07-97 பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**ந. வைரமுத்து** (அத்தான்)
(மகன்)

காளிகோயிலடி,
திருநெல்வேலி.

(48475)

## சின்னத்தம்பி முத்துத்தம்பி

(Retird Office Assitant & Accountant,
Jaffna Municipality)

சி, முத்துத்தம்பி 18-07-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயம்மாவின் கணவரும், சாவித்திரிதேவியின் அன்புத்தந்தையும், க. கணேசலிங்கத்தின் (உப அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) மாமனாரும், ஈஸ்வரப் பிரியா, கிரீஷன் கீர்வாணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை (19 -07 - 97) 11 Hamersplace, Wellawatte யில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**க. கணேசலிங்கம்**
(மருமகன்)

83, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்,

(48466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் தியாகராஜா

கொழும்புத்துறை கணக்கர் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் தியாகராஜா 16-07-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் விமலாதேவியின் (ரஞ்சிதம்) அன்புக் கணவரும். காலஞ்சென்ற பாஸ்கரன், பவகரன் (கனடா), ரூபாதேவி (கனடா), கலாமதி (வவுனியா), ரூபினி (கனடா), ரஜனி (ஜேர்மனி), தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி (கனடா), இளங்குமரன் (கனடா), டிலீப்குமார் (வவுனியா), ரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந்தா, அமினா, பிரவீன், பிரசன்னா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், நடராசா, (லெபனான்) இராஜலட்சுமி ஞானசம்பந்தர் (J.M.P.C.S.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 19-07-97 கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல் :
**தி. விமலாதேவி (ரஞ்சிதம்)**
(மனைவி)

கணக்கர் சந்தி,
கொழும்புத்துறை,
சுண்டுக்குழி.

(சி/1152)

## திருமதி இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியை)

துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி 17-07-97 வியாழனன்று காலமானார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியர் வை. கனகசபாபதியின் அன்பு மனைவியும்,ஸ்ரீ சுதர்சன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா], குமணன் [பொறியியலாளர் - ஆஸ்திரேலியா], சசிகரன் [பட வரைஞர், பிரான்ஸ்], தர்மதா ஆகியோரின் அன்புத் தாயாரும். கலாநிதி (ஆஸ்திரேலியா), உமா (ஆஸ்திரேலியா), நளினி(பிரான்ஸ்), காமேஷன் [விரிவுரையாளர் – விவசாயக் கல்லூரி, வவுனியா] ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆறுமுகம் [பேராசிரியர்-யாழ். பல்கலைக்கழகம்), காராளசிங்கம் [இளைப்பாறிய தபாலதிபர், கல்முனை], தெய்வசோதி திரவியம், தெய்வநாயகி [ஆசிரியை,ஞானசாரியர் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆதவன், சங்கவி, வாஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்;-
**வை. கனகசபாபதி**
[கணவர்]

43/9, மணல்தரை,
கந்தர்மடம்.

[48455]

## பொன்னுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் — உரும்பிராய் கிழக்கு)

பொன்னுப்பிள்ளை வேலாயுதபிள்ளை 18-07-97 வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் முன்பு கண்டி அம்பிட்டியாவிலும் தற்போது உரும்பிராய் கிழக்கிலும் வசித்தவராவார். இவர் காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி அம்பிகா அருட்பிரகாசம், திரு. இராஜேந்திரம் (இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பிரகாசத்தின் (உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்) அன்பு மாமனாரும், அருட்குமார் (கனடா), ஜெயதீபன் (யாழ். பல்கலைக்கழகம்), பிரதீபன் (கொழும்பு), திருமதி அருட்குமார் சிவானந்தி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
**த. குகலிங்கம்** (பேரன்)
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(48466)

## நடராஜா சிவ்ராஜா

(ஓய்வுபெற்ற உப அதிபர், நடேஸ்வராக் கல்லூரி)

14-07-97 இல் காலமான நடராஜா சிவராஜா அவர்களின் மரணச் சடங்குகள் 20-7-97 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவர் திருமதி சத்தியவதி (அதிபர், யா/தாவடி இ. த. க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ஜயந்தன் (3 ஆம் ஆண்டு மாணவன் விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அருந்ததி செல்வராசர், ந. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய பொது முகாமையாளர், யாழ்/ வட பிராந்திய போக்குவரத்துச் சபை) ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரரும் ஆவார்.

அன்றைய தினம் (20 - 07 - 97) அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
**ந.சிவசுப்பிரமணியம்,**
(இளைப்பாறிய பொது முகாமையாளர்,
யாழ். வடபிராந்திய பேரக்குவரத்துக் சபை)
**செ. சூரியகுமாரன்**
(மருமகன்)

ஆராச்சியார் வளவு,
விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(47338)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் ''நாட்டின் இன்றைய காலசூழலில் சைவசமயிகளின் பங்கு'' என்னும் பொருளிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா ''சைவ நிறுவனங்களின் பங்கு'' பற்றியும், இரா. செல்வவடிவேல் ''இந்து இளைஞர்களின் பங்கு'' பற்றியும், பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் 'சைவ ஆலயங்களின் பங்கு' பற்றியும், க. சிவராமலிங்கம் ''சைவப் பெருமக்களின் பங்கு'' பற்றியும் கருத்துரை வழங்குவார்கள். (இ)

# ஹொக்கி போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு (புதிய நேரம்) பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும். நாளையும் ஆட்டங்கள் நடைபெறும்.

இன்று முதலாவது ஆட்டத்தில் பல்கலைக்கழக நீல அணியை எதிர்த்து உதயன் வி. க. அணி மோதும். (உ)

# செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

பேசாலையில் வைத்து ''மிசென்'' பயணிகள் கப்பலும், வெற்றிலைக்கேணிக் கடலில் வைத்து வட கொரியக் கப்பலான ''மொறாங் பொங்''கும் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து வடபகுதிக்கான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

வடக்குக்கான கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குப் போதுமான வளங்கள் கடற் படையினரிடம் இல்லாததை அடுத்தே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை அரசாங்கம் நாடி இருந்தது.

தற்போது மல்லாவியில் நடைபெறும் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமானால் திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் —

மன்னாருக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மற்றும் வடக்குக்கான சரக்குக் கப்பல் சேவை ஆகியவற்றுக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும்— வழித்துணை வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(இ-3-150)


## பாலர் ஆசிரியராக...

மேற்படி பயிற்சி பெற க. பொ. த. (சா/த) தகைமையுடையோரும், மேல்தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறு மாதத்தில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,


# சமய சந்நிதிகளில்

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயிலின் ஈசுர வருட மகோற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று காலை தேர்த்திருவிழா நடைபெறும். சண்முகப் பெருமான் வள்ளி, தேவசேனா சமேதராய்ப் புதிய சித்திரத்தேரில் திருவீதி பவனி வருவார். (ஐ-5)

★ ★ ★

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர், பருத்தித்துறை சிவன், நல்லூர் சிவன், உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாள் ஆகிய ஆலயங்களில் இன்று பூரணை தின விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

★ ★ ★

எழுதுமட்டுவாள் விழுபளை ஸ்ரீ கண்ணகை என அழைக்கப்படும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன்- ஐயனார் ஆலயத்தில் வருடாந்த எட்டாம் மடையும், பொங்கலும் இன்று முற்பகல் 10. 30 மணிமுதல் நடைபெறவுள்ளன. ஐ-30)

# ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்)

24 மணி நேரத்தில் ஜனாதிபதி வெளிநாடு சென்றதன் நோக்கம் என்ன என்று கேட்கப்பட்டது.

இரு அமைச்சர்களும் ஜனாதிபதியின் விஜயம் குறித்த விவரங்களைத் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

ஜனாதிபதி தமது மெய்ப் பாதுகாவலர் சகிதம் லண்டன் பயணமானதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-150)

# விமான பயணிகளுக்கு

தெற்கே விமானம் மூலம் பயணம் செய்ய பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 65, 66, 67, 68 ஆகியவற்றுக்கு அனுமதி கிடைத்துள்ளது என்றும்—

அப்பட்டியலில் உள்ளவர்கள் தமது பிரயாணத்துக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும்— யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

# சடலத்துக்குள் மறைந்து...

(1 ஆம் பக்கத் தொடர்)

அந்தோனி தேவசகாயம் (வயது 65) என்ற வயோதிபர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த இரண்டாம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் கடந்த புதனன்று அவர் அங்கு உயிரிழந்தார். உறவினரின் வருகைக்காக அவரது சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

மறுநாள் வியாழக்கிழமை உறவினர்கள் பிரேதப்பெட்டியுடன் அங்கு சென்று உரிய அனுமதி பெற்று சடலத்தைப் பொறுப்பேற்றனர். பிரேத அறையில் இருந்த சடலம் அங்குள்ள ஊழியரின் உதவியுடன் சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்டு வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வீட்டில் இறுதிக் கிரியைகளுக்கு ஆயத்தம் செய்த வேளையிலேயே வயோதிபரின் சடலத்துடன் கிடந்த சிசு ஒன்றின் சடலம் வெளிப்பட்டது.

பிறந்து ஓரிரு நாள்களிலேயே உயிரிழந்த அந்த சிசுவின் சடலத்தைக் கண்டு செய்வதறியாமல் திகைத்த உறவினர்கள் உடனடியாக அருகே இருந்த பொலீஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனர்.

சிசுவின் சடலத்தை அங்கேயே பாதுகாப்பாகப் புதைக்குமாறு கூறிய பொலீஸார் அது குறித்து யாழ். ஆஸ்பத்திரிக்குத் தகவல் கொடுத்தனர்.

அதன் பின்னரே வயோதிபரின் இறுதிச் சடங்கு நடைபெற்றது.

இந்த குழறுபடியான சம்பவம் குறித்து யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களில் விசாரித்தபோது தெரியவந்ததாவது:-

உயிரிழந்த பிரஸ்தாப வயோதிபரின் சடலத்தை அவர் தங்கியிருந்த வார்ட்டில் இருந்து 'ஸ்ரெச்சரில்' வைத்து பிரேத அறைக்கு எடுத்துச்சென்றபோது நிறைகுறைந்த குழந்தைகளைப் பராமரிக்கும் பிரிவில் இறந்த சிசுவின் சடலம் ஒன்றும் இடைவழியில் வைத்து அதே ஸ்ரெச்சரில் பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவ்விரு சடலங்களும் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன.

மறுநாள் வயோதிபரின் சடலத்துடன் தவறுதலாக அந்தச் சிசுவின் சடலமும் சேர்த்து உறவினரிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

# கொடிகாமம் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இம்மாதம் 16 ஆம் திகதி காலை 8. 45 மணியளவில் கொடிகாமத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் கண்ணிவெடியை வெடிக்க வைத்துத் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஏழு படைவீரர்கள் கொல்லப்பட்டனர். ஒரு படை வீரர் காயங்களுக்கு உள்ளானார், இச்சம்பவத்தின் போது படையினருக்குச் சொந்தமான நான்கு துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது உடுவில் கிளை அங்கத்தவராகிய
சுவர்ணா பேக்கரி உரிமையாளர்
திரு. இ. குமாரசாமியின் தாயாராகிய

## திருமதி இராசா

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை இதய அஞ்சலிகளாகச் சமர்ப்பிக்கின்றோம்.

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/1156)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-07-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
நம்பிக்கை, நாணயம்
உத்தரவாதத்துடன் 22 கரட்
தங்க நகைகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்!
(சி/48428)

19 - 07 - 1997 சனிக்கிழமை

## கருத்துக் கலசம்

### சுய நல மலம்!

ஈழத் தமிழர்களைப் போன்று தொடர்ந்து இன்னல்களையும் இடர்களையும் அனுபவிக்கும் வேறு இனம் ஏதாவது இருக்குமா? இவ்வாறு எண்ண—கேட்கத் — தோன்றுமளவுக்கு எமது மக்கள், எங்கும், எப்போதும், எதிலும் வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகும் நிலையே இயல்பாகிவிட்டது.

தனிப்பட்ட, குடும்ப மட்டத்தில் மட்டுமன்றி முழுச்சமூகப் பரப்பிலும் இந்தத் துன்ப துயர நிலை விரவிக் கிடக்கிறது.

அவரவர் செய்த வினைப் பயன் தான் சம்பந்தப்பட்டவர்கள் அனுபவிக்கும், எதிர் நோக்கும் துன்ப துயரங்களுக்கான காரணம்என்ற நம்பிக்கை மிக்கவர்கள் நாம்.

அவ்வாறாயின், தமிழ்ச் சமூகம், ஒட்டு மொத்தமாக, புறநீங்கல் இன்றி, இழைத்த வினையின் விளைபலன் தானா இன்றைய இடர்நிலை? ஒவ்வொருவரும் செய்தவினையும், சமூகத்தின் கூட்டுவினையும் ஒரு நிலை சாரும்போது, இத்தகைய இடைவிடா அவலங்களும், அவஸ்தைகளும் சூழ்ந்து கொள்வது இயற்கை.

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை. நாட்டில், ஊரில், மழையே பெய்யாது பஞ்சம், பசி, பட்டினி மலிந்த காலங்கள் குறித்துக் கதைகள் பல உண்டு. எல்லோரும் பாவவினை செய்தவர்கள் ஆயின் நாட்டில் மழை பொய்க்கும்.

மன்னவன் கோல் கோணிவிட்டாலும் நாட்டில் துன்பம் மலியும். எல்லோரது பாவமும் சேர்ந்து திரண்டு மன்னவன் கோலைக் கோணச் செய்து விடும்!

ஈழத்தமிழர்களை வாட்டி வதைக்கும் கட்டுவினை தான் என்ன? அது பலவகைகளின் திரட்சியா என்றால், ஆம் என்பதே பதிலாகிறது.

அந்தப் பல வகைகளில் பெரிய வகை தமிழர்களின் சுய நலம் என்ற மதயானை போன்ற வினை. சுயநலம் தவிர்ந்த பொது நலம் அல்லது சமூக நலம் என்பது எங்கள் மத்தியில் காண்டற்கரியஒன்று. வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்திலும் அணு அணுவாக உறைந்து, உள்ளெழுந்து நிற்பது சுய நலமே.

அரசியல், நிர்வாகம், வர்த்தகம் என்று அது தொற்றாத இடமில்லை. மக்கள் சேவை, சமூக நலச் செயற்பாடு, மத மேம்பாடு என்று எல்லா இடங்களையும் அசுத்தப்படுத்துவதும் அதுவே. எல்லா நலமும் எனக்கே கிட்ட வேண்டும் என்ற மலம் அகலாத வரை எமக்கு விடிவிருக்காது!

எனது நலம் போன்று அடுத்தவன் நலம் பேண வேண்டும்; என்னுள் இறைவன் வந்து குடியிருக்க அடுத்தவனிடம் உறையும் இறைவனைக் காண வேண்டும் என்ற மனமாற்றம் எப்போது எமக்கு வரும்? அப்போது தான் இன்னல்கள் இடர்கள் எம்மை அணுகாது அகலும். முயன்று பார்ப்பீர்களா?

# பாலியல் கல்வி அவசியமா?

இது செக்ஸ் பற்றிய ஒரு கட்டுரை. இதைப் பற்றி எவ்வளவு தூரம் பேசலாம்? அதற்கு ஓர் எல்லை உண்டா? எதற்கு அப்பால் போகக்கூடாது? — என்றெல்லாம் பல கேள்விகள் எழலாம். பலரும் விரும்பியோ விரும்பாமலோ பரபரப்பாக வாசிக்க முனையும் பகுதி இது என்பது மட்டும் உண்மை.

ஒரு பத்து வயதுப் பிள்ளை பெற்றோரிடம் 'செக்ஸ்' என்றால் என்ன என்று கேட்டுவிட்டது. பெற்றவர்கள் பதறிப் போனார்கள். எனினும் இது பாலியற்கல்வி பற்றிப் பேசப்படும் காலம். எனவே பிள்ளைக்கு விளங்கும் வகையில் ஓரளவுக்கு இதைச் சொல்லலாம் எனத் தீர்மானித்தார்கள். சுருக்கமாக ஏதோ எல்லாம் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள்.

''அம்மா! பள்ளிக்கூடத்தில் டீச்சர் தந்த படிவத்தில் 'செக்ஸ்' என்று கேட்டிருக்கிறதே. அந்த சிறிய வெளியில் எப்படி இவ்வளவையும் எழுதுவது?'' எனத் திருப்பிக் கேட்டது பிள்ளை; முழித்தனர் பெற்றவர்கள்.


'செக்ஸ்' என்ற வார்த்தையை முதன் முதலில் கேள்விப் படும் இடம் இந்தப் படிவங்கள்தான் என்ற நிலைமை மாறி விட்டது. இன்று பத்திரிகைகளின் பக்கங்களைப் புரட்டினால், வானொலி— தொலைக்காட்சியை போட்டால், புத்தகங்களை வாசிக்கப் புகுந்தால் எங்கும் 'செக்ஸ்' இன் ஆதிக்கம் தென்படுகிறது.

'செக்ஸ்' என்ற சொல்லுக்கு பலதரப்பட்ட கருத்துக்களை அகராதியில் காணலாம். எல்லாவற்றையும் பச்சையாக இதில் சொல்லிவிடல் இயலாது. செக்ஸிற்கு பத்திரிகைகளை மஞ்சளாகவும், படங்களை நீலமாகவும் மாற்றிவிடும் வல்லமையும் உண்டு. சிவப்பு விளக்கு பகுதிகளிலும் இது தாராளம்.

இன்று செக்ஸ் 'எடியூகேஷன்' — பாலியற் கல்வியின் அவசியம் வலியுறுத்தப் படுகிறது. இதைப் பற்றிப் பல வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன. பாலியல் பற்றி எதுவுமே கதைக்காமல் இருப்பது பல அப்பாவிகளின் கவனத்தை இதன் பக்கம் இழுக்காமல் காத்துவிடும் என்ற கருத்திலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஒரு முன் எச்சரிக்கையாக பாலியல் பற்றிய அறிவினை புகட்டுவது — சபல புத்தி கொண்ட — கவனத்தை கண்டபடி திசை திருப்பி விடுகின்ற — பிள்ளையைப் பொறுத்தளவில் பயனுள்ளதாகவும் அவசியமானதாகவும் அமைகிறது. ஆனால் இப்படியான தகவல்கள் தேவைப்படுவோரை அடைதலையும் அவசியமற்றோரைச் சேராமல் விடுதலையும் யார் கண்காணிப்பது?

அதுமட்டுமல்ல, அவரவர் தன்மைக்கும் மனோநிலைக்கும் ஏற்ப இவ்வறிவு[illegible] பற்றிய ஆழமும் [illegible] கிறது. எதுவும் தெரியாமலும் இந்தச் சோலிப்பக்கம் திரும்பிப் பார்க்காமலும் கல்வியிலும் கருத்திலும் கவனமாக இருக்கும் பிள்ளையினைப் பொறுத்தவரை கடுமையான விளக்கங்கள் கெடுதலையே தோற்றுவிக்கும். இது விடயத்தில் துடிப்பாக இருப்பவர்களுக்குத் தேவைப்படும் அறிவுரைகளோ, எய்ட்ஸ் தடுப்பு



பாலியல் அறிவு எங்கே போகிறது?

முறைகள் — பாதுகாப்பான உறவுமுறைகள் என்பன வரையில் ஆழமாக அவசியமாகிறது.

எனவே தான் இதைப் பற்றி எவ்வளவு தூரம் எழுதுவது? எந்த இடத்தில்நிறுத்துவது? — என்ற சங்கடமான கேள்விகள் எழுகின்றன.

கொண்டு ஒரு கருத்துக் கணிப்பை எமது பிரதேசங்களில் நடத்தினால் அது மிகவும் சுவாரசியமான ஒன்றாகவே இருக்கும். அவ்வளவு தூரம் வீட்டுக்கு வீடு கிசுகிசுக்கள் இங்கே மலிவு. இவற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கும் என்பது எவருக்கும் புரியாது.

பாலியல் பற்றிய தெளிவான அறிவின்மை பலருடைய வாழ்க்கையினைச் சிதைத்திருக்கிறது. நிரந்தரமான உடல் — உள பாதிப்புகளைத் தந்திருக்கிறது. வீட்டிலும் சூழலிலும் இது பற்றி எதுவுமே புரியாமல் வளர்ந்தவர்கள் பலர் பல்கலைக்கழகப் புகுமுக வாசலில் 'ராகிங்' என்ற பெயரில் பலதரப்பட்ட தரங்கெட்ட கேள்விகளையும் செயல்களையும் சேட்டைகளையும் சந்திக்கவேண்டி வந்தபோது திகைத்துப் போய் தடுமாறிப்போனார்கள்; பதறியடித்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள்.

எமது முன்னோர்கள் யாவரும் பண்பாடு காத்தே வாழ்ந்து இருக்கிறார்கள் என்றும் கருத முடியாது. கர்ண பரம்பரைக் கதைகளும் பழைய நூல்களும் பல சமூகச் சீர்கேடுகளை திருத்த முனைந்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

ஆன்மீகம் பாடி அதிகம் உருகி நின்றவர்களும் கூட அர்த்தம் சொன்னால் காது ஆபாசம் என நினைப்பவர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் புரியாதவர்களுக்கும் இந்த விடயங்கள் அத்துப்படி என்பதுதான் உண்மை. பின்னடைவான பிரதேசங்களில் சின்னஞ் சிறுசுகளுக்கு விளங்காத சூத்திரம் இல்லை என்ற அளவுக்கு நிலைமை மோசம்.

அமெரிக்கப் பத்திரிகைகள் அண்மையில் நடத்திய பல கருத்துக் கணிப்புக்கள் திடுக்

**-அம்பிகா-**

கிடும் தகவல்களை வெளியிட்டு இருக்கின்றன. எதிர் பார்க்கப்பட்ட அளவுக்கு அந்த மக்கள் கெட்டவர்கள் இல்லை என்பதே இவ்வாச்சரியத்துக்கான காரணம் ஆகிறது. மேற்கு நாடுகளில் அரசியல் தலைவிதியைப் பாலியல் விவகாரங்கள் மாற்றிவிடும் வரலாறுகளும் தாராளமாக உண்டு. ஐம்பது வருடங்களுக்கு முன் விட்ட தவறுக்காக இன்று பதவி துறக்க வேண்டிய அளவுக்கு அங்கே அரசியலில் ஒழுக்கம் எதிர்பார்க்கப் படுகிறது.

ஆசியப் பிரதேசங்களில் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கைச் சீர்கேடுகள் பற்றி வாக்காளர்கள் கவலைப்படுவது குறைவாகவே உள்ளது. இங்கு


## ஆண்பால்-பெண்பால்-மோகம் பலர்பால்

வாசகர்களின் தனிப்பட்ட தன்மைக்கும் தேவைக்கும் ஏற்பவே இவை அவசியமாகவோ ஆபாசமாகவோ தென்படப் போகின்றன.

ஐரோப்பிய, அமெரிக்கப் பத்திரிகைகள் பெரும்பாலும் ஒளிவு மறைவு இன்றியே தகவல்களை வெளியிடுகின்றன. பல கருத்துக் கணிப்புக்களை பத்திரிகைகள் நடத்தி வருகின்றன. பலரும் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

இக்கருத்துக் கணிப்புகள் பலவகையிலும் பயனுள்ளனவாகவே அமைகின்றன. சமுதாயம் எங்கே நிற்கிறது? என்ன வகையான போதனைகள் அவசியம்? எடுக்க வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் எவையெவை? எதிர் நோக்கப்படும் சுகாதார சீர் கேடுகள் என்ன? தேவைப்படும் வைத்திய வசதிகள் எவையெவை—எப்படி அமைதல் வேண்டும்? அவசியமான உற்பத்திப் பொருள்கள் என்ன? — என்றெல்லாம் எதிர்காலத்தை திட்டமிட அரசுகளுக்கு இத் தகவல்கள் உதவும்.

பாரம்பரியம் — பண்பாடு என்றெல்லாம் அதிகம் பேசும் எமது சமுதாயம், அவற்றை நம்பி இப்பிரச்சினைகளை ஒதுக்கி விடுவது எங்கே போய் முடியும் என்பதனை எதிர்வு [illegible]. அடுத்த வீட்டுக் கதைகளையும் வதந்திகளையும் வைத்துக் கொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு ஆபாசமான விடயங்களை வருணித்தே இருக்கிறார்கள். இவற்றை எப்படி எடுப்பது என்பது அவர




அமெரிக்க இராணுவத்தில் பெண் சிப்பாய்

வர் மனப்பான்மையில் தங்கி இருக்கிறது.

கருத்துக் கணிப்புப் படிவங்களில் கேட்கப்படும் பச்சையான பல கேள்விகளும் இந்தப் பிரதேசங்களுக்கும் தேவைதானா எனப் பலரும் வினாவுகிறார்கள். ஆனால் இப்படியான சீர்கெட்ட நடைமுறைகள் இந்தப் பகுதிகளில் இல்லை என்று மட்டும் யாரும் அடித்துக் கூற இயலாது. எதையும் ஆங்கிலத்தில் எழுதலாம்; வாசிக்கலாம். அது தமிழில் வந்தால்தான் உண்மையான தகவல்கள் கிடைக்கும் வகையில் கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டால் தலைகீழாக நிலைமைகள் இருப்பது புலப்படும். எமது நிலைமைகள் இப்படி இருப்பின் வேறு நாடுகளைப் பழிப்பதும் பண்பாடு காத்தோம் எனப் பீற்றுவதும் என்ன பயனைத் தரும்?

அமெரிக்கப் பத்திரிகைகள் கருத்துக் கணிப்புகளை நடத்துவதற்கான வாசகர் கூப்பன் அட்டைகளைத் தமது பத்திரிகைகளில் பிரசுரித்திருந்தன. இவ்வாறான கணிப்புக்கள் முதலில் 1940, 50 இலும் பின்னர் 1994 இல் பெருமெடுப்பிலும் நடத்தப்பட்டன. சிக்காக்கோ பல்கலைக்கழகம் பல ஆய்வுகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் இயங்கும் இதயங்களின் ஆசைகள் அம்பலப் படுத்தப்பட்டுள்ளன.

ஓரளவுக்கு நேர்முகமாகக் கூட பலர் தமது வாழ்க்கை முறை பற்றிப் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். நண்பர்களிடையே கதை அளக்கும்போது தமது உறவுகளைப் பற்றியெல்லாம் பெருமெடுப்பில் பொய்யான தகவல்களை வெளியிட்டுப் பெருமைப்படும் பலவீனம் கொண்ட ஆண்கள் இருக்கிறார்கள். பெண்களைப் பொறுத்தவரை விஷயம் இருந்தாலும்கூட வெளியே

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் புரண்ட தமிழ்க் கட்சிகளும் தடுமாறும் தீர்வுத் திட்டங்களும்!

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சிகள், இயக்கங்கள் பலப்பல.

அவற்றில் இன்னும் தப்பிப் பிழைத்து — மூச்சைப் பிடித்து இழுத்துக் கொண்டு — நிற்பவை ஒரு சிலவே.

மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புக்களை விடுத்துப் பார்த்தால் ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவை; அல்லது குரல் கொடுப்பது போலக் காட்டிக் கொள்பவை.

இக்கட்சிகள் 'விடுதலை', 'ஈழம்' என்ற சொற்களை தமது பெயரிலேயே சூட்டிக் கொண்டவை; தொடர்ந்து அதனை வைத்திருப்பவை.

இவை எல்லாம் ஒரு காலத்தில் 'தனித் தமிழ் ஈழமே' ஈழத் தமிழர்களின் இறுதி இலட்சியமான — ஒரே முடிவு என்று பொங்கி எழுந்தவை. இன்று தனிநாட்டுக் கோரிக்கையையும், விடுதலையையும், ஈழத்தையும் தூக்கிப் பரணில் போட்டுவிட்டு கிடைக்கும் லாபத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. — தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர.

என்றாலும் இந்த இயக்கங்களும், கட்சிகளும் 'ஈழம்' 'விடுதலை', 'புரட்சி' போன்ற பெயர்களை மட்டும் இன்னும் விட்டுவிடவில்லை. இரட்டை வேடப் போக்குக்கு இந்தப் பெயர்கள் உதவும் என்பதால் அவற்றை விட்டுவிட அவர்கள் தயாரில்லை.

### சந்திரிகா கூறியவை

''யுத்தத்தால் பேரழிவு தொடர்கின்றது. நமது சமுதாயம் அழிந்து கொண்டிருக்கின்றது. போரில் இறப்பவர்கள் தமிழ் இளைஞர்களாக இருந்தாலும், சிங்கள இளைஞர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்நாட்டு மக்களே. எனவே இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும்.'' — இவ்வாறு இவ்வார முற்பகுதில் களுத்துறை ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற — அரசின் தீர்வுத்திட்ட யோசனைகள் சம்பந்தமான — விளக்கப்பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கின்றார். அரசின் தீர்வுத்திட்ட யோசனைகள் குறித்து அரசுத் தரப்பு எம்.பிக்களுக்கும், அமைச்சர்களுக்கும் விளக்கமளிப்பதற்காக இந்த விளக்கப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் இப்பேச்சு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியதன் அவசரத்தையும், அவசியத்தையும் அவர் நன்கு உணர்ந்திருப்பதைக் காட்டுகின்றது.

இந்த அவசரத்தையும் அவசியத்தையும் ஏற்படுத்தியிருப்பது இனப்போர். அந்தப்போரை தமிழர்கள் தரப்பில் முன்னெடுப்பவர்கள் புலிகள்.

அதாவது புலிகள் நடத்தும் யுத்தமே இனப்போருக்கு விரைந்து தீர்வு காண வேண்டிய அவசியத்தையும் (கட்டாயத்தையும்) அவசரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

### தெளிவாகத் தெரிபவை

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தையும் தற்போதைய நிகழ்வுகளையும் கூர்ந்து அவதானிப்பவர்கள் சில விடயங்களை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

★ ஈழத் தமிழர்களின் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டம் காரணமாகவே அவர்கள் அடக்கப்படும் இனம் என்பது சர்வதேச மயப் படுத்தப்பட்டது.

★ தொடரும் இனப் போரின் காரணமாகவே ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வதேச அபிப்பிராயமும் அதன் மூலம் இலங்கை அரசின் மீது அதற்கான சர்வதேச ரீதியிலான தார்மீக அழுத்தமும் எழுந்தன.

★ எல்லாவற்றுக்கும் மேலாக இனப் போரில் சிங்களத் தலைமை இதுவரை படித்த, இப்போது படிக்கின்ற பாடங்களே தங்கள் முன்னைய தலைமுறை ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்க வழிதவறி, ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்கியதன் விளைவை அவர்களுக்கு உணர்த்தி வருகின்றன.

★ இந்த இனப்போரினால் ஏற்பட்டுள்ள உயிர், உடைமை, சொத்து மற்றும் பொருளாதார அழிவுகளும், பின்னடைவுகளுமே இப்பிரச்சினைக்கு விரைந்து ஒரு தீர்வு காண வேண்டும் என்ற கட்டாய நிலையை — அழுத்தத்தை — சிங்கள அரசுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த விளைவுகளுக்கு எல்லாம் காரணமாக இருப்பது அல்லது பெரும்பாலும் காரணமாக இருப்பது விடுதலைப்புலிகள் நடத்தும் விடுதலை யுத்தம்.

### புலிகள் மாறவில்லை

'தமிழீழம்', 'விடுதலை' என்ற தமது ஆரம்ப கால இலக்குகளில் இருந்து மாறாமல் விடாப்பிடியாக இருந்து வருகின்றார்கள் புலிகள். அது சரியா? தவறா? — என்பது வாதப் பிரதிவாதத்துக்குரியது. ஆனால் புலிகள் தமது ஆரம்ப கால இலக்கில் — தாம் பூண்ட உறுதியில் — நிலையாக நிற்கின்றார்கள்.

இலங்கையில் இந்தியப் படை இறங்கிய காலத்தில் — இந்தியப் படையுடனான மோதல் ஆரம்பிக்க முன்னர் — ஆயுதங்களை அடையாளமாக ஒப்படைக்கச் சம்மதித்த காலத்திலும் சரி —

பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தி யுத்த நிறுத்தம் மேற்கொண்ட காலத்திலும் சரி —

மீண்டும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்தி யுத்தத்தை நிறுத்தியிருந்த போதும் சரி —

பிரபாகரனும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது ''தமிழீழம்'' என்ற இறுதி இலக்கை கைவிட்டு விடவில்லை.

இந்தக் காலங்களில் பிரபாகரன் யுத்தத்தை நிறுத்தி அரசியல் வழி முறைகளை நாடுபவர் போல் தென்பட்டதால், தமிழீழத்தை அவர் கைவிட்டு விட்டார் என்ற நிலையை அவரது வாயிலிருந்து எடுப்பதற்கு அவரைச் சந்தித்த பத்திரிகையாளர்கள் பலரும் முயன்றது தெரிந்ததே. ஆனால் அவர்களின் முயற்சி எப்போதும் பலனளிக்கவேயில்லை.

''ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தமிழீழம் ஒன்றே தீர்வு என்பது எங்கள் முடிவு. 1977 பொதுத் தேர்தலிலும் தமிழ் மக்கள் அந்த நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார்கள். அதற்கு மாற்றான — ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய — ஈழத் தமிழரால் ஏற்கக் கூடிய — ஒரு தீர்வை சிங்கள அரசு முன்வைக்குமானால் நாம் அதைப் பரிசீலிக்கத் தயார்'' — என்றே பிரபாகரன் அந்த வேளைகளில் திரும்பத் திரும்பக் கூறினார். அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழீழத்தை கைவிட்டு விட்டதாகக் கூறவில்லை.

## உள்ளும் புறமும்

குறுமுனி

இன்று பிரபாகரனையும் அவரது இயக்கத்தையும் துரோகிகள் என்று கூறும் பலர்கள், அன்று தமிழீழத்தைக் கேட்டவர்கள்; இன்று சட்டையை மாற்றிக்கொண்டு விட்டவர்கள்.

பிரபாகரனின் கொள்கை சரி என்ற எண்ணத்துடனோ அல்லது அதில் முற்றும் முழுதாக நியாயமுள்ளது என்று நியாயப்படுத்தும் நோக்குடனோ இந்தக் கருத்துக்களை நாம் முன்வைக்கவில்லை.

பிரபாகரன் தமது முடிவில் மாறாமல் விடாப்பிடியாக இருக்கின்றார் என்பதையும் —

புலிகளின் ஆயுதப் போராட்டமே இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாயத்தை அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் சர்வதேச உலகுக்கும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதையும் —

சுட்டிக்காட்டுவதற்கே இவற்றைக் குறிப்பிட்டோம்.

### பரிதாபத்துக்குரிய தமிழ்க் கட்சிகளின் நிலை

ஆனால் மறுபுறத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாக உள்ளது.

புலிகளின் போக்கால் தமது களத்தை இழந்த அக்கட்சிகள் அல்லது இயக்கங்கள் பின்னர் தமது விடுதலைப் போராட்ட போக்கைக் கைவிட்டு — அல்லது கைவிட்டது போல் காட்டி — வெறும் ஜனநாயக சக்திகள் என்ற முகமூடியை அணிய வேண்டியதாயிற்று; ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண விரும்பும் சக்திகள் போல் தங்களை அடையாளம் காட்ட வேண்டியதாயிற்று.

இது தங்கள் இருப்பை உறுதி செய்வதற்காக அவை மேற் கொண்ட தந்திர வழியாக அல்லது வேறு மார்க்கம் இல்லாத இயலாத் தன்மையின் விளைவாக நாடிய கட்டாய பாதையாக இருக்கலாம்.

சரி. இப்பாதைக்கு வந்தாயிற்று. அப்பாதையிலேனும் தமது மக்களுக்குச் சரியானதைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக — அவை சிறப்பாக செயற்படுகின்றனவா என்றால் இல்லை என்று இருக்க வேண்டும்.

ஐந்து கட்சிகள் சேர்ந்து ஓர் கூட்டமைப்பை ஏற்படுத்தின. பின்னர் அண்மையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து ஒரு தமிழர் பொது மன்றத்தை அமைத்தன. ஆனால் ஒரு குரலில் செயல்பட்டனவா என்றால் இல்லை.

ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பிலும் குத்து வெட்டு; குளறுபடி; தமிழர் பொது மன்றமும் செயலற்ற மன்றமாகவே உள்ளது.

ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றுகூடி தெரிவுக்குழு முன் தமது தரப்பில் ஒரு யோசனைத் திட்டத்தை முன்வைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸுடன் பேசி சில முடிவுகளை எடுத்துக் கொண்டு மற்றொரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது.

ஆனால் அரசும், தெரிவுக் குழுவும் அத்திட்டங்களைக் கிடப்பில் போட்டுவிட்டன; பரிசீலனைக்கே எடுக்கவில்லை.

### புதிய யோசனை

இந்நிலையில் புதிய யோசனை ஒன்றை ஐந்து தமிழ்க் கட்சிகள் முன்வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

வடக்கு — கிழக்கு மேலும் பத்து வருடங்களுக்கு இப்படியே இணைந்திருக்கலாம். பின்னர் இணைப்பதா பிரிப்பதா என்று முடிவு செய்யலாம் — இதுதான் அந்த யோசனையின் சாராம்சம்.

அதாவது தமிழர் தாயகக் கோட்பாடு பத்து வருட உரிமை. பின்னர் வேண்டுமானால் அதை ஏலத்துக்கு விடலாம் என அந்தக் கட்சிகள் நினைக்கின்றன போலும்.

### தமிழ்ச் சமூகம் எதிர்பார்ப்பது

அரசியல் தீர்வு ஒன்றுக்கான அழுத்தத்தைப் புலிகளின் யுத்தம் வழங்கியிருக்கின்றது.

இந்த நிலையில் அரசியல் களத்திலிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு, ஒரே குரலில் செயற்பட்டு அந்தத் தீர்வுத் திட்டத்தில் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான அம்சங்களைத் தவறாது இடம்பெறச் செய்யவேண்டும்.

அதுதான் அக்கட்சிகளின் இன்றைய தலையாய கடமையாகும். தமிழ்ச் சமுதாயம் இன்று அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது இதைத்தான்.

இனப்பிரச்சினைக்கு இருமுனைத் தீர்வைக் காண முயல்வதாக அரசு கூறுகின்றது.

யுத்தத்தில் புலிகளை முறியடிப்பது ஒரு முனை. அரசியல் தீர்வு காண்பது மறுமுனை.

காட்டில் — ஆயுத யுத்தத்தில் — சரியான பதிலடிகளைப் புலிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது அதில் ஒரு முகமுனைப்புடன் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

ஆனால் நாட்டில் — அரசியல் யுத்தத்தில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் பிளவு பட்டு நின்று கோட்டை விட்டுக்கொண்டிருக்கின்றன.

புலிகளின் யுத்தத்தில் கொடுக்கப்படும் அழுத்தத்தைத் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தங்களுக்குச் சலுகைகளையும், அங்கீகாரத்தையும் பெறத் துடிக்கின்றனவே தவிர —

உறுதியான அரசில் தீர்வு ஒன்று தொடர்பாக அரசிடமும், பிரதான சிங்கள எதிர்க்கட்சிகளிடமும் உள்ள திட்டம் என்னவென்பதை வெளிக்கொணர வைக்கும் அரசியல் வியூகங்களை வகுப்பதில் அவை ஈடுபடவில்லை; ஒன்றுபட்டுச் செயற்படவில்லை.

இவற்றுக்கு மாறாக, அரசு மேலும் காலத்தை இழுத்தடிப்பதற்கு வகை செய்யும் புதிய, புதிய யோசனைகளை பிரிந்து, பிரிந்து நின்று காலத்துக்குக் காலம் முன்வைக்க அவை முயற்சிக்கின்றன.

சுயநலம், சுயலாபம்போன்றவற்றுக்கு அப்பால் இக்கட்சிகள் சிந்திக்குமா? செயற்படுமா?

★ ★ ★

### நீதியரசர்கள் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக மூவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமனம் செய்திருக்கின்றார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி டி இஸட் குணரத்தினா, பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. வீரசூரிய, பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நிஹால் ஜெயசிங்க ஆகியோரே அம்மூவருமாவார்.

இவர்களில் கொழும்பு மாவட்ட நீதிபதியாகப் பணிபுரிந்த உபாலி டி இஸட் குணவர்த்தனாவின் பெயர் கடந்த வாரங்களில் கடுமையாக பத்திரிகைகளில் அடிபட்டது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாக்கல் செய்த அவதூறு வழக்கை விசாரித்து அண்மையில் தீர்ப்பு வழங்கியவர் இவர்தான்.

### அஷ்ரபின் பதவி

அமைச்சர் அஷ்ரப்புக்கு மீண்டும் புனர்வாழ்வு — புனரமைப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. எனினும் வடக்குத் தவிர்ந்த பிரதேசத்துக்குப் பொறுப்பான புனர்வாழ்வு — புனரமைப்பு அமைச்சராகவே அவர் இருப்பார் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வடக்கு புனர்வாழ்வு — —புனரமைப்பு தொடர்ந்து நேரடியாக ஜனாதிபதியின் பொறுப்பில்தான் இருக்கும்.

அஷ்ரப்பின் பொறுப்பில் இருந்த துறைமுகங்கள் — கப்பல் துறையில் தற்போது கப்பல்துறை எடுக்கப்பட்டு விட்டது தெரிந்ததே. கப்பல் துறை இல்லாத துறைமுக அமைச்சுப் பொறுப்பை 'விமானங்கள் இல்லாத விமானப் படை' என்று அரசியல் வட்டாரங்கள் சில கிண்டலடிக்கின்றன.

தமது அமைச்சுப் பொறுப்புக் குறைப்புத் தொடர்பாக சீற்றமடைந்துள்ள அஷ்ரப் தமது முக்கியத்துவத்தை ஜனாதிபதிக்கு உணர்த்தும் வகையில் பாடம் படிப்பிக்க சரியான நேரத்துக்குக் காத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணரின் சாதுரியத்தால் முட்டாளான துரியோதனன்!

**வித்யாரண்யன்**

மிகுந்த சாதுரியத்துடன் நாம் ஒரு காரியத்தைத் திட்டமிடுகிறோம். அதே காரியத்தை தனக்கு சாதகமானதாக இன்னொருவன் மாற்றிக் கொள்கிறான் என்றால் நம்மை அறியாமலேயே நமக்கு 'முட்டாள்' பட்டம் வந்து விடுகின்றது.

துரியோதனன் முட்டாளான கதை இது.

துரியோதனன் பாண்டவர்களோடு போர் தொடுக்கப் போகின்றான். அந்தப் போரை எப்போது தொடங்கினால் தனக்கு வெற்றி கிடைக்கும் என்று அறிய நினைத்தான் அவன்.

உடனே அவனுக்கு நினைவுக்கு வந்தவன் பஞ்சபாண்டவர்களில் ஒருவனான சகாதேவன். நாள், கோள் கணித்துச் சொல்வதில் சகாதேவன் கெட்டிக்காரன். எனவே அவனை நாடினான் துரியோதனன்.

''சகாதேவா! உன்னிடம் ஓர் உதவி வேண்டி நான் வந்துள்ளேன். நடைபெற இருக்கும் போரில் எனக்கு வெற்றிதரும் முகூர்த்தம் எது என்று நீ சொல்ல வேண்டும். அப்போதுதான் நான் போரைத் தொடங்குவேன்.'' என்றான் துரியோதனன்.

சகாதேவன் நாள், கோளைக் கணித்தான்.

''துரியோதனா! அமாவசை அன்று பலியுடன் போரைத் தொடங்கு. உனக்கு ஜெயம் கிடைக்கும்''—என்று கூறினான் சகாதேவன்.

சந்தோஷமாகத் திரும்பினான் துரியோதனன். அமாவாசையன்று தன் முயற்சிகளைத் தொடங்க ஆயத்தம் செய்தான்.

துரியோதனன் வந்ததையும், அவனுக்கு தமது இளைய சகோதரனான சகாதேவன் நல்ல முகூர்த்தம் கணித்துக் கொடுத்ததையும் அறிந்து பாண்டவ சகோதரர்கள் சகாதேவனிடம் விரைந்தனர்.

''சகாதேவா! நீ செய்தது நியாயமா? நம் மீது போர் தொடுக்கப் போகிறவன், தான் வெல்ல நல்ல நாள் எது என்று கேட்கிறான். நீயும் குறித்துக் கொடுக்கிறாய், அப்படியானால், அவன் செய்த தீமைகளை நீ மறந்து, மன்னித்து விட்டாயா? நாம் தோற்க வேண்டும் என்பதுதான் உன் முடிவா?''

— இவ்வாறு கோபமாகப் பேசிய தன் தமையன்மார்களிடம் பணிவுடன் சொன்னான் சகாதேவன் ''தயவு செய்து என்னை மன்னியுங்கள். துரியோதனனை என் பகைவன் என்றோ அல்லது சகோதரன் என்றோ நினைத்து நான் அவனுக்கு வெற்றி தரும் வேளையைக் குறித்துத் தரவில்லை. 'சகாதேவன் பொய் சொல்ல மாட்டான்; தர்மத்தில் இருந்து தவறமாட்டான்' என்று நம்பி, தனக்கு நலம் வேண்டி வந்த ஒருவனுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். அவ்வளவுதான். இது என் தர்மம்.'' — என்றான் சகாதேவன்.

சகோதரர்கள் வாயடைத்துப் போனார்கள்.

விடயம் ஸ்ரீ கிருஷ்ணனிடம் போயிற்று, தனக்கே உரிய புன்னகையுடன் அதைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். கிருஷ்ண பட்சத்தின் கடைசி நாளான சதுர்த்தசி அன்று — அமாவாசைக்கு முதல் நாள் - கிருஷ்ணன் தர்ப்பணம் செய்ய ஆரம்பித்தான்.

எல்லோருக்கும் குழப்பம்! இதென்ன? நாளைக்குத்தானே அமாவாசை? ஏன் கிருஷ்ணன் இன்றே தர்ப்பணம் செய்கிறான் என்று கேள்வி! ஆனாலும் ஒரு நம்பிக்கை!

கிருஷ்ணன் செய்வது தப்பாக இருக்காது. கிருஷ்ணனே இன்றைக்கு தர்ப்பணம் செய்வதால், இன்றுதான் அமாவாசையாக இருக்க வேண்டும் என்று நினைத்து, எல்லோருமே தர்ப்பணம் செய்தனர்.

இதை மேலிருந்து பார்த்தார்கள் சூரியனும், சந்திரனும்!

அவர்களுக்கும் குழப்பம்!

''நாளைக்குத்தானே நாமிருவரும் சந்திக்க வேண்டும். அப்போதுதானே அமாவாசை. கிருஷ்ணர் தவறாக கணக்கிட்டு விட்டார் போலும். வா! நாம் போய் நேரில் சொல்வோம்''. — என்று பேசிக்கொண்டு இருவரும் ஸ்ரீ கிருஷ்ணன் முன்னால் வந்தார்கள்.

இருவரையும் ஒரு சேரக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் புன்னகையுடன் வரவேற்றான்.

''வாருங்கள் என்ன பெரும் பேறு இது? சூரிய, சந்திர தேவர்களை ஒரு சேரக் கண்ட பாக்கியம் கிடைத்ததே. நான் பெற்ற வரம் தான் இது!'' — கிருஷ்ணனின் இந்த உபசார மொழிகளுக்குப் பிறகு, இருவரும் சொன்னார்கள்.

''கிருஷ்ணா, நாளைக்குத் தான் அமாவாசை, நாங்களிருவரும் சந்திக்கும் நாள். நீர் தவறாக இன்றே தர்ப்பணம் செய்கிறீர். உம்மைப் பார்த்து அனைவரும் அதே பிழையைச் செய்கிறார்கள்,''

உடனே கிருஷ்ணன் சொன்னான். ''இல்லையே இன்றுதான் அமாவாசை.''

''இடையாது. நாளை தான் அமாவாசை. நாங்களிருவரும் நேராக சந்திப்பது அப்போதுதான்.''

கோபமாகச் சொன்ன அவர்களிடம், விஷமப் புன்னகை மாறாமல் சொன்னான் ஸ்ரீ கிருஷ்ணன்.

''நீங்கள் சொல்வது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால், இந்த முறை நீங்களிருவரும் இன்றைக்கே நேருக்கு நேராக சந்தித்தும் விட்டீர்கள். எனக்கும் தரிசனமும் தந்துவிட்டீர்களே? ஆகவே இன்றுதானே அமாவாசை?''

அப்போதுதான் அவர்களுக்கும் கிருஷ்ணனின் விஷமம் புரிந்தது. சடாரென்று மறைந்து போனார்கள் இருவரும். துரியோதனன் நடந்த விஷமம் தெரியாமல் அடுத்த நாளை அமாவாசை என்று எண்ணி அந்த நாளில் படையெடுப்பு முகூர்த்தம் நடத்தினான்.

முகூர்த்தம் பிழைத்ததால் யுத்தத்தில் தோல்வியைத் தழுவினான் துரியோதனன்.

இப்படிச் சாதுரியமாக முன்யோசனையுடன் நடந்து கொண்ட துரியோதனனுக்கு கிருஷ்ணனின் சாமர்த்தியத்தால் 'முட்டாள்' பட்டம் வந்து சேர்ந்தது; சகாதேவனின் கணிப்பும் பிழைக்காமல் போனது. ★

# பிரிவெனும் பெருந்துயர்

**- உளவியல் பார்வையில்**

**-சா. சிவயோகன்-**

**பிரிவு, பிரிவு, பிரிவு...**

**ஈழத் தமிழர்களின் வாழ்வில் இன்று முக்கிய-பிரிக்க முடியாத-அம்சம் 'பிரிவு'.**

**பிரிவின் தாக்கங்களையும், வகைகளையும் உளவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்கின்றார் இக்கட்டுரையாளர்.**

''நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்னும் பிரிவுத்துயரின் வெளிப்பாடு, கம்பனின் பிரிவு பற்றிய எண்ணக்கருவை பிரதிபலிக்கின்றது. புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள், காவியங்கள் எல்லாவற்றிலும் பிரிவு பற்றி நிறையவே சொல்லப்பட்டிருக்கின்றது. உண்மையில் (கதை) மாந்தர்களுக்கிடையில் ஏற்படும் பிரிவுகள் மூலமே — அப்பொழுதில் ஏற்பட்ட சம்பவங்கள் மூலமே — அநேகமான கதை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிரிவு, வாழ்வின் தவிர்க்க முடியாத பாகமாகி விட்டது. தனது உணர்வுகள், உணர்ச்சிகள் மூலம் நெருக்கமாகிவிட்ட ஒருவரை அல்லது ஒன்றை பிரிவது என்பது, அவ்வாறான ஓர் உறவை இழத்தல் என்பதிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கிறது. ''இழப்பு'' அதற்கேயுரித்தான நிரந்தரத் தன்மையைக் காட்டி நிற்கும் வேளையில் ''பிரிவு'' நிரந்தரமான இழப்பை அல்லது நிச்சயமற்ற நிரந்தரத்தன்மை, காலம் தெரிந்ததும் தெரியாததுமான தற்காலிகத் தன்மை எனும் பண்புகளை வெளிப்படுத்துகின்றது. பிரிந்து போன 'ஒருவர்' குடும்ப உறுப்பினராக, நண்பராக, நேசிக்கப்படும் ஒருவராக இருக்கின்ற அதே வேளையில், பிரிந்துபோன 'ஒன்று' செல்லப்பிராணி, வீடு, வாசல், அயல் புலம், விளையாட்டுப் பொருள்கள், புத்தகங்கள், ஊர், தேசம், வேலை, அந்தஸ்து, உடலின் பாகங்கள் என விரிவான அர்த்தங்களை உள்ளடக்கிக் கொள்ளும்.

வாழ்வின் ஒவ்வொரு காலப் பகுதியிலும், ஏதோ ஒரு வகையான பிரிவையும் இழப்பையும் அனுபவித்துக் கொண்டே, வாழ்வின் அடுத்த கட்டத்தினுள் நுழைகிறோம். சிசு தாயின் ஒருமையிலிருந்து பிரிதல், மழலை தாயின் தொடர் அரவணைப்பிலிருந்து பிரிதல், கட்டிளமையினர் பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து பிரிதல், வயது போகும் போது இளமையையும், உடல் வலிமையையும் பிரிதல் என்று பல பிரிவுகளை உதாரணங்களாகப் பார்க்கலாம். உண்மையிலே வாழ்க்கை வட்டத்தினுடைய எல்லாப் பருவங்களினதும் எண்ணக் கருவூலங்கள், பிரிவுகளில் பொதிந்திருக்கின்ற கரு அர்த்தத்திலும், தனித்துவமாதலிலுமே உருவாக்கம் அடைகின்றன. பிரிவும், இழப்பும் வளர்ச்சிப் பாதையின் படிக்கற்களாகும்.

பிரிவை எமது வாழ்வில் பல்வேறுபட்ட வடிவங்களில் எதிர் கொள்ள நேரிடலாம்.

1. **நிரந்தரமான பிரிவு:** எங்களுக்குப் பிரியமானதை உண்மையிலே நிரந்தரமாக இழந்து போதல். உதாரணமாக அன்புக்குரியவரின் மரணம், அழிந்து தரைமட்டமான வாழ்விடம்.........

2. **அச்சத்துடன் எதிர்பார்க்கும் பிரிவு:** இங்கு பிரிவு ஏற்பட்டு விடுகின்றது. ஆயினும் அதன் தற்காலிகத் தன்மையில் நிச்சயமற்றதோர் நிலை நிலவும். இது ஒரு நிரந்தரமான பிரிவாகி விடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது. உதாரணமாக, வெளிதேசங்களில் உள்ள பிள்ளைகளும், அவர்தம் வயோதிபப் பெற்றோரும், நேசிக்கப்பட்டவர்களின் மரணத்தின் பிரிவு, 'காணாமற் போனோர்' சம்பந்தமான பிரிவு......

3. **குறியீட்டுப் பிரிவு:** இங்கு பிரிவானது, பிரிந்த ஒருவர் அல்லது ஒன்றிற்கும் அப்பாற்பட்டு, மேலான ஒரு நம்பிக்கையின், வாழ்க்கை முறையின், சுய அடையாளத்தின் பிரிவாகப் பொருள் பட்டு இருக்கும். உதாரணமாக, எங்களது வரலாற்றில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் மரணம் ஒரு நம்பிக்கையின் இழப்பாகக் கருதப்பட்டு ஓர் அதிர்ச்சி அலை ஏற்பட்டது. பிற தேசங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுவோர் தமது தாயகத்துடன் சுய அடையாளத்தையும் இழந்துள்ளார்கள்...

4. **கற்பனை விநோதமான பிரிவு:** இவ்வகையில், உண்மையிலேயே பிரிவு நடக்காவிட்டாலும், ஒருவர் பிரிவு நடந்தாற் போல எதிர்வினை காட்டுவார். அடி மனதில் எதிர்பார்க்கப்படுகின்ற பிரிவுகள் இவ்வாறு வெளிக்காட்டப்படலாம். மனநிலையில் பொதுவான சோர்வு ஏற்படுகின்ற போது, எல்லாவற்றையும் இழந்ததாகக் கருதலாம். சிலவகை மனக்குழப்பங்களிலும் இவை முதன்மை பெற்றிருக்கும்.

5. அவயவங்களைப் பிரிதல்: நிரந்தரமான இப்பிரிவை தனித்துவமான ஒன்றாக நோக்க வேண்டி உள்ளது. உடலின் உறுப்புக்களைப் பிரிதல் என்பது, ஒரு நிரந்தர இழப்பு மட்டுமன்றி, அதை ஏற்றுக் கொண்டு, மறு சீரமைப்புக்குள்ளாகி வாழ்வதற்குநீண்ட படிமுறைகளும் தேவைப்படும். மிகவும் பரிச்சயமான உதாரணமாக அவயவங்கள் இழத்தலைக் குறிப்பிடலாம், போருக்கு முற்பாட்ட காலங்களில், சலரேகம் காரணமாக அங்கம் இழத்தல் பொதுவானதாக இருந்தது. ஆனால் இப்பொழுது, யுத்த காயங்களும், நிலக்கண்ணி, அமுக்க/வெடிகளினாலும் ஏற்படும் அவயவ இழப்புகள் மிகப் பொதுவானதாகிவிட்டன. புற்றுநோய் காரணமாக மார்பகங்களை இழத்தல், குடலின் பெரும் பகுதியை இழத்தல் போன்றன மேலும் சில உதாரணங்களாகும். உடற்றொழிலியல் இழப்புக்கலான பார்வையிழத்தல், கேட்டல் சக்தியிழத்தல், அவயவங்களின் பூரண தொழிற்படு நிலையை (பாரிசவாதம், போலியோ காரணமாக) இழத்தல் போன்றவையும் குறிப்பிடப்பட வேண்டியவையே.

## கழிவிரக்கம்

பிரிவுகளில் எல்லாம் முதன்மையானதாக, அன்புக்குரிய ஒருவரின் மரணத்தைக் குறிப்பிடலாம். இந்த நிரந்தர இழப்பின் எதிர்வினையை வருந்துதல், துக்கப்படல், கழிவிரக்கம் கொள்ளல் என்ற பதங்களூடாக அழைக்கலாம். கழிவிரக்கப்படல், இழப்பினை ஏற்றுக் கொள்ளத் தேவையான நடைமுறையாகிறது. இது ஒருவர், இழந்தவருடன் தான் கொண்டிருந்த முடிச்சுக்களிலிருந்து மீள உதவி செய்யும். மிகவும் வேதனையாக இருக்கும் இக் கழிவிரக்கக்காலம் இழந்தவரின் பிரிவை முழுமையாக ஏற்றுக் கொள்ள வழிவகுக்கும். கழிவிரக்க எதிர்வினைகள் இழப்பின் வகை, அதன் சடுதித் தன்மை, இழந்ததனுடன் ஒருவர் கொண்டிருந்த முடிச்சுகள் போன்றவற்றினாலும், ஒருவர் சார்ந்துள்ள தத்துவ, கலாசாரப் பண்புகளினாலும் தீர்மானிக்கப்படும், கழிவிரங்கங்களில் பரந்த வேறுபாடுகள் இருப்பினும், முழுமையடையாத கழிவிரக்கங்கள், தொடரும் வாழ்வில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம்.

கழிவிரக்கப் படிமுறைகளை சுருக்கமாக அறிந்து கொள்ளல், பிரிவின் பின்பு பொதுவாக ஏற்படுகின்ற எதிர்வினைகளை விளங்கிக் கொள்ள உதவியாக அமையும். அன்புக்குரிய ஒருவரின் மரணத்தைத் தொடர்ந்து முதலாவதாக ஒரு விறைப்படைந்த, எதிர்ப்பு நிலை காணப்படும். இழப்பை நம்பாமை, ஏற்றுக்கொள்ள மறுத்தல், உணர்வு மரத்துப் போம் நிலையை அடைதல், இழப்புடன் தொடர்புடையவர்களில் ஆத்திரப்படல் போன்ற எதிர்வினைகள் — உளத் தற்பாதுகாப்பு முறைகளாக —வெளிக்காட்டப்படலாம். இதனைத் தொடர்ந்து உண்மையான துன்ப நிலை தோன்றும். இழப்பின் உண்மைத் தன்மை பற்றி சடுதியான உணர்தலும், அதன் துன்பமுமாக இந்நிலை அமையும். ''இந்தப் பிரிவை எப்படித் தாங்கிக் கொள்வேன்?'' என்ற வகையில் துன்புற்று, பார்க்கும் இடங்களில் எல்லாம் பிரிந்தவரைத் தேடுவர். எனினும் சில காலங்களின் பின்பு யதார்த்த நிலை தோன்றும். இங்கு ஒருவர் தனது இழப்பை உறுதி செய்து கொள்வர். அதனால் ஏற்படும் உளத்தாக்கத்தினால் சோர்வுற்ற மன

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டிக் கொண்ட ஜோதிடர்!

தமிழ்நாடுதிண்டுக்கல்லைச் சேர்ந்த பிரபல சோதிடர் கருப்பையாத்தேவர்.

இரண்டாயிரமாம் ஆண்டை அடுத்து உலகில் பேரழிவு ஏற்படும் என்று அவர் வெளியிட்ட ஆருடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது தெரிந்ததே.

தமிழகப் பத்திரிகைகள் (ஏன் சஞ்சீவியும் கூட) அந்த ஆருடத்தை விழுந்தடித்துப் பிரசுரித்தன.

ஆனால் கருப்பையாத் தேவர் தமது மற்றொரு ஆருடத்தில் வகையாக மாட்டிக்கொண்டு விட்டார்.

சென்னையில் நடைபெற்ற பெப்ஸி கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியாவெற்றியீட்டும் என்று அவர் கூறிய ஆருடம் பொய்த்துப் போய் விட்டது.

தமது ஆருடம்பொய்த்தது குறித்து கருப்பையாத்தேவர் கூறும் சமாதானம் என்ன தெரியுமா?

''சென்னையில் சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் அதிகாரிகளைச் சந்தித்து, 'இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்க வேண்டுமானால், இந்திய கிரிக்கெட் வீரர்களை சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு ஒரு முறை அழைத்துச் செல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன். ''அதெல்லாம் இப்போது நடக்கிற விஷயமில்லை'' என்று அவர்கள் மறுத்து விட்டார்கள்.

'அப்படியானால் ஆட்டம் ஆரப்பிப்பதற்கு ஐந்துநிமிடம் முன்னதாக வேநம் கிரிக்கெட் வீரர்களை மைதானத்தில் இறங்கச் சொல்லுங்கள். நமக்கு வெற்றி நிச்சயம்' என்று சொன்னேன்.

'இது சர்வதேச கிரிக்கெட் ஆட்டம். எப்போது ஆட்டம் ஆரம்பிக்க வேண்டும், எப்போது ஆட்டக்காரர்கள் மைதானத்தில் இறங்க வேண்டும் என்று அனைத்து திட்டங்களும் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டு விட்டன. அதை மீறி நம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை ஐந்து நிமிடம் முன்பாக மைதானத்தில் இறக்க முடியாது' என்று சொல்லிவிட்டனர் கிரிக்கெட் அதிகாரிகள். பிறகு என்ன செய்ய முடியும்?'' என்றுசமாதானம்கூறினார்கருப்பையா.

## பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# பூமியின் பழைமை!

நாம் வசிக்கும் பூமி எப்போது தோன்றியது?

விஞ்ஞான ஆய்வுகளின்படி பூமி 460 கோடி ஆண்டுகள் பழைமையானது என்பது தெரியவந்துள்ளது.

பூமியில் உயிரினங்கள் 57 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றின என்றும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதில் முதல் 35 கோடி ஆண்டுகள் கடல் வாழ் உயிரினங்களின் காலமாகும். பிறகு 16 கோடி ஆண்டுகள் ஊர்வன விலங்குகளுக்குரிய காலம். பிந்திய ஆறு கோடி ஆண்டுகளில்தான் பாலூட்டும் உயிரினங்கள் வளர்ந்தன. பூமியில் மனித இனம் பத்து லட்சம் ஆண்டுகளாகத்தான் வாழ்ந்து வருகின்றது. இதிலும் நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுகளின் வரலாறே — அதுவும் இட்டு மட்டாகவே — நமக்குத் தெரிந்துள்ளது.

# 2,000 ஆம் ஆண்டை வரவேற்கத் தயார்!

இன்னும் இரண்டரை ஆண்டு காலத்தில் இரண்டாயிரமாம் ஆண்டு பிறந்து விடும்.

இரண்டாயிரமாம் ஆண்டுப் பிறப்பை எப்படிக் கொண்டாடுவது என்று உலகின் முன்னணி நாடுகள் பலவும் பல கோடிகளைக் கொட்டி சுறுசுறுப்பாகத் திட்டமிடுகின்றன. பிரிட்டனும் அதற்கு விதிவிலக்கல்ல.

சர்வதேச நேர அலகுக்கு அடிப்படை மையமாக இருக்கும் கிரீன்விச் நகரத்தை நிலையமாகக் கொண்டு இரண்டாயிரமாம் ஆண்டுப் பிறப்பைக் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இக்கொண்டாட்டத்துக்காக அங்குஇராட்சத 'சைஸ்' அரங்குகளை நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

# புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக 'சதம்' அடித்தது உட்பட பல சாதனைகள் புரிந்தவர் கவாஸ்கர். அவரின் மகன் ரோஹான் கவாஸ்கரும் தந்தையைப் போல சிறந்த கிரிக்கெட் வீரராக வளர்ந்து வருகிறாராம்.

தந்தை கவாஸ்கரும் மகனை தேசிய கிரிக்கெட் வீரனாக்குவதில் சளைக்காமல் முயற்சிக்கின்றார்.

வரும் ஆண்டுகளில் மகனின் திறமை வெளியே தெரியவரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

# நாட்டின் தேசிய சின்னமாக ஒரு 'கார்ட்டூன் கரெக்டர்'

'கார்ட்டூன்' பாத்திரம் ஒன்று ஒரு நாட்டின் தேசிய சின்னமாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

முன்பு 'ஸயர்' ஆக இருந்து அண்மையில் குடியரசாக மாறிய கொங்கோவில் தான் 'லயன்கிங்' கார்ட்டூன் படத்தில் வரும் சிங்கக்குட்டி தேசிய சின்னமாக்கப்பட்டிருக்கின்றது.

இதை எப்படித் தெரிவு செய்தார்கள் என்ற காரணம் வெளியே தெரியவரவில்லை. ஆனாலும் இழந்த நாட்டை மீட்ட அந்த 'லயன் கிங்'கின் கதை மாதிரியே கொங்கோவின் சரித்திரமும் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம் என்று புதிய ஆட்சியாளர்கள் கருதியிருக்கக் கூடும்.

இந்தக் 'கார்ட்டூன்' வடிவங்களின் உரிமை 'வால்ட் டிஸ்னி' நிறுவனத்துக்கே உள்ளது.

எப்போதுமே தனது 'கரெக்டர்களின்' உரிமையை விட்டுக் கொடுக்காத வால்ட் டிஸ்னி நிறுவனம் இந்த விஷயத்திலும் சட்ட ரீதியான நடவடிக்கைகளில் இறங்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

# தொடர்ந்து சர்ச்சையில் சிக்கும் டயானா!

இளவரசர் சாள்ஸை விவாகரத்துச் செய்துவிட்டு டயானா தன்னுடைய பாட்டில் ஒதுங்கியிருந்தாலும் பத்திரிகையாளர்கள் விடுவதாயில்லை.

அண்மையில் 'இன்டர்நெட்டில்' டயானரவின் நிர்வாணத் தோற்றம் என்று ஒரு படத்தைப் பிடித்துப் போட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

ஸ்பெயின் நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள குட்டித் தீவுகளுக்கு டயானா அண்மையில் விஜயம் செய்திருந்தார். அப்போது கடற்கரையில் அவர் குளித்திருக்கின்றார். அதன் பின்னர் சூரியக்குளியல் போடுவதற்காக வெறும் 'டவல்' ஒன்றைச் சுற்றிக் கொண்டு அவர் கடற்கரையிலிருந்தார்.

அவரது ஒவ்வொரு நகர்வையும் சில பத்திரிகைக் கமராக்காரர்கள் தமது கமராவில் 'ஸூம் லென்ஸ்களை' பூட்டிக்கொண்டு அவதானித்துக் கொண்டிருந்தனர்.

வெறும் டவலால் உடலைச் சுற்றிக்கொண்டு சூரியக் குளியல் குளித்துக் கொண்டிருந்த டயானாவின் கை தடுமாறி டவல் திடீர் என அவிழ்ந்து விழுந்ததாம். பட்டென்று படம் பிடித்துப் பத்திரிகையில் பிரசுரித்துவிட்டோம் என்கின்றார்கள் பத்திரிகையாளர்.

இந்த விடயம் நீதிமன்றம் வரை இப்போது போயிருக்கின்றது.

கம்பியூட்டர் மார்பிங் மூலமும் டயானாவின் பட்த்தை நிர்வாணமாக்கியிருக்கக்கூடும் என்றும் ஒரு பேச்சு அடிபடுகின்றது.

எது உண்மை எது பொய்யோ தெரியவில்லை. ஆனால் டயானா தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கிக் கொண்டிருக்கின்றார்.

# சனத் ஜெயசூரியா குறித்து கல்கி

இலங்கையைச் சேர்ந்த — உலகப் புகழ் பெற்ற— கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியா குறித்து தமிழகத்திலிருந்து வெளி



வரும் 'கல்கி' இதழ் வெளியிட்ட தகவல்கள் இவை:—

ஜெயசூரியாஅதிகம் படித்தவரில்லை;ஏழ்மையான குடும்பம்; மிகமிக எளிமையானவர்; பணிவு மிக்கவர். எட்டு முழ வேட்டியுடன் வெறும் தரையில் படுத்துத் தூங்குபவர். கட்டில் கூட கிடையாது. புத்த மதத்தைச் சேர்ந்த இவர் அபார தெய்வ பக்தி மிக்கவர்; திருப்பதி வெங்கடாசலபதி மீது பக்தி மிக்கவர். இந்தியாவுக்கு வரும் போதேல்லாம் அங்கு சென்று வழிபடத்தவறாதவர். ஜெயசூரியாவுக்கு தமிழ்த் தெரியும்.

இவ்வளவும் உண்மையா?

# சீனப் பெருஞ்சுவர்!

முந்திய சஞ்சீவிகளில் பிரமிட், பைஸா நகரத்து சாய்ந்த கோபுரம் ஆகிய அதிசயங்களைப் பார்த்தோம். மற்றொரு அதிசயம் சீன தேசத்து பிரமாண்டமான மதிற்சுவர் (The Great Wall of China)

சுமார் 1684 மைல் நீளமானது இச்சுவர். இதன் உயரம் 15 இலிருந்து 30அடி வரை இடத்துக்கு இடம் மாறுபடுகின்றது. சுவரின் மீது ஆங்காங்கே காவல் மடங்களும் கட்டப்பட்டுள்ளன.

கி.மு 221 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 15 ஆண்டுகளில் இந்த நீண்ட சுவர் கட்டி முடிக்கப்பட்டது.

வடக்குப் பகுதியிலிருந்து வரும் மங்கோலியப் படையெடுப்புக்களைச் சமாளிப்பதற்காக போஹாய் விரிகுடாவில் உள்ள ஷான் ஹிகுவானிலிருந்து கன்ஸூவிலுள்ள சிங்க்குமன் வரையும் ஹீஹுவாங் என்றமன்னனால் இது கட்டுவிக்கப்பட்டது,

இன்று இந்தச் சுவர் பல இடங்களில் உடைந்திருந்தாலும் இதன் பெரும் பகுதி இன்றும் பத்திரமாக உள்ளது.

# ஆவேசத்தால் அதிரும் ஆரணங்குகளும் அவலத்தால் அந்தரிக்கும் ஆண்களும்!

கணவர்மாரின் தொல்லைகளைத் தாங்க முடியாத பெண்கள் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல் ஆவேசமுற்று பொங்கி எழுந்து செய்யும் ஒரு 'வேலை' இப்போது மேல் நாடுகளில் பிரபலமாகிக் கொண்டு வருகின்றது.

தங்களைக் கொடுமைப் படுத்தித் தொல்லை தரும் கணவர்மார் நித்திரையானதும் அவர்களின் ஆணுறுப்பை வெட்டி எறிந்து சாதனை செய்து வருகின்றார்கள் மேல்நாட்டுப் பெண்கள்,

இத்தகைய மூன்று, நான்கு சம்பவங்கள் குறித்துக் கடந்த இரு வாரங்களில் கொழும்புப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவ்வாறு அறுத்த உறுப்பை மீண்டும் பொருத்தி மேல்நாட்டு டாக்டர்கள் சாதனை புரிந்தது குறித்தும் அச்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் உஷாரடைந்த மற்றொரு வீட்டுப் பெண் அதற்கும் இடம் கொடுக்காமல் ஓர் அதிபுத்திசாலித்தனமான வேலையைச் செய்திருக்கின்றாள். இறைச்சி வெட்டும் கத்தியால் நாற்பது வயதுடைய தனது கணவனின் உறுப்பை வெட்டிய கிம் பொங் ட்ரான் (வயது 37) என்ற அந்தப் பெண் இரத்தம் சொட்டச் சொட்ட அந்த உறுப்பைத் தூக்கிக்கொண்டு மலகூடத்துக்கு ஓடிப்போய் மலகூட பேசினுக்குள் போட்டு தண்ணீரை 'பிளாஷ்' செய்து விட்டாள். இந்தச் சம்பவம் வான்கூவர் நகரில் பத்து நாளைக்கு முன்னர் நடந்தது.

தனது பெண் நண்பியின் கோபத்தினால் ஆணுறுப்பு வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் ஜூலியோ லூனா [வயது 20] என்ற மற்றொரு நபர் சில தினங்களுக்கு முன்னர் கலிபோர்னியா நகர ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

வீதிகள், பொது இடங்களில் திடீரென சகல உடைகளையும் களைந்து போட்டு ஓடும் பைத்தியக்காரத்தனங்கள் மேல்நாட்டில் அடிக்கடி நிகழ்வதுண்டு. அதனை 'ஸ்ட்ரிகிங்' என்று சொல்வார்கள்.

அதேபோல இவ்வாறு கொடுமைக்கார கணவனுக்கு எதிராக மனைவி பொங்கி எழுவதை 'பாபிட்டிங்' செய்வது என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தப் பெயர் வந்தது எப்டித் தெரியுமா?

பொழுது போனால் போதும்... நன்றாக 'சரக்கு' ஏற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்து, மனைவியின் இடுப்பில் எட்டி உதைப்பதையே தொழிலாகக் கொண்டவர் ஜோன் வெயின் பாபிட்.

இவ்வாறு ஒரு நாள் மனைவியைக் கொடுமையாகச் சித்திரவதை செய்து விட்டு ஆழ்ந்த தூக்கத்துக்குப் போய் விட்டார் பாபிட். பூ அன்று புயலானது. எடுத்தார் மனைவி கத்தியை. அறுத்தார் கணவரின் 'அதை'!

அமெரிக்காவில் அந்தப் பெண்ணுக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாதங்கள் சூடு பறந்தன.

இதற்கிடையில் பாபிட்டின் அந்த உறுப்பைத் தேடி எடுத்துப் பொருத்தி விட்டாலும் கொடுமைக்கார கணவனுக்கு எதிராக மனைவி இப்படிப் பொங்கி எழுவதை 'பாபிட்டிங்' செய்வது என்றே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

இப்போது பாபிட் ஐந்து லட்சம் டொலர் சம்பளத்தில் ஒரு படத்தில் நடித்தார். 'அடல்ட் ஃபிலிம்' என்ற பெயரில், அவருக்கு நடந்த 'ஒப்பரேசன்' பற்றிய கதையைப் படமாக்கி இங்கிலாந்தில் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இந்த மாதிரி மோசமான —கெட்ட—சமாச்சாரங்களில் புகழ்பெற்று வருவதற்கு அமெரிக்காவில் 'வைற்ராஷ் கல்ச்சர்' என்று பேரே வைத்திருக்கின்றார்கள்.

சரி, இந்தக் கதையைக் கேட்டு நம்மூர் கணவர் ஒருவர் முணுமுணுப்பது என்ன தெரியுமா?

'கொல்லனிடம் சொல்லி இரும்பில் —சரியான அளவில் — பாதுகாப்புக் கவசம் ஒன்று போட்டுப் பூட்டி, பூட்டுத் திறப்பை ஒளித்து வைத்து விட்டுத் தான் இனிமேல் தூங்கச் செல்ல வேண்டும் போல...' —என்று வாய்க்குள் முணுமுணுக்கிறார் அவர்.

பெண்ணுரிமைக்குப் போராட்டம் என்ற காலம் மலையேறி, 'ஆண்களைக் காப்பாற்ற அணி திரள்வோம்' என்று கோஷம் எழுப்பும் காலம் வந்து விட்டது என்கிறார் மனைவியின் பின்னால் திரியும் மற்றொரு கணவர்.

# 500 ஆண்டுகளுக்கு முன் கொலையுண்ட இளம்பெண்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்யப் பட்ட ஓர் இளம் பெண்ணின் சடலம் பெரு நாட்டின் பனிப்பாறைகளுக்கு இடையிலிருந்து, சேதாரமில்லாமல் கிடைத்திருக்கிறது! இந்தச் சடலத்தோடு ஒரு செப்புத் தகடும் இருந்தது. அதில் 'மாதம் ஓர் அழகியைக் கடவுளுக்குப் பலியிடுவதன் மூலம் நாடு சுபிட்சம் பெறவேண்டி, இவள் ஐந்நூறாவது நபராகப் பலியிடப்படுகிறாள். மலை உச்சிக்கு அழைத்துவரப்பட்டு தலையில் பாறாங்கல்லால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள்' என்று ஒரு பயங்கர குறிப்பு!

இப்போது டாக்டர்கள் அந்தச் சடலத்தைஆராய்ந்து கொண்டிருக்க, பொலீஸாரோ சம்பந்தப்பட்ட பனிமலையை ஓர் அடி விடாமல் அலசிக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# சிக்கனம்

## மு.சிவநேசன்

வேப்பமரத்தடி வேரிலை குந்தி இருந்து கள்ளுக் குடிக்கிறதெண்டால் அந்தச் சுகம் கனடாவிலும் கிடையாது பாருங்கோ. ஒரு கையிலை பருத்தித்துறை வடையையும் கடிச்சு, உதயன் பேப்பரையும் ஒரு பிடிபிடிச்சு—முச்சந்தி முரளி ஸ்டையிலிலை ஒரு விமரிசன அரங்கு நடத்திப் போடுவம்.

பிள்ளையள் கனடாவிலை இருந்து உழைச்சு அனுப்புகினம். பென்சன் காசு எந்த மூலைக்கு? எண்டாலும் ஏதோ வடைச் செலவுக்கு எண்டாலும் கையிலை வருகுது.

தினசரி காலையிலை எங்கடை கூட்டம் பேப்பரோடை தொடங்கும். எல்லாம் அலசி ஆராய்ஞ்சு பேப்பர் கரைஞ்சுபோம். இந்தக் கொழும்புப் பேப்பர்களும் இந்த உதயன் மாதிரி உருசி இல்லைப் பாருங்கோ.

பத்து மணிக்கு மரக்கறி, மீன் வாங்க எண்டு கூட்டம் கலைஞ்சிடும்; பின்னேரம் 3 மணிக்கு கணகணப்பாத் தொடங்கும். வயசு போனதுகள் மாதிரியே இருக்கும்? உள்ளுக்கு வந்து கொஞ்ச நேரம் இருந்து பாருங்கோ... றோட்டாலை போற வாற ரியூசன் பெட்டையளை விமர்சிக்கிறதை......ஆரை விட்டது? பாவம் பேரப்பிள்ளையள் மாதிரி.

எங்கடை மெம்பர் சின்னப்பொடி அப்பு பிள்ளையள் எல்லாம் நெருக்கினதிலை கனடாவுக்குப் போட்டார். கிளாலியாலை போக வயது இடந்தராதெண்டு தவிச்சவர் இப்ப பிளேனிலை கொழும்புக்குப் போய் அங்காலையும் போட்டார்.

எழுதின காயிதத்தைப் பார்க்கப் பரிதாபமாகஇருக்கு வாசிக்கட்டே......கேளுங்கோவன்.

கனடா,
10-5-97.

வேப்பமரத்தடிச் சங்கத்தாருக்கு!

சுகமில்லை; நலமில்லை; இங்கிருக்க மனமில்லை; இனி வர வழியில்லை.

இஞ்ச கிடைக்கிற விஸ்கி, பிரண்டி என்ன உந்தக் கள்ளுக்கு வருமே? இந்தக் குசன் கதிரை என்ன எங்கடை வேப்பம் பட்டைக்கு வருமே? தோளிலை துவாயைப் போட்டுக் கொண்டு வேப்பங் காத்து வாங்கிறதாகக் கனவு கண்டனான், எல்லாம் போச்சு!

அந்த நாளிலை லண்டன் மெற்றிக்குலேசன் பாஸ் பண்ணின எனக்கு பேத்தி இங்கிலீஷ் படிப்பிக்கிறாள். அவகளுடை உடுப்பும், எடுப்பும் என்னை என்னமோ செய்யுது. வேப்பமரத்தடியாலை போற எங்கடை பேத்தியள் எவ்வளவு பறவாயில்லை. பூப்போட்டுக் கும்பிடலாம்.

நான் வீட்டிலை மறியல் தான். என்ரை உடம்பை நான் பார்த்து மாதக் கணக்கு. ஒரே போர்வை. குளிர்விறைக்குது.வெளியிலை இறங்கிறதேயில்லை. நீங்கள் ஒருத்தரும் நினைச்சும் பாக்க வேண்டாம்.

இஞ்ச இருந்து காசு வர உங்க தாராளமாச் செலவழிக்கிற சந்தோசம் உலகத்திலை வேறைஇல்லை. பிறகு மீதம் எழுதுறன். பதில் போடுங்கோ.

பழைய மெம்பர்,
சின்னப்பொடி.

கிழட்டுப்பிள்ளையின் (நாங்களும்தான்) காகித விமர்சனம் முடிஞ்சு கதை ஊருக்குத் திரும்பிவிடுத்து. ஒவ்வொருத்தருக்கும் வெளி நாட்டாலை வாற காசு வரவு செலவு எல்லாம் வீட்டிலை சரிவர தெரியுமோ இல்லையோ இங்கை ஒப்பிக்கிறது வழக்கம்.

என்னைப் பார்த்து எல்லாருக்கும்கொஞ்சம்பொறாமை. அவையள் கொஞ்சம் கொஞ்சம் பொறுப்புகளோடை எல்லோ இருக்கினம். எனக்கு எல்லாரும் வெளியிலை. நானும் கிழவியும்தான்.

வாழுற காலத்திலை காசுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பம்? பிள்ளைகள் கேட்கிறதை வாங்கிக் குடுக்க வழி இல்லாமல் தவிச்சிருப்பம். இப்ப நிலைமை மாறி.

மாதம் மாதம் போதும் போதும் எண்டக் காசுவந்து குவியுது. பாங்கில மட்டும் ஆறு லட்சத்துக்கு வட்டி வளருது. எனக்கும் கிழவிக்கும் என்ன பெரிய செலவு? இதுகளை விட்டிட்டு சாகத்தான் மனம் வராது போலை இருக்கு.

இப்ப சிமெந்து தாராளமா வருகுது, ஒரு வீட்டைக் கட்டுவம் எண்டு கிழவி ஒரே நச்சரிப்பு.

''ஊரெல்லாம் ஆளில்லாத வீடுகள், நிறைய. இப்பிடி நாளைக்கு எங்கடை வீடும் கிடக்க வேணுமே? ஆர் வந்து குடி இருக்கிறது''

''அதுகள் ஒரு காலத்திலை வராமல் விடுங்களே? லீவு எண்டு எங்களை பார்க்க வந்தாலும் நிக்க வசதியாக எல்லோ இடம் வேணும்?''

''அதுக்கேன் கட்டி மினைக்கெடுவான்? ஒரு பெரியவீடா வாடகைக்கு எடுப்பம். அல்லது வாங்கியாதல் விடுவம்''

''ஆரும் இருந்து சீரழிஞ்ச வீடு எனக்கு வேண்டாம். புதின அமைப்பா கட்டுவம்''

''இப்ப மேசன் மாரும் ஒழுங்கில்லை. பத்து வருசமா சிமெந்து இல்லாமல் வேலையும் மறந்து போச்சு. கட்டி ஒப்பேற்ற எனக்கு வயசும் இடந்தராது.''

''அப்ப போய் கள்ளைக் குடிச்சிட்டு தம்பட்டம் அடியுங்கோ. சிக்கனத்தாரை பாத்தியள்தானே. அவரை விடவா உங்களுக்கு ஏலாது?''

தலையடி போட்டுது கிழவி. சிக்கனத்தாரை வச்சு நானும் ஒரு வீடு கட்ட வேணும் எண்டு ஆசைப்பட்டனான் தான். அடுத்த வளவிலை கப்பல் மாதிரி பங்களா கம்பீரமா நிக்குது — எண்டால் அதுக்கு அந்தத் தனி மனுசன்தான் காரணம்.

நானும் மனுசியும் சிக்கனத்தாரிடை ரசிகர்கள். அவர் செய்யுற ஒவ்வொண்டிலும் நிறையப் பாடங்கள் படிச்சிட்டம். உங்களுக்கும் சொல்லித் த'ரத்தானே வேணும்.

அடுத்த வளவு என்னிடை சகோதரியிடைதான். உணாவும் வேப்பங்கண்டுகளும் நொச்சியும் எண்டு ஒரே பத்தையாகிக் கிடந்தது. ஊர் முழுக்க குப்பை கொட்டுறதும் அதுக்கைதான். பெடியளைக் கனடாவுக்கு அனுப்ப அவ காணியை விக்கப் பட்ட பாடு. இப்பவும் இங்கை ஏதும் வாங்க ஆரும் தயாரில்லை.

இவை ஆரோ பிறத்தி ஊர் ஆக்கள் வந்து காணியைப் பாத்தினம். சிக்கனத்தார் (பெயர் தெரியாது) தான் கூட்டிக்கொண்டு வந்து காட்டினவர். காணியை வாங்கி விட்டினம். ஒரே பள்ளக் காணி; ஊர் வெள்ளம் முழுக்க அதுக்கை; விசயம் தெரியாமல் வாங்கிப்போட்டினம் எண்டு நினைச்சம்.

காணியை வாங்கின பெடியன் எஞ்சினியராம். அவனை அப்ப ஒரு நாளும் நாங்கள் காண இல்லை. சிக்கனத்தார் தான் பஸ்ஸிலை வந்து இறங்கி காணி பார்க்கிறவர். வேண்ட முதலும் சரி பிறகும் சரி அயலட்டை ஊர் ஆக்கள் எண்டெல்லாம் எங்களோடை ஒரு கதையும் கிடையாது.

ஒரு கிழமையிலை சிக்கனத்தார் வந்து தானே தடிதண்டு வெட்டி ஒரு கொட்டில் போட்டு மேஞ்சு குடியேறிட்டார். பத்தை வெட்டி ஒரு துரும்பு கழியாமல் முழுச் சுள்ளியும் பொறுக்கி வடிவாக அடுக்கிப்போட்டார். விறகெண்டால் ஒரு குடும்பத்துக்கு ஆறு மாதத்துக்குப் போதும். நாங்களெண்டால் கொளுத்திப் போடுவம்.

மனுஷன் ஒரு நாளைக்கு 4 கூலி வேலை செய்யும். நான் கண்ட நாளிலை இருந்து அதே சேட்டும் சாரமும் தான். இருக்க எழும்ப கிழிஞ்சு போடுமோ எண்டு எனக்குப் பார்க்கப் பயமாக இருக்கும். கஷ்டப்பட்ட மனுஷன் போலும்.

முதலிலை கிணறு வெட்டினாங்கள். வேலை செய்யுறவங்களுக்கு தேத்தண்ணி சாப்பாடு சிக்கனத்தாரே கொட்டிலுக்கை ஏதோ சமாளிச் சிடுவார். கொட்டுற மண் எல்லாம் பரப்பி தானே சுமந்து காணியை ஒரு மாதிரி லெவல் ஆக்கிப் போட்டார்.

எல்லாத்தையும் பாத்துத் தான் எங்கடை வேப்ப மரத்தடிச் சங்கத்திலை சிக்கனத்தார் எண்டு பட்டமளிப்புச் செய்தனாங்கள்.

நாங்கள் ஊரிலை பிறந்து வளர்ந்தும் சீவிச்சும் இவ்வளவு சிம்பிளா ஒரு வேலை செய்விக்க இடம் வலம் தெரியாது. எடுபிடிக்கும் பத்துப் பேர் வேணும். இதென்னடா எண்டால் சிக்கனத்தார் இருக்கிறார். ஆக்கள் வருகினம். அலுவல் தன்ரை பாட்டிலை தண்ணி போலை ஓடுது.

ஒரு நாள் ஒரு மேசன் போலை — ஒருத்தனோடை வந்து ரேப் பிடிச்சு அளந்து கட்டை இறுக்கி வீட்டுப் பிளான் அலுவல்கள் நடந்துது. அத்திவார வெட்டு வேலையளும் தொடங்கி விடுத்து. ஒவ்வொரு பெட்டி மண்ணையும் தான் நினைச்ச இடத்திலை கொட்டுறதிலை இருந்து ஒவ்வொரு விசயத்திலும் சிக்கனத்தார் வலும் கவனம்.

பாவம். வலும் கஷ்டப்பட்ட மனுசன். சரியான விசுவாசமா வேலை செய்யுது. இப்பிடி எல்லோ கொன்றாக்ரர் அமைய வேணும். அரைச் செலவிலை வீடு கட்டிடலாம்.

வீட்டைக் கட்டிப் பார். கலியாணத்தை நடத்திப் பார் என்பானுகள். இதென்னடா எண்டால் வீட்டுக்காரன் காணியிலை மிதிக்காமலே என்ன கிளீனா வேலையள் ஓடுது.

மேசன் வேலை தொடங்கி விடுத்து. காலையிலை 6 மணிக்கு சிக்கனத்தார் மண் சல்லி போட்டு சீமெந்து போட்டு கலவை இழுக்கத் தொடங்கியிடுவார். எல்லாம் ரெடி. மேசன்மார் வந்திட்டால் வேலையைத் தொடங்க வேண்டியதுதான்.

அவங்களுக்கு தேத்தண்ணி, சமையல் நேரம் போக மிச்சம் நேரம் மனுஷனும் ஒரு கூலி ஆள் தான். கொட்டுப்படுகிற முழுச் சீமெந்தும் உடனை அள்ளி கலவையிலை கொட்டி, தேவையான அளவுக்கு கல்லு வெட்டிக் குடுத்து, கண்டபடி கொங்கிரீட் கல்லுகளை உடைச்சுத் தூளாக்க விடாமல்— எதிலுமே சிக்கனம்தான்.

வேலை முடியுற நேரம் வரைக்கும் கட்டு வேலையள் நடக்கும். வேலை முடிய சாந்து, கொங்கிரீட் ஏதும் [illegible] சரி[illegible] மெழுவல் எல்லாம் சிக்கனத்தார் பாத்திடுவார்.

நானும் ஒரு வீடு கட்ட இவரைத்தான் பிடிக்க வேணும். இந்த வேலை முடிய ஒரு நாளைக்கு கதையைக் குடுப்பம்.என்னாலை குனிஞ்சு வளைஞ்சு — ஓடித் திரிஞ்சு அலுவல் பாக்கிறது ஏலாத காரியம் பாருங்கோ.

தச்சு வேலை நடக்குது, கொட்டுப்படுகிற ஆணியள் எடுத்து வச்சு,நெளிவு நிமிர்த்திவிடுகிறது, சீவல் மரத்தூள் அள்ளி வைக்கிறது, வெட்டுப்படுற, கட்டையள் பொறுக்கி வைக்கிறது எண்டு மனுஷன் பெரிய பிரயாசை. இண்டு வரைக்கும் இவ்வளவு சமையலுக்கும் ஒரு சதத்து விறகு வேண்ட இல்லை. நாங்கள் எண்டால் வீட்டுக் கணக்கிலை விறகுக்குப் பத்தாயிரம் போட்டிருப்பம்.

இதற்கிடையிலை மற்றப் பக்கம் பசுமைப் புரட்சி வரிசையா வடிவா வகை வகையா செம்பருத்தி, குறோட்டன் வேற, கனக்க புது இன மரங்கள், பின்னாலை வாழைத்தோட்டம் எண்டு மனுஷன் பாடுபடுகுது.

இந்தளவு வேலை களைக்கும் பாருங்கோ மனுஷன் ஒரு கள்ளுக்கிள்ளு, பீடி, சுருட்டுக் கிடையாது எண்டு கிழவி என்னைக் கிண்டல் பண்ணுது.

''நீ போய் அவனைக் கட்டன்'' எண்டன் நான்.

ஒரு படி வீடும் முடிஞ்சு பெயின்ற் அடிப்பு நடக்குது. வளவும் சோலையா இருக்கு. காறிலை வந்து பாத்த நாலஞ்சு பெடியளுக்கை எது எஞ்சினியர் எண்டு தெரியாது.

வீடு குடிபுகுதல் பெரிய கொண்டாட்டம். அயலெண்டு எனக்கு மட்டுந்தான் அழைப்பு வந்தது. போனால் ஆரும் கதைக்க இல்லை. பலகாரங்கள், சாப்பாடுகள், உபசரிப்புகளுக்கு குறைவில்லை.

மற்றப்பக்கம் இளசுகளும் தண்ணியும் டான்சும் பட்ட பாடும் ஒரே சமர்க்களம்.

சிக்கனத்தார் அதே சாரமும் சேட்டுமா அதே பின் பக்க கொட்டில் வாசல்லை நிற்கிறார். அவர் தான் சப்ளைஸ்.

பேச்சுக் குடுப்பம் — புக் பண்ணுவம் — வீடுகட்டலாம் எண்டு மெல்ல மெல்ல கிட்டப் போனன்.

''எல்லாம் அங்கைதான் அனுப்பிறது. இஞ்சை ஒண்டும் குடுக்கிறது இல்லை. ஹோலிலை போய் இருங்க. எல்லாம் தருவினம்'' என்றாரே. எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

''அது இல்லை நான் வேற விசயமா......'' முடிக்கவில்லை விருட்டெண்டு உள்ளே போயிட்டார்.

பார்ட்டியள் ஓய ஒரு கிழமை செண்டுது. சிக்கனத்தார் இருந்த இடம் தெரியாமல் போயிட்டார். வீடு கப்பல் மாதிரி மிதக்குது. வேலைக்காரர் கன பேர். இஞ்சினியரும் அவற்றை புது மனிசியும் தான் இங்க குடித்தனம்.

இடைக்கிடை கண்டால் ஒரு சிரிப்பு மட்டுந்தான். எண்டாலும் அதிலை எனக்குப் பெரிய சந்தோஷம்.

ஒரு நாள் பக்கத்து வீட்டிலை பெரிய ஆரவாரம். எஞ்சினியரோடை தகப்பன் செத்திட்டாராம். எல்லாரும் போறாங்களாம். என்ர மனுசிக் கிழவியட்டைத் தான் வீட்டுப்பாரம் குடுக்கினம்.

சரியில்லைத்தானே நானும் போக வெளிக்கிட்டன். ஊர், இடம் எல்லாம் திறப்புத்தர வந்தவையிட்டை விசாரிச்சு வச்சிட்டன்.

பஸ் முழுக்க செத்த வீட்டுக்கு போற சனந்தான். ஏதோ ஸ்பெசல் பஸ் போலை இருந்தது. இறங்கிப் போக வழிநெடுகத் தோரண வரிசை; வீட்டு வாசல்லை கோட்டு சூட்டோடை இஞ்சினியர் நிண்டு கை குலுக்கி சோகமா எல்லாரையும் வரவேற்கிறார்.

வரிசையாய் போய் மரியாதை செலுத்துகிறத்துக்கு கால்மாட்டிலை நிக்கிறம். நிமிந்து கம்பீரமா நிக்கிற ஒரு சோடி சப்பாத்து முதல்ல தெரியுது. பெட்டி பத்தாயிரம் பெறும்.

கோட்டு சூட்டோடை கிடத்தி இருக்கிற உடல் தெரியுது. அந்த நாள்ளை பெரிய உத்தியோகம் பாத்திருப்பார் — எண்டால் எனக்குத் தெரியாத ஆளாயும் இருக்காதே?

கிட்டப் போய் முகத்தை உத்து உத்துப் பார்க்கிறன். எங்கையோ கண்ட ஞாபகம். ஓம் புன்னகை மாறாத முகத்தோடை சிக்கனத்தார்தான் படுத்திருக்கிறார்.

★

## மெய்யுணர்வு

விறகு ஏற்றிப் போகிறது
வண்டி
என் இருப்பைப் பற்றி
வினா எழுப்பிய படி.

## நீச்சல்

காற்றுடன் பொருதி
நடந்தது சைக்கிள்;
விறகுச் சுமையுள்
புதைந் திருந்த
நாளை பற்றிய அவனது
நம்பிக்கையையும்
சேர்த்துக் கொண்டு.

## அகமும் முகமும்

எனக்குத் தெரிகிறது
அவன் புன்னகையில்
குரோதமிருப்பது.
அதைப் புரிந்து புன்னகைக்கும்
என்னுள்ளும் குரோதம்.
மனமிறுகி
முகம் மலர்ந்தோம் நாம்.

- இயல்வாணன்

## ஸ்தானம்

நான் நானாய்
இருப்பதற்கான களமாய்
என் இடம் இருப்பதே
எனக்கும் உனக்கும்
ஷேமம் நண்பனே...!
உன் பொருட்டு நானோ
என் பொருட்டு நீயோ
நிறம் மாற்றிக் கொள்ளுதல்
சரியுமில்லை;
சாத்தியமுமில்லை!
நான் யாருக்கும்
விரோதியல்லேன்,
யாவர்க்கும்
நண்பனுமல்லேன்!
சினேகிப்பதற்கான
அடிப்படைகளை
இழந்துவருகிறது
இவ்வுலகம்.
சமாளித்தும்
சரிக்கட்டியும்
சுயமிழக்கும்
சம்மதத்தை
இழந்துவிட்டது
என்னிதயம்!
இதில்
ஒட்டாது ஒட்டி
அறும் — அறுக்கும்
ஒருவனாய்
ஆவதிலும்
ஒட்டாத் தனியாய்
நான் நானாய்
இருந்து விட்டுப்
போகிறேன்......!

- ந. சத்தியபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது உடன்பாடே தீர்வுக்கு ஒரேவழி!

**'ராவய' கண்ணோட்டம்**

**தமிழில்: கஜனி**

புலிகள் மேற்கொண்ட இரு பாரிய எதிர்த்தாக்குதல்களுக்கும்பின் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வதா? இல்லையா? என்பது குறித்து தீவிரமாக மீள் யோசனை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

## படை நடவடிக்கையின் நோக்கங்கள்

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள யாழ். தீபகற்பத்திற்குத் தரைவழி விநியோகப் பாதையைத் திறப்பதும் —

விடுதலைப் புலிகளைப் போருக்கு அழைத்து, முடிந்தளவு எண்ணிக்கையில் அவர்களை அழித்து, அந்த அமைப்பின் முதுகெலும்பை ஒடிப்பதும் —

ஆகிய இரண்டும்தான் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் குறிக்கோளாகும்.

இந்த இரு குறிக்கோள்களையும் அடைய முடியுமாயின் கைப்பற்றியுள்ள யாழ். தீபகற்பத்தில் தமது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதுடன் யுத்தத்தில் விரைவான இறுதி வெற்றி பெறுவதற்குரிய ஆற்றல் தம்மிடம் உள்ளது என்ற முக்கிய செய்தியை நாட்டுமக்களுக்கு விடுக்கவும் அரசுக்கு வாய்ப்பு ஏற்படும்.

இவையாவும் திட்டமிட்டவாறு நிறைவேறியிருப்பின் விடுதலைப் புலிகளைப் பொருட்படுத்தாது அதிகாரப் பரவலாக்கல் தீர்மானங்களை முன்னெடுப்பது தொடர்பாக அரசாங்கத்திற்கு இருக்கும் ஆற்றலில் நம்பிக்கை வைக்க — உறுதிப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

## தனது பொறியில் அரசுதானே சிக்கியது

ஆனால் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் பொறியில் தாம் சிக்குவதற்குப் பதிலாக அரசாங்கம் வைத்த பொறியில் அரசாங்கத்தையே சிக்கவைப்பதில் பெரிய அளவில் வெற்றியடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் ,வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை தங்களுக்கு தோல்வியைத் தரக்கூடிய யுத்த சூதாக மாற்றிக்கொள்ளவில்லை.

அதற்குப் பதிலாக, தங்களுக்குச் சாதகமில்லாத சந்தர்ப்பங்களில் போரைத் தவிர்க்கும் கொள்கையையும் —

தங்களுக்குச் சாதகமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் சண்டையிடும் கொள்கையையும் —

அனுசரிப்பதன் மூலம் தமக்குச் சாதகமான சந்தர்ப்பங்களை உருவாக்குவதில் விடுதலைப் புலிகள் வெற்றியடைந்துள்ளனர்.

## ஆட்லறிகளே புலிகளின் இலக்கு

இராணுவத்தின் ஆட்லறிகள், அவற்றிற்கான ஷெல்கள் உள்ள இடங்களையே தமது பிரதான தாக்குதல் இலக்காக விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகிறது. இராணுவத்தின் மேலாண்மையை உறுதிப்படுத்தும் முக்கிய ஆயுதமாக விளங்குவதும் இந்த ஆட்லறிகளே ஆகும்.

விடுதலைப் புலிகளிடம் ஆட்லறிகளும் அவற்றுக்கான ஷெல்களும் போதிய அளவில் இல்லை என்பதை அவதானிக்க முடிகிறது,

எனவே இராணுவத்திடமுள்ள ஆட்லறி வலுவை நிர்மூலமாக்கி இராணுவத்திடமுள்ள ஆட்லறிகளையும் அவற்றிற்கான ஷெல்களையும் கைப்பற்றும் குறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் செயற்படுவதைக் காண முடிகிறது.

## புலிகளைத் தோற்கடிப்பது இயலாத காரியம்

இதுவரை இடம் பெற்ற யுத்தத்தின் போக்கை அவதானிக்கும்போது விடுதலைப்புலிகளை யுத்த ரீதியாக — இறுதியாக — தோற்கடிக்க முடியாது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அத்துடன் வெளிப்படையாகத் தெரியும் இந்த நிலைமையில் அடிப்படை மாற்றத்தை மேற்கொள்ள — அதாவது விடுதலைப் புலிகளை முற்றாகத் தோற்கடிக்க வைப்பது — அவ்வளவு சுலபமான காரியமல்ல என்ற புதிய தோற்றத்தை உருவாக்குவதிலும் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது.

உருவாகியுள்ள இந்த நிலைமையானது, அதிகாரப் பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அரசு அனுசரிக்கவிருக்கும் தந்திரோபாயங்களுக்குப் பெரிய அளவில் தாக்கங்களை உருவாக்கக் கூடும்.

## அரசின் முயற்சிக்கு முதல் கிடைத்த பலன்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு தேடும் அதே சமயத்தில் யுத்தத்திலும் முழுக் கவனத்தைச் செலுத்துவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தியதால் —

முன்னைய அரசுக்குப் போர் நடவடிக்கையில் கிடைக்காத பெரிய அளவிலான ஆதரவு இந்த அரசுக்குக் கிடைத்தது.

அது தமிழ் மக்களிடையே ஏதோ ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கியதோடு பரவலான சர்வதேச ஆதரவையும் அரசுக்கு உருவாக்கிக் கொடுத்தது. மேலும் மேற்கொள்ளப்படும் யுத்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் வாய்ப்பாக அது அமைந்தது.

''யுத்தத்தை நாங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. அது விடுதலைப் புலிகளின் தெரிவாகும். நாங்கள் அவர்களை யுத்த ரீதியாகத் தோற்கடிப்போம். அதே நேரம் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அதிகாரப்பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவோம்''— என்ற நிலையை உருவாக்குவதற்கும் தர்க்கரீதியாக அதை ஏற்றுக்கொள்ளச் செய்யவும் அரசால் முடிந்தது,

நாட்டில் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அரசிடம் முக்கிய வேலைத் திட்டங்கள் எவையும் இல்லை. இருப்பினும் யுத்தத்தில் வெற்றி பெற்றால் ஏனைய குறைபாடுகள் யாவும் தானாகவே மறைந்துவிடும் என அரசு நினைக்கிறது.

> **வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் போது அரசு வைத்த பொறியில் அரசையே சிக்க வைத்து விட்டனர் புலிகள்.**

## அரசின் எதிர்பார்ப்பு நிறைவேறியிருப்பின்

இவையாவும் எதிர்பார்த்தவாறு நடந்து முடிந்தால் தென்பகுதி சிங்கள மக்கள் தங்களுக்கும் அரசுக்கும் இடையிலான பிரச்சினைகள் அனைத்தையும் மறந்து அரசுக்கு ஆதரவளிக்கும் நிலைமை உருவாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசின் உத்தேசத் திட்டங்களுக்கு ஐ. தே. கட்சி கூட ஒத்துழைப்பை வழங்கவேண்டிய கட்டாய நிலைமையே உருவாகும். அரசின் திட்டங்களை எதிர்க்க ஐ. தே. கட்சிக்கு வாய்ப்பு ஏற்பட வழியில்லாமல் போகும்.

விடுதலைப் புலிகளை யுத்த ரீதியாக முற்றாக அழிக்கலாம் என்றநோக்கம் கனவாக மாறியுள்ள இந்தச் சூழ்நிலையில் —

யுத்தத்தைவிரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம், அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற அடிப்படையில் முன்னர் அனுசரித்து வந்த அனைத்து வழிமுறைகளையும் கைவிடுவது அல்லது அவற்றில் பெரிய அளவில் மாற்றங்களை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

அரசின் முன்னைய திட்டத்தின்படி அதிகாரத்தை பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை அரசு எதிர் பார்த்து இருக்கவில்லை; முக்கிய எதிர்க் கட்சியான ஐ. தே. கட்சியின் ஒத்துழைப்பையும் அரசு எதிர் பார்த்து இருக்கவில்லை.

## புலிகளை முற்றிலும் முடக்கமுடிந்தால்...

விடுதலைப் புலிகளின், செயற்பாடுகளை முற்றிலும் முடக்க முடியுமாயின் அதிகாரப் பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு அரசுக்குத் தேவைப்படாது.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளை முற்றிலுமாகத் தோற்கடிக்கக்கூடிய நிலை உருவானால் தென்பகுதி சிங்கள மக்களின் ஒத்துழைப்பு அரசாங்கத்தைச்சாரும் என்பதால், அவ்வாறான சூழ்நிலையில் வெளிப்படையாக அரசை எதிர்க்கும் ஆற்றல் ஐ. தே. கட்சிக்கு கிடைக்காது. எனவே அரசியல் உடன்பாடு ஒன்றுக்குஇணங்குவதைத் தவிர ஐ. தே. கட்சிக்கு மாற்றுவழியும் இல்லாமல் போகும்.

இருப்பினும் [illegible] சூழ்நிலையில் அரசமைப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு ஆதரவைப் பெற்றாலும் அதிகாரத்தை பரவலாக்கும் திட்டம் செயல் வடிவம் பெறவாய்ப்புக்கள் இல்லை.

## முதலில் புலிகளின் ஆதிபத்தியத்தை ஒழிக்கவேண்டும்

அதிகாரம் பரவலாக்கும் திட்டம் வடக்குக் கிழக்கில் உரியமுறையில் செயல் வடிவம் பெற வேண்டுமாயின் அப்பகுதிகளில் சிவில் நிர்வாகம் நடைமுறையில் இருக்கவேண்டும்—அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதிபத்தியம் இல்லாத நிலை உருவாகவேண்டும். ஜனநாயக நீரோட்டத்தில் கலந்த தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அவர்களது உயிர் குறித்த அச்சமின்றி செயல்படக் கூடிய அரசியல் சூழ்நிலை அப்பகுதிகளில் நிலவவேண்டும்.

ஆனால் இன்றுள்ள நிலையில் வடக்கில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும்கிழக்கில்தமிழ் பகுதிகளிலும் உயிர் குறித்த அச்சமின்றி சுதந்திரமாகச் செயற்படக் கூடிய சூழ்நிலை இல்லை. அப்பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஆதிபத்தியம் நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் கூட நிலைமை ஓரளவு மாறுபட்டிருப்பினும் அங்கு இராணுவ நிர்வாகமே நடைபெற்று வருகிறது. அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியவுமில்லை; அது சுலபமானதுமில்லை.

> **இதுவரையான யுத்தத்தின் போக்கை அவதானிக்கும் போது புலிகளை - யுத்த ரீதியாக - இறுதியாக - தோற்கடிக்க முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.**

அதன் மூலம் மக்கள் மனதில் அரசு பெறும் உயரிய இடத்துக்கு முன்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாகக் கூடிய எந்த ஒரு தடையும் வலுவற்றதாகவே அமையும்.

அவ்வாறான சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாடு காணாமலும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு ஆதரவைப் பெறுவது அரசுக்கு கடினமான காரியமாக இருக்காது.

## மாறுபட்ட நிலைமை

ஆனால் இன்று உருவாகியுள்ள நிலை இவை யாவற்றிற்கும் வேறுபட்டதாகவே உள்ளது.

அதிகாரத்தை பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த விடுதலைப் புலிகளின் ஒப்புதலைப் பெற வேண்டிய அதே நேரத்தில் ஐ. தே. கட்சியின் ஒப்புதலைப் பெறுவதும் கட்டாயமான ஒரு நிபந்தனையாக மாறியுள்ளது.

இத்திட்டதிற்கு சட்ட பூர்வ அந்தஸ்து வழங்க ஐ. தே. கட்சியின் உடன்பாடும் —

அதை நடைமுறைப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் உடன்பாடும் —

கட்டாய நிபந்தனைகளாக அமைந்துள்ளன.

இது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடுவதன் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முடியாது. மக்கள் கருத்துக் கணிப்பு அரசுக்குச் சாதகமாக அமைந்தாலும் நாடாளுமன்றத்தில் அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும்.

அரசு இந்தச் சிக்கலான பிரச்சினையிலிருந்து விடுபடவேண்டுமாயின் நடைமுறைக்கு ஒவ்வாத மனநிலையில் இருந்து முதலில் விடுபடவேண்டும். இவ்விடயத்தில் தொடர்புடைய ஏனைய இரு தரப்பாராகிய — விடுதலைப் புலிகளினதும் ஐ. தே. கட்சியினதும் — உடன்பாட்டை பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

> **புலிகளை முடக்க முடியாத சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருப்பதால் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கு சட்ட பூர்வ அந்தஸ்து வழங்க ஐ. தே. கட்சியின் உடன்பாடும், அதை நடைமுறைப்படுத்த புலிகளின் உடன்பாடும் கட்டாயமாகி விட்டன.**

## புலிகளின் உடன்பாடு அவசியம்

இவ்வாறான சூழ்நிலையில் அதிகாரப்பரவலாக்கும் திட்டத்திற்கு சட்டரீதியான வலு வழங்கப்பட்டால் கூட, அதற்கு விடுதலைப் புலிகளின் உடன்பாடு கிடைத்தால் மாத்திரமே அதைச் செயல் வடிவில் நடைமுறைப்படுத்த முடியும். இன்றேல் அதிகாரப் பரவலாக்கும் திட்டம் சட்டரீதியாக அங்கீகரிக்கப் பட்டாலும் விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை அத்திட்டத்தை குப்பைக் கூடையில் போட வேண்டிய நிலையே அரசுக்கு உருவாகும்.

தற்போதைய யுத்த யதார்த்த நிலையானது அதிகாரப் பரவலாக்கும் திட்டத்துக்கு சட்ட வலு வழங்குவதிலும் பிரதிபலிக்கக் கூடும். யுத்தத்தில் அரசு வெற்றி பெறுமேயானால் முக்கிய எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியுடன் மாத்திரமின்றி ஜே. வி. பி. போன்ற ஏனைய எதிர்க் கட்சிகளின் உடன்பாடும் உள்ளடங்கும் விதத்தில் தேசிய இணக்கம் ஒன்று எட்டப்பட்டு, தேசிய இனக் கொள்கையை உருவாக்க — வேண்டும். அதற்குதென்ஆபிரிக்காவில்மேற்கொள்ளப்பட்டதைப் போன்று மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பை நாடலாம். விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி அந்த மூன்றாந் தரப்பை நியமிக்கலாம்.

இதன் மூலம் அரசியல் கட்சிகளிடையே இனப்பிரச்சினை உட்பட அனைத்து அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பொது வேலைத் திட்டங்களை உருவாக்க முடியும்.

அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வேறு வழிகள் மூலம் இந்த நிலைமையை வெற்றிகரமாகக்கையாள முடியும்எனச் சிந்திக்க இயலாதுள்ளது. ★

# இருதய... பிரார்த்த...

இருதய நோய்களா... பாதிக்கப்பட்டவர்க... உயிர் வாழ்வதற்கு ம... துவத்துக்கு மேலதிகம... தியானம், பிரார்த்தனை... மத வழிபாடு ஆகியன... நன்கு உதவுகின்றன.

அமெரிக்காவின் ... டெ... ஸாஸ் பல்கலைக்கழகம், இ... தயத்தைத் திறந்து அ... வைச் சிகிச்சைக்கு உ... படுத்தப்பட்ட 232 பே... மேற்கொண்ட ஆய்வுக... இருந்து இத்தகவல் தெ... வந்திருக்கின்றது.

ஒழுங்காக மத வழிபா...

# மனப் ப... உடல் ப...

உடல் கட்டுப்பாடின்... ஊதிப் பருப்பதற்கும் ... நிலைக்கும் தொடர்பு... உள்ளனவா?

நேரடித் தொடர்பு... உள்ளன என்கிறார்... அமெரிக்காவின் கலிபே... னிய தேசிய மருத்து... கல்லூரியின் பிறப்புரி... யியல் ஆய்வு விஞ்ஞானிக...

பல்வேறு வயதுடை... 211 ஆண், பெண்க... தாங்கள் நடத்திய ஆ... களில் இருந்து இவ்விட... தெரிய வந்ததாக அ... குறிப்பிட்டிருக்கிறார்க...

மனித கலங்களில் இ... கும் 'Ob' என்ற பரம்ப... அலகு 'லெப்டின்' எ... ஓமோன் உடலில் ... பதற்குப் பின்னணிய... உள்ளது. இந்த ஓமோ... உடலின் நிறை, பரு... ஆகியவற்றின்றின் அதி... புக்கும் காரணமானதா...

இந்த ஓமோன் சுரப்... கும் உங்கள் மனநிலைக்... (Mood) நேரடித் தொட... இருப்பது கண்டுபிடிக்கப்...

# மொழி... பெண்களு...

மொழி வளத்தி... யாருக்கு அதிகம் உ... களுக்கா?

பெண்களுக்குத்... என்ற சஞ்சிகையில் ... அறிக்கை ஒன்றே... கின்றது.

மொழியைக் ... ஆண்களை விட, ... இருப்பதாகவும் —

இதனால் தமது... களையும் நன்கு வெ... பெண்களுக்கே அதி...

அந்த மருத்துவ...

# உடற்... சிறந்த...

உங்கள் உடலின் நல... நலமின்மை பற்றிய தக... களைக் காட்டும் சிறப்... கண்ணாடி எது தெரியு...

உங்கள் உடலில் ஓ... இரத்தம்தான்.

உங்கள் உடலில் உ... ஒன்பது முதல் பன்னிர... பைந்து இரத்தமும் நிமி... துக்கு ஒரு தடவை உங்... உடலின் ஒவ்வொரு மூலை... முடுக்கு எங்கும் சுற்றி... வந்து விடுகின்றது. அ... வது ஒரு நாளைக்கு ... ரத்து 440 தடவைகள் ... கள் உடல் முழுவதும் இ... தம் 'ரவுண்ட்' அடித்... கொண்டு வந்துவிடும்.

உங்கள் உடலில் உ... ஒவ்வொரு உயிர்க் கலத்... கும் தவறாது 'விசிட்' அ... துத் திரும்புவதால் ... களின் உடலின் எங்... ஒரு மூலையில் இருக்... சுகவீனம், குழப்ப... தொற்று போன்ற பிர... னைகளை டாக்டர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோய்க்கு ...ார்த்தனை மருந்து

... நோய்களால்
...கப்பட்டவர்கள்
...ாழ்வதற்கு மருத்
...கு மேலதிகமாக
..., பிரார்த்தனை,
...பாடு ஆகியனவும்
...தவுகின்றன.
...க்காவின் டெக்
...கலைக்கழகம், இரு
...த் திறந்து அறு
...சிகிச்சைக்கு உட்
...பட்ட 232 பேரில்
...ண்ட ஆய்வுகளில்
...இத்தகவல் தெரிய
...கின்றது.
...ாக மத வழிபாடு

கள், தியானம் போன்ற வற்றில் பங்கு கொள்வோரை விட அவற்றில் பங்குகொள்ளாதவர்களுக்கு இருதய நோய் ஆபத்து மற்றும் பாதிப்பு ஏற்பட மூன்று மடங்கு வாய்ப்புக்கள் இருப்பதாக அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

அந்த 232 பேரில் தங்களை ஆழமான மதவாதிகள் என்று குறிப்பிட்ட எந்த ஒரு நபரும் இந்தப் பரிசோதனைக் காலத்தில் உயிரிழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ...மனப் பாதிப்பாலும் உடல் பருமனாகும்!

...கட்டுப்பாடின்றி
...பருப்பதற்கும் மன
...ம் தொடர்புகள்
...வா?
...த் தொடர்புகள்
... என்கிறார்கள்
...காவின் கலிபோர்
...சிய மருத்துவக்
...பின் பிறப்புரிமை
...ப்வு விஞ்ஞானிகள்.
...று வயதுடைய
...ன, பெண்களில்
... நடத்திய ஆய்வு
...ருந்து இவ்விடயம்
... வந்ததாக அவர்
...டிருக்கிறார்கள்.
... கலங்களில் இருக்
...' என்ற பரம்பரை
... 'லெப்டின்' என்ற
... உடலில் சுரப்
... பின்னணியாக
... இந்த ஓமோனே
... நிறை, பருமன்
...ற்றின் அதிகரிப்
...காரணமானதாகும்.
... ஓமோன் சுரப்புக்
...கள் மனநிலைக்கும்
... நேரடித் தொடர்பு
...கண்டுபிடிக்கப்பட்



டிருக்கின்றது.

மகிழ்ச்சியாக இருப்பவர்களை கொழுத்து விட்டார்கள் என்றும், கவலையாக இருப்பவர்களை உடல் மெலிந்து விட்டார்கள் என்றும் நாம் அடையாளம் காண்பதில் மருத்துவ உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றது போலும்.

## ...மொழித் திறமை ...பெண்களுக்கே அதிகம்

...மொழி வளத்தைப் பயன் படுத்தும் திறமை ...க்கு அதிகம் உள்ளது? பெண்களுக்கா? ஆண் ...கா?

...பெண்களுக்குத்தான். Archives of Neurology ... சஞ்சிகையில் வெளியான மருத்துவ ஆய்வு ...க்கை ஒன்றே இத்தகவலை வெளியிட்டிருக் ...து.

...மொழியைக் கட்டுப்படுத்தும் மூளைப்பகுதி ...களை விட, பெண்களுக்குத்தான் பெரிதாக ...பதாகவும் —

...இதனால் தமது எண்ணங்களையும் உணர்ச்சி ...யும் நன்கு வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் ...ாகளுக்கே அதிகம் இருப்பதாகவும் —

...அந்த மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது.

# பன்றியின் சிறுநீரகங்களை மனிதனுக்கு பொருத்தலாமா?

ஒரு மனிதனின் சிறுநீரகத்தை அல்லது விழிவெண் படலத்தை அல்லது இருதயத்தை இன்னொருவருக்கு மாற்றும் அவயவ மாற்று சத்திரசிகிச்சைகள் வெற்றி கண்டு பல ஆண்டுகளாகிவிட்டன.

ஆனால் பன்றி போன்ற இன்னொரு மிருகத்தின் அவயவத்தை மனிதனுக்குப் பொருத்தக் கூடியதாக மருத்துவ விஞ்ஞானம் முன்னேறுமா?

இந்தியாவில் பன்றியின் சிறுநீரகத்தை மனிதனுக்கு மாற்றிப் பொருத்தி, அந்த மனிதனை உயிரிழக்க வைத்த ஒரு டாக்டர் அண்மையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

ஆனால் அந்த மருத்துவ முறை இன்னும் வெற்றிகரமாக நடைமுறைக்கு வராவிட்டாலும் பன்றியின் சிறுநீரகங்களை மனிதனுக்குப் பொருத்தும் மாற்று விலங்கு அவயவ சிகிச்சை முறை விரைவில் வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துவிடும் என விஞ்ஞானிகள் திட்டவட்டமாக நம்பிக்கை தெரிவிக்கின்றார்கள்.

மனிதரில் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. இதனால் மனிதன் ஒருவன் தனது சிறுநீரகங்களில் ஒன்றை 'பெரிய மனது பண்ணி' சிறு நீரகப் பாதிப்புக்கு உள்ளான மற்றொருவருக்கு தானம் செய்ய முடியும்.

ஆனால் இருதயம், ஈரல் போன்றவற்றை அப்படிச் செய்ய முடியாது. உயிரிழந்து கொண்டிருக்கும் ஒருவரிடமிருந்துதான் அவற்றைத் தானமாகப் பெற முடியும். ஆனால் அப்படிப் பெறுவதில் பல கஷ்டங்கள் உள்ளன.

இதனால் மாற்று அவயவங்களுக்காகக் காத்திருக்கும் நோயாளிகள் அவை கிடைக்காமல் உயிரிழக்கும் நிலைமை நேருகின்றது.

இதனை அடுத்தே மாற்று அவயவங்களுக்கு வேறு விலங்குகளின் அவயவங்களை நாடினால் என்ன என்ற எண்ணம் மருத்துவ உலகுக்கு ஏற்பட்டது.

கேம்பிரிட்ஜைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்று இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது.

பன்றியின் சிறுநீரகங்களை மனிதருக்குப் பொருத்தும் முன் முயற்சியாக பன்றியின் சிறுநீரகங்களை குரங்குகளுக்குப் பொருத்த பரீட்சார்த்தமாக முயற்சிகள் எடுக்கப்பட்டன.

வழமையாக ஓரினத்தின் உடல் பகுதியை அல்லது அவயவத்தை மற்றொரு அங்கியின் உடலில் பொருத்தினால் அந்தப் புதிய பொருளை அல்லது அவயவத்தை அந்த அங்கி வேற்றுப் பொருளாகக் கருதி சேர்க்காமல் தள்ளிவிடும்.

இந்தக் காப்புமுறை அனேகமாக எல்லா விலங்கினங்களிலும் காணப்படுகின்றது. ஒரு விலங்கினத்தின் ஒவ்வொரு உயிர்க் கலங்களிலும் அவற்றின் இயல்புகளைப் பதித்த நிறமூர்த்தங்களும் பரம்பரை அலகுகளும் காணப்படுகின்றன.

அவ்வாறே மனிதரின் உடற் கலங்களிலும் குரங்குகளின் உடற்கலங்களிலும் இத்தகைய நிறமூர்த்தங்களும், பரம்பரை அலகுகளும் காணப்படுகின்றன. இவற்றில் உள்ள ஒரு வகை புரதம் அந்தக் கலம் தன்னுடைய இனத்தைச் சேர்ந்த கலமா அல்லது வேறு பிற பொருளா என்பதை உடல் அடையாளம் கண்டு கொள்ள உதவுகின்றது.

எனவே பன்றிகளின் சிறுநீரகங்களை குரங்குகளுக்குப் பொருத்தும் போது அந்தச் சிறுநீரகங்கள் தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவை அல்ல என்று குரங்கின் உடல் கண்டு பிடித்து அதனை ஒதுக்கி விடும் நிலை தோன்றும்.

இதைத் தவிர்ப்பதற்காக குரங்கின் உடல், தனது இன உடல் கலங்களை அடையாளம் காண உதவும் புரத வகையை, பரம்பரைப் பொறியியல் மூலம் ஒரு தொகுதி பன்றிகளின் உடற் கலங்களிலும் பதிக்க வைப்பதில் விஞ்ஞானிகள் முதலில் வெற்றி கண்டனர்.

அதன் பின்னர், அத்தகைய பன்றிகளில் இருந்த சிறுநீரகங்கள் அகற்றப்பட்டு, ஏழு குரங்குகளுக்குப் பொருத்தப்பட்டன.

வழக்கமாக — இவ்வாறு வேற்று இன அவயவத்தை ஒரு விலங்கின் உடலில் பொருத்தினால் அந்த அவயவம் ஏற்க முடியாததாக அவ்வுடல் அடையாளம் கண்டால் அடுத்த கணமே அந்த அவயவத்தை நிராகரித்துவிடும்.

ஆனால் பரம்பரையியல் தொழில் நுட்பத்துக்கு உட்படுத்தப்பட்ட பன்றிகளின் சிறுநீரகத்தை — வேற்று இன அவயவம் என அடையாளம் காணமுடியாத — குரங்குகளின் உடல்கள் அவற்றை ஏற்றுச் செயற்படத் தொடங்கின.

என்றாலும் அந்த ஏழு குரங்குகளும் ஏழு வார காலத்துக்குள் வெவ்வேறு பிற காரணங்களால் உயிரிழந்தன.

ஆகக் கூடிய காலம் வாழ்ந்த நான்கு குரங்குகள் இரத்தச் சோகையால் உயிரிழந்தன. மற்றொரு குரங்கு சிறுநீரகத் தடையால் மரணமாயிற்று. மற்றைய இரு குரங்களும் வழக்கமாக மனிதனுக்கு — மனிதன் அவயவ மாற்று சிகிச்சைகளின் போது உயிரிழப்பை ஏற்படுத்தும் மருத்துவக் காரணங்களால் உயிரிழந்தன.

இந்தச் சோதனைகளில் பகுதியாகக் கிடைத்திருக்கும் வெற்றி பன்றியின் அவயவங்களை மனிதனுக்குப் பொருத்தக்கூடிய மருத்துவ முறைகள் வெற்றியளிப்பதற்கான முதல் படி என ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

மனிதர்களுக்குப் பொருத்தப்படவேண்டிய மாற்று அவயவங்களை எதிர்பார்த்து உலகில் உள்ள பல முன்னணி மருத்துவமனைகளில் பல்லாயிரக் கணக்கானோர் பதிவு செய்துவிட்டு காத்திருக்கின்றார்கள், அப்படிக் காத்திருப்போர் எண்ணிகையும் அவர்களுக்குத் தேவையான உடற்பாகங்கழும் வருமாறு;-

- சிறுநீரகம் — 128,017
- ஈரல் — 8, 448
- இதயம் — 7,026
- சுவாசப்பை — 3,122
- இருதயமும் சுவாசப்பையும் — 663
- கணையம் — 523

## மருத்துவ உலகில் புதிய கண்டு பிடிப்புகள்

## வைத்திய சஞ்சீவி

தயாரிப்பு: ராம்

# ...உடற் சுகவீனத்தைக் காட்டும் சிறந்த கண்ணாடி இரத்தம்!

...ர் உடலின் நலம்,
...ம் பற்றிய தகவல்
...காட்டும் சிறப்புக்
... எது தெரியுமா?
... உடலில் ஓடும்
...தான்.
... உடலில் உள்ள
...தல் பன்னிரண்டு
...இரத்தமும் நிமிடத்
... தடவை உங்கள்
...ஒவ்வொரு மூலை,
...ங்கும் சுற்றி ஓடி
...விடுகின்றது. அதா
... நாளைக்கு ஆயி
... தடவைகள் உங்
... முழுவதும் இரத்
...ண்ட்' அடித்துக்
... வந்துவிடும்.
... உடலில் உள்ள
... உயிர்க் கலத்துக்
...து 'விசிட்' அடித்
...நம்புவதால் உங்
...டலின் எங்கோ
...லயில் இருக்கும்
... குழப்பம்,
... போன்ற பிரச்சி
... டாக்டர்கள்

இரத்தத்திட மிருந்துதான் 'கேட்டுத்' தெரிந்து கொள்கின்றார்கள்.

ஒரு குண்டூசி போன்ற ஊசி முனையால் உங்கள் விரலில் குத்தி, அழுத்தி எடுக்கும் ஒன்று அல்லது இரண்டு துளி இரத்தத்தை பல்வேறு பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதன் மூலம் 'இரத்தத்துடன் பேச்சு நடத்தி' உங்கள் உடலின் நிலைமையை டாக்டர்கள் அறிந்து கொள்கின்றார்கள்.

உங்கள் உடலின் முழுப் பகுதிகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் செல்வதற்காக உடல் முழுவதும் நாடிகள், நாளங்கள், குருதி மயிர்க்குழாய்கள் என்று பல்வேறு இரத்தத்தைக் கடத்தும் 'பைப்புகள்' உள்ளன.

உங்கள் உடலில் உள்ள இந்த நுண்ணிய குருதி மயிர்க்குழாய்கள் வரை அனைத்து இரத்தக் குழாய்களையும் ஒன்றின் பின் ஒன்றாக வரிசையாக அடுக்கினீர்களானால் அதன் நீளம் எவ்வளவாக இருக்கும் தெரியுமா? 70 ஆயிரம் மைல்கள் நீளம் வரும்.

இவ்வளவு நீளமான குருதி மயிர்க்குழாய்கள் உங்கள் உடலில் பரந்து கிடக்கின்றன என்று கூறுவதை நம்ப ஆச்சரியமாக இருக்கின்றதா?

இரத்தம் இவ்வளவு நுண்மையாக உடல் முழுவதும் பரந்து பரவி சென்று வருவதால்தான் இரத்தப் பரிசோதனைகளின் மூலம் உங்கள் உடலின் பல உடற் குறைபாடுகளை மருத்துவர்கள் அறிய கூடியதாக இருக்கின்றது.

'இரத்தம் தண்ணீரை விடத்தடிப்பானது' என்ற சொற் தொடர் வழக்கத்தில் உள்ளது. அது உண்மை தான். தண்ணீரை விட இரத்தம் அடர்த்தி கூடியதே.

# வாழைப்பழங்கள் மூலமாக நோய்த் தடுப்பு மருந்துகள்

## அமெரிக்க ஆய்வாளர்கள் வெற்றி

உயிர் கொல்லும் நோய்களிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு இனிமேல் தடுப்பூசிபோடத் தேவையில்லை. ஒரு வகை வாழைப்பழங்களைப் பிள்ளைகளுக்கு உணவாகக் கொடுத்தால் போதும்.

அத்தகைய வாழைப்பழங்களை உருவாக்குவதில் அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

நியூயோர்க்கில் உள்ள ஒரு தாவர ஆய்வு நிறுவன விஞ்ஞானிகளே இத்தகைய முயற்சியில் வெற்றி கண்டிருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

எனினும் இந்த வழிமுறை நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் சில காலம் பிடிக்கும் எனக் கூறப்படுகின்றது.

அம்மை, போலியோ போன்ற உயிர் கொல்லி நோய்களுக்கு வாய் மூலமும் ஊசி மூலமும் தடுப்பு மருந்துகள் பிள்ளைகளுக்குச் செலுத்தப்படுவது நாம் அறிந்ததே.

இந்த நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளில் வீரியம் குறைந்த கிருமிகளையோ அல்லது உயிரிழந்த கிருமிகளையோ இந்த மருந்துகள் மூலம் மனிதனின் உடலில் செலுத்தும் போது அத்தகைய கிருமிகளுக்கு எதிரான — வீரியம் மிக்க — எதிர்ப்புசக்தியை — நீர்ப் பீடனத்தை மனித உடல் தானாகத் தயாரித்துக் கொள்கின்றது. இது தான் வழமையான நடைமுறை.

இத்தகைய நீர்ப்பீடனத்தை தமது உடல் உருவாக்கிக் கொள்வதற்கு தூண்டும்ஒரு பொருளாக (Antigen) உயிரிழந்த கிருமியின் உடலோ அல்லது வீரியம் குறைந்த கிருமியோ நேரடியாகத் தேவையில்லை. அந்தக் கிருமியின் பரம்பரை அலகுகளை (Genes) கொண்ட அமைப்பு போதுமானதாகும்.

இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டே புதிய ஆய்வை நிபுணர்கள் மேற்கொண்டார்கள்.

குழந்தைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தொற்று நோய்களில் முக்கியமானது ஒன்று ஈரல் அழற்சி நோய் — Hepatitis B. இந்த நோய்க்குஎதிரான நீர்ப்பீடனத்தை உருவாக்கக் கூடிய பொருளை (Antigen) உருளைக் கிழங்கில் உருவாக்குவதற்கு முதலில் முயற்சி எடுக்கப்பட்டது. பரம்பரை இயல் தொழில்நுட்பம் (Geneticall Engineering) மூலம் கிழங்கின் பரம்பரை இயல்புகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் அதில் ஈரல் அழற்சி நோய்க்கு எதிரானநீர்ப்பீடனத்தை உருவாக்கக் கூடிய பொருளாக (Antigen) பதிப்பதில் நிபுணர்கள் வெற்றி கண்டனர்.

இந்த கிழங்கை எலிகளுக்கு உட்கொள்ளக் கொடுத்ததன் மூலம் ஈரல் அழற்சி நோய்க் கிருமிகளுக்கு எதிரான நீர்ப்பீடனம் எலிகளில் உருவானது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் இந்தக் கிழங்கு மூலம் நோய் எதிர்ப்பு நீர்ப்பீடனத்தை உருவாக்கும் முறை மனிதரில் நடைமுறைச் சாத்தியமற்றது என்பது பின்னர் அறியப்பட்டது. ஏனென்றால் கிழங்கை மனிதர் பச்சையாக — அப்படியே — உட்கொள்வதில்லை. அவித்தே சாப்பிடுகின்றார்கள். ஆனால் கிழங்கை அவிக்கும் போது மேற்படி நீர்ப்பீடனத்தை ஏற்படுத்தும் பொருள் (Antigen) அழிந்து போய்விடுகின்றது.

அதனால் மனிதர் அவிக்காமல் — பச்சையாக—உட்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

எப்பொழுதும் நன்மையே செய்து கொண்டிருந்தால் நல்வினைப் பயன் மட்டுமா கிட்டும்? புகழும் வளர்கிறதே. புகழ் உச்சம் அடையும் போது மயக்கம் வந்து விடும். இது தவிர்க்க முடியாதது.

யாரும் பப்பா மரத்தில் ஏற்றும் போதே மயங்கும் நம் சிற்றறிவு, புகழைக் கண்டால் என்னாகும்?

எனவே தான் நல்வினையும் வேண்டாம் என்றார் வள்ளுவர். புகழுக்காகவே கோயில், தொண்டு, வழிபாடு என்று வாழ்க்கையில் நடிப்பவர்கள் எத்தனை பேர்? அவர்கள் வராத அன்று கோயிலில் பூசையே நடக்காது!

நாலுபேர் கூட நின்றால் நாற்பது முறை விழுந்து கும்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள், பலரும் காணக் காண கண் மூடி மௌனியாக உருகி நின்று பூரிக்கும் நடிகர்களும் பலர் இருக்கத் தான் செய்கிறார்கள்.

கோயிலிலே அரசியல் நிர்வாகம் நடத்தி விடுகிறார்கள் சிலர். அடுத்தவனைத் தள்ளி விழுத்தி தான் மிதந்து நின்று தொண்டு செய்கின்றவர்கள் இருக்கிறார்கள்.

தன்னைத்தானே பாராட்டுவதுடன் பரமதிருப்திப்பட்டுப் பாராட்ட எவருமில்லாக் குறையைப் போக்கும் அற்பர்களைக் கண்டிருக்கிறோம்.

நடிக்கவும் வேண்டாம்; உண்மையில் நீ நல்வினையும் செய்து மயங்க வேண்டாம். தீவினையும் செய்து கலங்கவும் வேண்டாம் என்று தெளிவாகக் கூறிவிட்டார் வள்ளுவர்.

இருவினையும் சேரா- நீ இறைவனைச் சுத்தமாக எண்ணிச் சேர்ந்து விட்டால், அவனின் அறிவுப் பொருளில், அவனின் புகழில் மயங்கி விட்டால் — நல்வினையும் தீவினையும் உனைச் சாரா.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

என்றார் வள்ளுவர்.

—0005

(கடவுள் வாழ்த்து)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## (19 - 07 - 1997 முதல் 25 - 07 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | *சூ |
| வி | | | வெ பு ரா |
| சந் | | | செ |

மாற்றம்:
சந்திரன் - பூராடம்-தனுவில்.
20-7-97 ல் - சிங்கத்தில் புதன்.
21-7-97ல்-சிங்கத்தில் வெள்ளி.

பதற்ற நிலையும், பதுக்கல் நிலையும் மேலிடும். அரசியலில் திசைதிருப்பங்கள் ஏற்படும். இந்திய அரசியலில் புதியன புகுதலும் பழையன கழிதலும் என்பதற்கிணங்க சில செயற்பாடுகள் நிகழும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** எதிர்நீச்சல் போட்டு, போராடி வாழும் உங்களை எவரும் இலகுவில் ஏமாற்றிவிட முடியாது. வாழ்க்கை என்றால் பலதும், பத்தும் நடக்கத்தான் செய்யும். எந்த அலுவல்கள் செய்தாலும் அலைச்சல் என மனம் சோர்ந்துவிடலாகாது. பணம் தாராளமாக வரும். சத்துருக்கள் உங்களை வெல்ல முடியாது. உங்கள் புத்தியால் புத்திரர்களுக்கும், குடும்பத்தவர்களுக்கும் இனஜனங்களுக்கும் கட்டுமீறிய செலவுகள் இருந்தாலும் தலைக்கு மேலா போகப் போகின்றது? துணிவே துணை எனத் துணிந்து செயற்பட்டுச் சமாளியுங்கள்.

**இடபம்:** நீங்கள்அடிக்கடி நல்லவற்றையே செய்வீர்கள். கோபப்படுவதனால் என்ன இலாபம்? கொஞ்சம் நிதானமாக நடவுங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். மறைமுக எதிராளிகள் பலவீனப்படுவார்கள். நீங்கள் பயப்பட்டு, கவலைப்பட்டுக் கொண்டு இருப்பதனால் எவ்வித அர்த்தமும் இல்லை. பொருள்களில் கொஞ்சம் கவனமாக இருங்கள். களவு ஒன்று போக அல்லது வீண்விரயம் ஏற்படப் பலன் இருக்கின்றது. புத்திரருக்கு உறவினர்கள் நன்மை செய்வார்கள். வீட்டில் கலகலப்பு, விருந்து இருக்கச் செய்யும். வீண் கவலைகளை விட்டுவிடுங்கள்.

**மிதுனம்:** நீங்கள் எவ்வளவு பிடிவாதமாக இருந்தாலும் கொஞ்சம் நிதானமாக நடவுங்கள். வயிறு, கண், கை,கால்நோ சர்வசாதாரணம். எதற்கும் வீணாகப் பயப்படத் தேவையில்லை. நண்பர்கள் உதவினாலும் கொஞ்சம் பிரச்சினைகள் அவர்களால் வரத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் தொல்லைகளும், போட்டிகளும், பயனற்ற செயற்பாடுகளும் ஏற்படத்தான் செய்யும். அதிகம் அலட்டிக் கொள்ளாதீர்கள். இனஜனங்கள் வீண் பழி சுமத்துவார்கள். கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளுங்கள்.

**கடகம்:** உலக இரகசியங்களை அறிய முற்படும் சுபாவம் உடைய நீங்கள் எதற்கும் பொறுமையாக இருக்க வேண்டும். மற்றவர்கள் உங்களைப் பெருமையாகப் பேச வேண்டும் என்றா எதிர்பார்க்கிறீர்கள்? திடீர் பூமி லாபம்,குடும்பத்தில்சுபமங்களப்பேச்சுக்கள், நண்பர்களின் உதவிகள், தெய்வ பக்தி மிக்கவர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். ஆயினும் உங்கள் படபடப்புப் பேச்சுக்கள் மற்றவர்களின் உள்ளத்தில் கொஞ்சம் வெறுப்பைக் கொடுக்கும்.

பேசி உங்களுக்கு வஞ்சனைகள் செய்வர். தொழில் ஸ்தானத்தில் பணவரவுகள் வரும். சிலருக்கு கைகாலில் காயங்கள் வரச் செய்யும். அவதானமாக இருக்கவும். உங்கள் குடும்பத்தின் குறை குற்றங்களைப் பிறருடன் பேசாதீர்கள். அவர்கள் கேட்டுவிட்டு ஒன்றைப் பலதாக்கி உங்களைக் கேலி செய்வர். சிலருக்கு இட மாற்றங்கள் வரத்தான் செய்யும்.

**விருச்சிகம்:** நீங்கள் எப்பொழுதும் கலகலப்பாகவும் ஏட்டிக்குப் போட்டியாகவும் நடக்கவே உங்களை அறியாது சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் பதற்ற நிலை உங்களால் ஏற்படத் தான் செய்யும். கொஞ்சம் நிதானமாக நடந்து வாருங்கள். உங்கள் செல்வாக்கு — செல்வாக்காக்கினால் நன்மை பெற முயலுங்கள், இடைக்கிடை வீண் சச்சரவுகளும், குடும்பத்தினருக்காகவே — புத்திரர்களுக்காகவே —அலைச்சலும் பட இடம் உண்டு. மாற்றங்கள் சகஜமாகும். சுய சிந்தனைகளால் சுபகாரிய அனுகூலங்கள் குடும்பத்தில் ஏற்படச் செய்யும்.

## ஜோதிட சஞ்சீவி

**சிங்கம்:** நீங்கள் தொழில் செய்யும் இடத்திலோ, அன்று கல்விப் பீடங்களிலோ அவதானமாக இருக்க [வேண்டும். மறைமுகத்தில் உங்கள் திட்டங்கள், செயற்பாடுகளைக் குறை கூறித்திரியும் ஒரு சிலர் சந்தர்ப்பத்தில் காலை வாரிவிட வழிவகுப்பர். சிலருக்கு அலைச்சலும், கஷ்டங்களும் கொடுத்தாலும் எதிர்ப்பாலரால் ஆறுதல்கள், உதவிகள், நன்மைகள் ஏற்படும். உறவினர் இழப்பு ஏற்படும். உள்ளத்தைக் கொஞ்சம் இறை வழி திருப்பி வழிபாடு, தொண்டுகள் செய்து வாருங்கள். அதனால் மனச் சாந்தி ஏற்படும்.

**கன்னி:** கோபக்காரர் என்று பெயர் எடுத்த நீங்கள் கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். புத்திரருக்காகவும், குடும்பத்தினருக்காகவும் அதிக செலவுகளும், நேரச் செலவுகளும் செய்வீர்கள். தாய் வழியினருக்கு நன்மைகள் ஏற்படும், சகோதரர்களுடன் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் கோபத்தை அவர்களிடம் காட்டாதீர்கள். உலகத்தில் பிழை, சரி என மாறி மாறித் தானே நடக்கச் செய்யும்? தொழிலில் புதியவர்கள் வரவு அல்லது புதிய திட்டங்கள் உருவாகச் சந்தர்ப்பங்கள் ஏற்படச் செய்யும்.

**துலாம்:** உலகத்தையே அனுபவிக்க வேண்டும் எனத் துடிக்கும் உங்களுக்கு காரிய வெற்றிகள் கிடைக்க[illegible] யும். இதைப்பார்த்[illegible] களும் — அயலவர்களும் இனிக்க, இனிக்கப் பேசிப்

## மகாதேவா ஜோதிடம்


**தனுசு:** உங்களுக்கு எப்பொழுதும் போராட்டம் தான். போராடிப் போராடி அனுபவப்பட்ட நீங்கள் எந்தச் சவாலையும் எப்பொழுதும் ஏற்று வெற்றிவாகை சூடுங்கள். உலகத்தில் இன்ப, துன்பங்களுக்கு மத்தியிலே நின்றுதான் போராட வேண்டும். உடலில் கொஞ்சம் அசதி தான், தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் மோதல் வரத்தான் செய்யும். அடிக்கடி பயப்பிராந்தி ஏற்படச் செய்யும். இடைக்கிடை அலைச்சலும், தடைதாமதங்களும் ஏற்படும். கைமாறும் பொருளால் வேதனைகள் ஏற்படும். வீட்டில் சுபகாரியங்களும் ஆலயங்களில் தர்மச் செலவுகளும் சர்வசாதாரணமாகும்.

**மகரம்:** மற்றவர்களுக்காக ஓடி ஓடி உதவும் மனோபாவம் கொண்ட உங்களுக்கு தக்க சமயத்தில் யாரும் உதவுவார்கள் என எண்ணலாகாது. அடிக்கடி அலைச்சலுண்டு. தொழில் ஸ்தானத்தில் முயற்சிக்குத் தகுந்த வெற்றி முன்னேற்றம் கொடுக்கும். எதிலும் முழுப்படியாகச் [illegible] அல்லது காணி — பூமி சேரும் பலன்கள் காணப்படு

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.07



சொற்சிலம்பம் இல. 07
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 25 - 07 - 1997**

### இடமிருந்து வலம்

1. நோய் வந்தால் நாடுவது. 4. யாக குண்டத்தில் இடுவது. 6. பாதை. 7. வாய்ப்பாகக் கிடைப்பது. 9. தாய். 10. செய்தொழில். 11. நூதனம். 13. தினம் மாறுவது. 15. உடலில் ஓடுவது கலந்து நிற்கிறது. 17. ஒடுக்கம். 18. நெருப்பு. 19. மாயமான் ஆனவன். 21. பண்பாட்டுடன் வளர்வது. 24. பாடசாலை. 25. சமுத்திரம்.

### மேலிருந்து கீழ்

1. இரத்தத்தின் நிறம். 2. பிய். 3. இந்து சமயத்தில் ஓர் உட்பிரிவு. 4. ஒரு தாளம். 5. நடராசன் ஆடுமிடம். 8. அடங்கிய இடம், 9. இன்று நாம் வேண்டுவது. 10. அந்தணன். 12. இரும்பைப் பிடிப்பது. 14. குடம். 16. மகள். 20. சூடு வாங்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி. 21. 24 மணி நேரம். 22. மகிழ். 23. முட்டையிடுவது.

### சொற்சிலம்பம் இல. 05 - விடைகள்

#### இடமிருந்து வலம்

1. ஆபாசம். 4. அவதி, 7. பரிதி. 8. அரசிறை. 9. பகவன். 11. பாத்திரம். 12. ஓரி. 13. கலகம். 15. தகரம். 19. வலம். 20. சபதம். 21 பைங்கிளி.

#### மேலிருந்து கீழ்

1. ஆபத்பாந்தவன். 2. பாரி. 3. சதிபதி. 4. அரன். 5. வசி. 6. திறைசேரி. 8. அவலம். 10. கரகம். 12. ஓம். 14. கம்பளி. 16. கல. 17. ரம்பை. 18. தம்பி. 20. சகி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- செல்வி. மோ. தாரணி,
ஆண்டு 10 A, உடுவில் மகளிர் கல்லூரி.

★ இரண்டாம் பரிசு:- சி. அச்சுதன்,
118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு:- செல்வி. பு. ஷாலினி,
253/ 2, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 06 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp] யாழ்ப்பாணம்

# கவிதை முற்றம்

## யோகம்

நான்
அதிர்ஷ்ட தேவதையை
அகமாரக் காதலிக்கிறேன்.
★ ★ ★
என் வீட்டு முற்றத்தில்
வாழை ஒன்று நாட்டினேன்.
வரம் பிழுத்துப்
பாத்திகட்டிப்
பக்குவமாய் தண்ணி ஊற்றி
பக்கமெல்லாம் தடிகள் குத்தி
கூடுமொன்று அடைத்து விட்டேன்.
பார்த்திருந்தேன்
வாழையின் வளர்ச்சியை நான்.

அடுத்தடுத்துக்
குருத்து வந்து
அகன்ற நல்ல இலைகள் வந்து
'சணாச்சு' வளர்ந்து நின்று
சல்லாபம் தந்த வாழை
அடியை விடி விடிய
ஆவலுடன் பார்த்திருந்தேன்.

குருத்துக் குட்டியொன்று
மண்துளைத்து வெளிவரவே
குலையொன்றை ஈன்றது
நான் வைத்த வாழைக் குட்டி.

பொத்தி தள்ளிக்
மொட்டவிழ்ந்து
குலையாகி வருகிறது.
மனமகிழ்வால்
பக்குவமாய்
'பராமரிப்புச்' செய்து வந்தேன்.

பொத்தி விரிந்தது.

முதல் மடல் விரிந்தது
முத்தான காய் கண்டேன்.
மற்ற மடல் விரிந்து
மகிமை காட்டியது.
மூன்றாம் மடல் விரிய
நீண்ட காய் தோன்றியது.
நாலாம் மடல் விரிய
நான் பார்த்திருந்தேன்!......

அழகிய காய்கள் !
அவமையாய்க் கிடந்தன!
பொத்தியின் அடியெல்லாம்
பொத்தலாய் அழுகியது...!
நுனி தொட்டு அடிவரை
தண்டழுகத் தொடங்கியது!

நெஞ்செல்லாம் கனத்திட
ரெண் டொருநாள் பார்த்துவிட்டு
உலக்கை போட்டிடித்து
'கற்பத்தடை' செய்தது போய்
எஞ்சி நின்ற ரண்டு குட்டி
நிற்க விட்டு ?.....

நான் வைத்த குட்டியை
நல்லடக்கம் செய்து விட்டு
குட்டி தந்த குட்டியின்
வளர்ச்சியை பார்த்திருந்தேன்.
★ ★ ★
நம்பிக்கைத் கிரணங்களின்
கைபிடித்து நடக்கின்றேன்
நான்
சூரியச் சுடுகுழம்பில் குளித்து
சந்திரச் சாரலில்
குளீர் காய்வேன்.
விண்ணில் மின்னும்
வைரக் கட்டியெல்லாம்
என்
கண்ணின் ஒளியால்
கனன் றெரியும்!......
இப்போதும்
அதிர்ஷ்ட தேவதையை-
நான்
அகமாரக் காதலிக்கின்றேன்.

- "இராகன்"

## சந்திப்பு

நிலவிழிகளால்
காதற்கணைதொடுத்த
காரிகையே!
நெருப்பாய்த் தகிக்கும்
நிலவொளியைப்
பார்வைத் தென்றலால்
பனியாக்கியவள் நீ!
படபடக்கும் ஓசைக்குப்
பழக்கப்பட்ட என்செவிகளைப்
பாதச் சிலம்புகளால்
பணியவைக்கியவளும் நீ!
பிஞ்சுவிரல்களின் பற்றுதலில்
உலகத்து இன்பங்களை
ஒன்றாக
உணர்த்தியவளும் நீயே!
நேரிழையே!
நம்சந்திப்பு,
இனிமையானது.
சடினையற்றது.
உன்னதமானது.
ஏன் தெரியுமா?
எதிர்ப்பில்லாத காதல்,
ஊடலில்லாத இல்வாழ்க்கை,
சுதந்திரமில்லாத கவிதை
சற்றும் சுவைக்காது.
பட்டப்பகலில்
பலபேர் பார்க்கப்
பேசிக் கொள்வதில்
என்ன சுகம்?
நட்ட நடுநிசியில்
நரம்புக்குரைப்பை மீறி
ஊரடங்கு(ம்) வேளை
உனைக்காண வருகிறேன்.
பாதிவழியில் என்னுயிர்
பறிபோகலாம்.
எனினும்,
'மிதிக்காதை' பேச
மாரக்கமேது?
உப்புக்கரிக்கும் உன்கண்ணீர்
உள்ளத்துக்கு
உத்வேகம் தருகிறது.
வெண்ணிலவு மேற்கே
விரைகிறது.
விடைகொடு கண்ணே!
நாளை...
நான் இருந்தால்
வருகிறேன்.

- உடுவில் அரவிந்தன்

## இயற்கையின் பிரிவினை

மலர்மேல் தாவி
மணக்கும் காற்று
மனிதனை அடைய
மறுத்துப்போகும்.

பகலினைத் தந்து
படைப்பிற்கு உதவும்
பகலவன் இனிமேல்
பார்க்கவே மாட்டான்.

ஊற்றாக வந்து
உவந்திடும் நீரும்
உணர்விலா மனிதர்க்கு
உதவிடமாட்டாது

இயற்கை — மனிதனை
இம்சிக்கப்போகுது!

சிட்டுக்குருவியும்
'சிந்தனை மிருகமும்'
திட்டும், மனிதனின்
திமிரை வெறுத்திடும்.

தாரகை வானில்
தந்திடும் ஒளியும்
தரங்கெட்ட மனிதனின்
தன்மையை ஒதுக்கும்.

மதி அதுவும் தோன்றாது
மாண்புழகு தாராது
மதிகெட்ட மனிதனின்
மத்திமக் குணங்கண்டு

இயற்கை மனிதனை
இம்சிக்கப்போகுது!

'மனிதம்' என்றொரு
மாண்புறு தன்மையை
மனிதன் என்பவன்
மறுத்துப்போவதால்,

இயற்கை மனிதனை
இம்சிக்கப் போகுது.

-மானியூர் ரட்ணேஸ்-

## என்று தணியும் இந்தப் புயல்?

என்று தணியும் இந்த
இனப் புயல் வேகம்?
என்று கலையும் இந்த
போர்ப் பறை மேகம்?
என்று கனியும் எங்கள்
விடுதலைக் காலம்? அதைக்
கண்டு மகிழ்ந்து நாம்
களிப் புறுங் காலம்?
பயன் தந்து உதவிடும்
விளை நிலம் யாவும்
வளர் பயிர் எழில்
எப்போது தவழ்ந்திடுங் காலம்?
அலைந்துலைந்திடும் எம்மவர் வாழ்வு
அமைதி காணவே கனிந்திடுங் காலம்?

- அபிராஜன்

## அருமையான ஐஸ்கிறீம்!



ஐஸ்கிறீம்! ஐஸ்கிறீம்!!
குளு குளு ஐஸ்கிறீம்!!!
அப்பா வாங்கித் தாருங்கள்
அருமையான ஐஸ்கிறீம்!


அண்ணாவுக்கு ஒன்று!
அக்காவுக்கும் ஒன்று!
அம்மாவுக்கும் ஒன்று!
எனக்கு மட்டும் ரெண்டு!

கை குளிர மனங்குளிரக்
கண்குளிர உண்டிடலாம்!
பை நிறையக் காசிருந்தால்
பல விதத்தில் அருந்திடலாம்!

பாட்டுச் சத்தங் கேட்டாலே பாதை நோக்கி ஓடுவோமே!
நாட்டு நடப்பு அறிந்திடவே நாங்கள் ஒன்று கூடுவோமே!

சிவப்பு மஞ்சள் நிறத்தினிலே சிங்காரமாய்க் கிடைத்திடுமே!
உவப்புடனே குடித்திடுவோம் உனக்கு மட்டும் தர மாட்டேன்!

சு. சாரதா




## உண்மையின் உயர்வு

பாலாவும் மாலாவும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரு நாள் கடற்கரைக்குக் காற்று வாங்கப் போனார்கள். அங்கே கடற்கரை மணலில் வீடு கட்டி விளையாடினார்கள். பொழுது சாயும்வரை விளையாடி விட்டு வீடு சென்றார்கள்.

வீட்டிற்கு சென்ற பின்னர் பார்த்த போது தான் தனது கைவிரலிலிருந்த மோதிரத்தைக் காணவில்லை என்பது மாலாவுக்குத் தெரிய வந்தது. அவள் இதுபற்றி அப்பா, அம்மாவிடம் சொல்லப் பயந்தாள். பாலாவுக்கும் விஷயம் தெரியாது.

இவர்கள் வீட்டுக்கு எதிர்வீட்டில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் பெயர் லைலா. அவளை இந்தப் பாலாவும் மாலாவும் விளையாட்டில் சேர்ப்பதில்லை. எப்போதுமே பொறாமைக் கண்ணோடு நோக்கிவந்தனர்.

மறுநாள் இவர்கள் விளையாடி விட்டு வந்த அதே கடற்கரைக்கு லைலாவும் விளையாடச் சென்றாள். அங்கே அவள் விளையாடும் போது எதிர்பாராத விதமாக தொலைத்த மோதிரம் அவள் கையில் அகப்பட்டது.

மோதிரத்தை எடுத்த லைலா நேராகத் தன் தாயாரிடம் சென்று ''அம்மா !கடற்கரையில்விளையாடிய போது மண்ணுக்குள் கிடந்தது. இந்தாருங்கள். இது முன் வீட்டு மாலாவுடையதாகத்தான் இருக்க வேண்டும்''—என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்தாள்.

மாலா தான் தாயிடமோ,தந்தையிடமோ எதுவும் கூறவில்லையே! லைலாவின் தாய், மாலாவின் தாயிடம் போய் மோதிரத்தைக் காட்டி, ''இது உன் மகள் மாலாவுடையதா?'' என்று கேட்டாள். அது தன் மகள் மாலாவுடையது போலிருக்கிறதே என்று எண்ணி, ''அடீ மாலா! இங்கே வா! உன் கைமோதிரத்தைக் காட்டு பார்ப்போம்'' — என்றாள்.

தாய் கூப்பிட்டவுடன் ஓடிவந்த மாலா திரு திருவென விழித்தாள்.

''என்னடி முழிக்கிறாய்! எங்கேடி மோதிரம்?'' —என்று தாய் அதட்டினாள்.

அதற்கு மாலா, ''நேற்றுக் கடற்கரையிலே துலைச்சுப் போட்டன்'' என்று அழுதவண்ணம் கூறினாள்.

''ஏன்டி! இதை எனக்குச் சொல்லாமல் விட்டனீ? பாலா அடிக்கடி வருவானே? அவனுக்கும் இது தெரியாதா?'' என்றாள் மாலாவின் அன்னை.

''அடே! இது உன்னுடையது தானா? இந்தா வைத்துக்கொள். நல்லவேளை எங்கடை லைலாவின் கைகளில் சிக்கியது. நீங்கள் செய்த புண்ணியம். வேறு யார் கையிலாவது அகப்பட்டிருந்தால் இந்தமோதிரம் மீண்டும் கிடைத்திருக்குமா?'' இது லைலாவின் தாயின் கூற்று.

''அதுதானே! இதுகள் ரெண்டும் அவளோடை எப்பவும் போட்டி தான். அவளின்ரை நல்ல குணத்தைப் பார்த்தியளே!'' என்று வாஞ்சையோடு கூறினாள் மாலாவின் தாய்.

அவ்வேளை அங்கே வந்த பாலா ''அட இப்படியா நடந்தது. எனக்குத் தெரியாதே?'' — என்றான்.

''நீங்கள் லைலாவை ஒதுக்கினீர்கள். ஆனால் அவள்தான் இன்று உங்களுக்கு உதவியிருக்கிறாள். உண்மையாக நடந்த அவளை இனிமேலாவது உங்களுடன் சேர்த்து விளையாடுங்கள்''—என்று மாலாவின் அம்மா சொல்லி முடிப்பதற்குள் பிள்ளைகள் மூவரும் ஒன்றாகக் கை கோர்த்தபடி விளையாடுவதற்கு செல்லச் ஆயத்தமானார்கள்.

இரண்டு தாய்மாரும் பாசம் நிறைந்த கண்களால் தமது பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டனர். இது உண்மையின் உயர்வு.

லைலாவின் நல்ல குணத்துக்கு வெகுமதியாக மாலாவின் தாயார் ஓர் அழகிய பேனாவை வாங்கிக் கொடுத்தார் என்று சொல்லவும் வேண்டுமா?

- ஸ்ரீ. நிதர்சன்

## நொடிப் பொழுது

1. சங்கீதம் பாடுவார் சங்கீத வித்துவான் அல்ல; ஊசிபோடுவார் டாக்டர் அல்ல; பறந்து செல்வார் பறவை அல்ல; அவர் யார்?
2. நான் பிறக்கும் போது இருக்க வில்லை. பிறகுதான் வந்தவன். ஆபத்துக்கு ஆயுதமாகவும் பயன்படுவான். வெட்டுக் கொத்து என்றால் மகா கெட்டிக்காரன். அவன் யார்?
3. அடித்தால் அழ மாட்டான்; உதைத்தால் எகிறிக் குதிப்பான். அவன் யார்?
4. வாயாலே தின்று வயிற்றாலே கொட்டுகிறது. அது எது?
5. கடற்கரையில் நிற்பான்; வழிகாட்ட மறக்கமாட்டான் அவன் யார்?
6. ஒரு குளத்தில் ஒரேயொரு மீன். அது எது?

ந. சஞ்சீவன்

விடைகள்
1. நுளம்பு. 2. பல். 3. பந்து. 4. திருகை. 5. கலங்கரைவிளக்கம். 6. நாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைகள் பச்சையில்லை....

காட்டை அண்டிய குடியிருப்பு அது. காட்டின் எல்லையிலே அரச மரத்துக்குக் கீழ் அசை போட்டுக் கொண்டிருந்தது அந்தக் கிழட்டு எருது.

அப்போது காட்டுக்குள் இருந்து பதுங்கிப் பதுங்கி வந்தது ஒரு குழுமாடு.

காட்டில் வாழும் தன் இனக் காளையை அன்போடு வரவேற்ற கிழ எருது — "என்ன நண்பா முகத்தில் அச்சம் தெரிகின்றது?" — என் வினாவியது.

"ஆமாம் நண்பா... நான் எத்தனை பேருக்கு பயந்து வாழ வேண்டும்? வேட்டைக்காரர் ஒருபுறம்... கொடிய காட்டு விலங்குகள் மறுபுறம்... உன்னைப் போல நிம்மதியாகவா வாழ்கிறேன்.? நீ கொடுத்து வைத்தவன்... வீடு..., வாசல்... இருந்த இடத்தில் சாப்பாடு... எனக்கு இரை தேடுவதே ஒரு பிரச்சினை; தண்ணீர்ப்பிரச்சினை வேறு..." — பெரு மூச்சோடு சொன்னது குழுமாடு.

"ஆமாம் இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை. நாம் சாதுக்கள் என்பதால் எம்மை மனிதர்கள் படுத்தும் பாடு ...அப்பாடா..." பெருமூச் செறிந்தவாறு பதில் சொன்னது எருது.

"என்ன மனிதர்கள் நீதி, சட்டம், ஒழுங்கு என்றெல்லாம் நெறிபட வாழ்கிறார்களே?" — குழுமாடு கேட்டது.

"பூம்... அதெல்லாம் வெறும் பேச்சிலும் எழுத்திலும்தான். செயலில் இல்லை. நமக்கேது நிம்மதியான வாழ்வு? அதுவும் இந்த இந்துக்கள் இருக்கின்றார்களே... நம்மை தமது கடவுளின் வாகனம் என்று கதை அளக்கிறார்கள். ஆனால் எம்மவரை கொன்று புசிக்கிறார்கள், அதுமட்டுமா? எம்மினத்தவரை தமது அடிமைகளாக்கி ஈவிரக்கமின்றி வேலை வாங்குகிறார்கள்..."

**திருத்தக்கதை**

"அப்படியா?"

"இன்னும் கேள் நண்பனே... எமது உணர்ச்சிகளையே செயலிழக்கச்செய்து இன விருத்தியை கட்டுப்படுத்துகிறார்கள். இரும்புக் கோலைக் காய்ச்சி எமது உடம்பில் சூடு வைக்கின்றார்கள்."

"என்ன அநியாயம்... மனிதர்கள் இத்தனை கொடியவர்களா...?" — குழு மாட்டிற்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது.

"இவை மட்டுமா...?" — எருது தம்மினத்தின் சோகக் கதையைத் தொடர்ந்தது.

"தொன் கணக்கில் வண்டிகளில் பொருள்களை ஏற்றி விட்டு எம்மை நுகத்தில்பூட்டி இழுத்துச் செல்லுமாறு அடிப்பார்கள் .. நாம் வலி தாங்க முடியாமல் வண்டியை இழுத்துச் செல்வோம். இது தான் ஆயுள் முழுவதும்..." எருது சற்று ஓய்வெடுத்துக் கொண்டது.

"நண்பா நான் இனியாவது காட்டைத் துறந்து, மனிதர்களின் தோழனாக நாட்டில் வாழலாம் என்று எண்ணினேனே..." — குழு மாடு கூறியது.

**வளலாய் ரஞ்சன்**

அதன் பேச்சை தடுத்து எருது தொடர்ந்தது "ஐயையோ உனக்கு அந்த ஆசைவேண்டாம். நீ காட்டு விலங்காக சுதந்திரமாக இருந்துவிடு... இந்தப் புத்தி கெட்ட மனிதரின் கைகளில் சிக்கி அழிந்துவிடாதே..."

கிழ எருதின் அனுபவம் இறுதி எச்சரிக்கையாக வெளிப்பட்டது.

"என் இனிய நண்பனே! மனிதரைப்பற்றிய புதிய உண்மைகளை எல்லாம் புரிய வைத்து விட்டாய் நான் சென்று வருகிறேன்..." குழுமாடு அந்தக் காட்டோரக் கிராமத்தை விட்டு காடு நோக்கிப் புறப்பட்டது.

அக்கரைகள் பச்சையில்லை என்பது குழு மாட்டுக்குப் புரிந்து விட்டது.

## எப்படித் தான் நீங்கும் இருட்டு?

கப்பல் 'தரைதட்ட'
கத்து கடற் பாதையிலே
சிக்கல் எழும்பச் சில நொடிக்குள்
உப்பு முதல்
மண்ணெண்ணெய், சோப், மா
மறைந்ததுவே...! எங்க 'குணம்'...
இன்னுமேன் மாறவில்லை இங்கு?

ஆறாத காயங்கள் ஆறுமென்று
பத்தியமும்...;
நேர்த்தியொடும்; வாடும் நிலம் மீதும்
போர்ப்பிழைப்பில்
லாபம் பிடுங்குதற்காய்ச்
சாமான் விலை கூட்டும்
சாபம் குறையலையே சாய்ந்து?

வன்னிக்குப் போனோர் வளவுக்குள்
இன்றோ பூக்
கன்றில்லை;
ஜன்னல்; கதவுமில்லை;
சொந்தச் சகோதரரை ஏய்த்துத்
தமை வளர்க்கும் 'கொற்றம்'
அகற்றா துளதெம் 'அழகு'!

ஓர் கொடியில் பூத்த உரோசாவில்
ஒன்றெங்கோ
தீக்குளிக்கும் சேதி தெரியாமல்;
வேர்கருகும்
உண்மை உணராமல்...
ஊர் இளைக்கத் தாம் கொழுக்கும்
மன்னர்களுக் குண்டா மனசு?

எத்தனை இன்னல்கள்?
எத்தனை போர்ச்சுமைகள்?
செத்தழிதல்,
சொத்துச் சிதைந்தலைதல்,
அத்தனையும்...
பட்டுத் தெளிந்தும்
'மனிதம்' படிக்கலை நாம்!
எப்படித் தான் நீங்கும் இருட்டு?

-அருணன்

# இளமையை ஆராதியுங்கள்!

முதுமைத் தோற்றம் வெறும் வயது முதிர்ச்சியால் மட்டும் வந்துவிடுவதில்லை.

வயோதிபத் தோற்றம் உங்களைக் கவ்வுவதைத் தவிர்ப்பதற்கு நல்ல உடல் நலம், மகிழ்ச்சியான மன நலம் போன்றவை முக்கியம்.

இளமையை உங்களுடன் கட்டி வைத்திருக்க அதனை ஆராதியுங்கள்! அதற்குச் சில ஆலோசனைகள் இவை.

அதிக "மேக்அப்", குட்டை முடி போன்றவை வயதைக் குறைக்கா. நல்ல ஆரோக்கியம்தான் அதைச் செய்ய முடியும். உங்கள் உடலின் ஒவ்வொரு நரம்பும் மூளையின் ஒவ்வொரு 'செல்' களும் உயிர்த்துடிபபோடு விளங்க வேண்டும்; கண்கள் பளிச்சென்று, வாழ்க்கையின் மீது ஆர்வத்துடன் அலை பாய வேண்டும்; இதழ்களில் எதற்கும் அதிகமாக அலட்டிக் கொள்ளாத ஒரு புன்னகை நெளிய வேண்டும். இது முக இளமைக்குப் பெரும் துணை புரியும்.

### உடற்பயிற்சிகளின் மாயம்

உங்கள் இரத்த ஓட்டத்தை அதிகரித்துச் சீர்ப்படுத்தும் உடற்பயிற்சிகள் உங்கள் முழு உடலுக்கும் நன்மை செய்வதோடு முகத்தையும் பொலிவாக்குகிறது, உடலில் உள்ள தொளதொளப்பான சதையினை உறுதியாக்கி இளமைத் தோற்றத்தைத் தருகிறது. எடுத்ததற்கெல்லாம் பதற்றப் படுவதால் முழு உடலும் பாதிக்கப்படுவதோடு முகமும், தலை முடியும் பொலிவை இழக்கின்றன. கடுகடுப்பான முகத்தில் முதுமைத் தன்மை, தன் கோடுகளை உரிய வயதிற்கு முன்பே எழுதுகிறது.

### புகைப்பதும் குடிப்பதும்

பெண்கள் புகைப்பதால் நுரையீரல் மட்டுமல்ல இரத்த ஓட்டமும் கெட்டுப் போவதால் தோல் கறுத்து, வரண்டு போகிறது. குடிப்பதால் முகம் ஊதிப் போய் வேண்டாத சதை போட்டு அழகு குலைகிறது.

### அதிக வெயில்

அதிக வெயில் சருமத்திற்கு அடியில் இருக்கும் ஈரப் பசையை வரண்டு போகச் செய்வதால், சருமம் இளமைத் தன்மையை இழக்கிறது. 'சன்ஸ்கிரீன்' உள்ள சருமப் பாதுகாப்பு 'க்ரீம்கள்' உபயோகிக்கலாம்.

கண்களின் பாதுகாப்பிற்கு கண்ணாடி அணிவதும் நல்லது. ஒரு நாளைக்கு 3 முறையாவது சுத்தமாக முகம் கழுவி, நடுநடுவில் ஈரப்பசையைப் பாதுகாக்க ஈர டவலால் முகத்தைத் துடைக்கலாம்.




### பற்களின் பாதுகாப்பு

வருடத்துக்கு ஒரு முறை உங்கள் பற்களை நல்ல பல் மருத்துவரிடம் சென்று காண்பித்து சரிபார்த்து கிளீன் செய்து கொள்வது நல்லது.

பற்கள் ஆங்காங்கே உடைந்தோ, சொத்தை ஏற்பட்டோ இருந்தால் அவற்றைச் சரிசெய்து கொள்ள வேண்டும். (Bonding) என்னும் முறையில் நுனிகளில் உடைந்த பற்களையும் சீரமைத்துக் கொள்ளலாம். பற்களின் ஆரோக்கியம் உங்களின் முக அழகிற்கு மட்டுமல்ல, உங்களது ஆரோக்கியத்திற்கும் முக்கியமான ஒன்று.

### நடையழகு

நிமிர்ந்து, நிலம் அதிராமல் சீரான வேகத்தில் நடப்பது அழகிற்கும், முதுகுத் தண்டிற்கும் நல்லது. நடக்கும் போதும், உட்காரும் போதும் சறுக்கிய படி அமர்வதால் உங்கள் முகத்தில் — இரட்டைத் தாடைகள் இருப்பது போல் தோன்றும். கை வீசித் தினமும் ஒரு அரை மணி நேரம் நடப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். உட்கர்ரும் போதும், முதுகை நேராக வைத்துக்கொண்டு அமருங்கள்.

### நல்ல உறக்கம்

இரவில் குறைந்தது ஆறு அல்லது எட்டு மணி நேர உறக்கம் அவசியம். இல்லாவிட்டால் கண்களுக்கு அடியில் கருவளையம் விழும். இயற்கையாகத் தூங்குவதே நல்லது. தூக்க மாத்திரைகளை நாடாதீர்கள். உறக்கம் வருவதில் பிரச்சினை என்றால் 7 மணிக்கு மிதமாக சாப்பிட்டுவிட்டு ஒரு மணி நேரம் காலாற நடந்த பின் படுக்கலாம். படுக்கும் போது எந்தப் பிரச்சினைகளைப் பற்றியும் சிந்திக்கக் கூடாது.

### ஏனையவை

இது தவிர, அழகிய கேசம், சுத்தமான—கவர்ச்சியான நகங்கள், சொரசொரப்பற்ற தோல், உடலுக்குப் பொருத்தமான ஆடைகள் போன்றவற்றைப் பேணுவதிலும் விசேட அக்கறை நீங்கள் எடுக்க வேண்டும்.

### மனதைப் பார்த்துக் கொள்

மனதில் சேரும் ஒட்டடைகளை அவ்வப்போது துடைத்து விடுங்கள். காரியங்களை செம்மையாகச் செய்துவிட்டு, நல்ல பலன் வரும் என்று காத்திருங்கள். காத்திருந்து ஒரு நல்லது நடக்கும் போது அதன் சுகமே அலாதிதான். வாழ்க்கையில் உள்ள விளையாட்டு தனங்களை மறந்துவிடாதீர்கள். எப்போதும் கடமை என்று சீரியஸாகி விடாதீர்கள். குறும்புகள்... கேலிகள் வாழ்க்கைக்கு வர்ணம் சேர்க்கும். [illegible]... [illegible]போதே!

நன்றி:- ராஜம்

## வாழைப்பழங்கள்....

(VII ஆம் பக்கத் தொடர்)
கொள்ளும் தாவர வர்க்கத்தின் மீது பரம்பரையியல் தொழில் நுட்ப நிபுணர்களின் கவனம் திரும்பியது. அதன் பெறுபேறாகவே, வாழைப்பழங்களின் பரம்பரை அலகுகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, நீர்ப்பீடனத்தைத் தோற்றுவிக்கும் பரம்பரை அலகுகளை அதில் பதிக்கும் முறை வெற்றிகரமாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஈரல் அழற்சி நோய்க்கு மட்டுமல்லாமல், கொப்பளிப்பான், மஞ்சள் காமாலை, இளம்பிள்ளை வாதம் (போலியோ), தொண்டைக் கரப்பான் போன்ற நோய்களுக்கு எதிரான தடுப்பு முறைகளையும் (Vaccine) வாழைப் பழம் மூலம் ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு தங்கள் ஆய்வு வெற்றி பெறும் என ஆய்வாளர்கள் முழு நம்பிக்கை தெரிவிக்கின்றார்கள்.

மூன்றாம் மண்டல—அபிவிருத்தி அடைந்து வருகின்ற— நாடுகளில் வாழைகள் இலகுவாக விளைகின்றன; வாழைப்பழத்தின் விலையும் அதிகமில்லை.

உரிய பரம்பரையியல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட வாழைமரங்களை இந்த நாடுகளில் சாகுபடி செய்ய வைப்பது அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல.

உடனடியாக ஒவ்வொரு குழந்தைக்கும் இத்தகைய ஒவ்வொரு வாழைப் பழத்தைக் கொடுக்க முடியாமல் போனாலும், தடுப்பூசி மருந்துகளுக்குப் பதிலாக இத்தகைய வாழைப்பழச் சாறை சகல குழந்தைகளுக்கும் ஒரு சில துளியேனும் அருந்தக் கொடுப்பது அவ்வளவு கஷ்டமல்ல என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## இந்த வார....

(VIII ஆம் பக்கத் தொடர்)
கின்றன. விஷபீடைகள், சளித் தொல்லைகள், இரத்தமாற்றம் சிலருக்கு ஏற்படலாம். குடும்பத்தில் எதிர்ப்பாராருக்கு உடல் நிலைப்பாதிப்பு ஏற்படும். ஆயினும் வைத்தியம் செய்யச் சுகம் கொடுக்கும்.

**கும்பம்:** உங்களுக்கு எல்லோரும் உதவுவார்கள். உங்களின் அதிகப் பிரசங்கித் தனத்தால் சில சங்கடங்கள் ஏற்படச் செய்யும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. சனீஸ்வரனின் தாக்கத்தால் அடிக்கடி தடை, தாமதங்கள், குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படச் செய்யும். ஆயுத பயம், உடல்நிலை பாதிப்பு, காயங்கள் சிலருக்கு ஏற்படச் செய்யும். சகோதரர்களுக்காக சில பொல்லாப்பு கேட்க நேரிடும். தொழில் ஸ்தானத்தில் வரவேற்பு இருந்தாலும், சில இழப்புகளைச் சந்திக்க நேரிடும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து வரவும்.

**மீனம்:** இந்த உலகத்தில் எமக்கு வரும் கஷ்டங்கள், இன்பங்கள் தான் எமது அனுபவத்தைப் பெருக்கும். எதையும் தாங்கி நடந்து வெற்றி வாகை சூடுங்கள். பெரியவர்கள் எல்லோரும் பலத்த போராட்டம் நடத்தித்தான் வெற்றி பெற்றார்கள். ஏழரைச்சனி என்னதான் செய்து விடப்போகின்றது? தெய்வ சக்தி உங்கள் புத்தியை வழி நடத்தித் தானே செயற்படுத்தும். தொழில்ஸ்தானத்தில்மந்த நிலை, சில கஷ்ட நிலைகள்ஏற்படத்தான் செய்யும். சமாளித்துக் கொள்ளுங்கள். புத்திரர்களுக்கு முன்னேற்றங்கள் ஏற்பட்டு மாற்றங்கள் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவெனும்.....

(111 ஆம் பக்கத் தொடர்)

நிலையும், பல்வேறு உடல் நோய்க் குறிகளும் தோன்றலாம். இறந்தவரின் நினைவில் மூழ்கியிருத்தல், கனவுகள் காணுதல், இறந்தவர் சம்பந்தமாக மாயப்புலனுணர்வுகளை (காட்சிகள், குரல்கள்) அனுபவித்தல் என்பதான நிலைகளைத் தொடர்ந்து, தன்னை மீள ஒழுங்குபடுத்தும் நிலை தோன்றும். இந்தக் காலத்தில் ஒருவர் இழந்தவருடனான சில முடிச்சுக்களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவற்றிலிருந்து விடுபடத் தொடங்குவார். இதற்கு உதாரணமாக இறந்தவரின் பொருள்களைப் பாதுகாத்தல், அவருக்குப் பிடித்தமான வாழ்வு முறைமைகளைப் பின்பற்றுதல் போன்றவற்றை அவதானிக்கலாம். பின்பு அவர்கள் நடத்தைகளிலும், இழந்தவர் அற்ற நிலையில் ஏற்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியதான மாற்றங்களைக் காணலாம். காலப்போக்கில் பெரும்பாலான நினைவுகள் அழியத் தொடங்கும். இழப்பின் நோகும் தன்மை குறையும். 'நான் சந்தோஷமாக இருக்கிறேனே' என்று ஆரம்பத்தில் ஏற்பாடுகின்ற குற்ற உணர்வும் மங்கி, இல்லாது போகும்.

இந்தக் கழிவிரக்கப் படிமுறைகளை அவதானிக்கும் பொழுது, பெரும்பாலான பிரிவுத் துயர்களும் இப்படிமுறைகளுடாகவே ஊடகப்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. ஓரிரவின் சில மணித்தியாலங்களில் சடுதியாக தாம் வாழ்ந்த மனையை, சூழலை, சொத்துக்களைப் பிரிந்து போன நிகழ்வின் பின்னர், எம்மில் பலரில் வெளிக்காட்டப்பட்ட மனநிலை, நடத்தைகள் என்பவற்றில் இப்படிமுறைகளுக் குரித்தான இயல்புகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆயினும் அந்தப் பிரிவில் இருந்த நிச்சயமற்ற தன்மை, மங்கலாக ஒளிர்ந்த 'திரும்பலாம்' என்ற நம்பிக்கை, கழிவிரக்கப் படிமுறைகளை முழுமையாக்க விடாமல், தொடர்ந்து துயருறு நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இந்த நிச்சயமற்ற நிலையே — நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையிலான ஊடாட்டமே — பிரிவினால் ஏற்படுகின்ற அதி உயர் துன்ப நிலை எனலாம். நிரந்தரப் பிரிவில் ஏற்படுகின்றது போன்று, கழிவிரக்கங்கள் ஏற்பட்டாலும், அது முழுமையடையாமல், மனதின் முழுமையையும் ஆக்கிரமிக்கும் வல்லமை கொண்டது இந்த துயர்தான். கடந்த ஒரு தசாப்த காலமாக எமது நாட்டில் 'காணாமற் போவோர்' சம்பந்தமாக அவர்களின் அன்புக்குரியவர்கள் அனுபவிக்கும் துயர்களும், அவர்களில் குறிப்பிடத்தக்கோர் நோயுறும் நிலைக்கு உள்ளாவதும் கவனத்தில் எடுத்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை.

எமது பிரதேசத்தில், குடும்ப உறுப்பினர்களிடையேயான பிரிவு குறிப்பிடத்தக்க அளவில் 1977களின் பிற்பாடு, வேலைவாய்ப்பு கருதி ஆண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து ஆரம்பமானது. இவ்வாறு சென்றவர்கள் தங்கள் குடும்பங்களை அழைத்துச் செல்ல முடியாததால், ஒரு சில வருடங்களுக்கு ஒரு முறைதான் தங்கள் உறவினர்களை, மனைவி பிள்ளைகளைக் காண முடிந்தது. பின்னர், மெல்ல மெல்லக் கூர்மையடைந்த இனப்பிரச்சினை காரணமாக, பல குடும்பங்கள் பிளவுபட்டுப் போயின. போராட்டத்தில் இணைவு, காணாமற் போதல் என்பவற்றுடன், அகதி அந்தஸ்துக் கோரும் வாய்ப்பைப் பயன்படுத்தி இளைய தலைமுறையினரும் வயது வந்தோரும் புலம் பெயர ஆரம்பித்ததும் இதற்குரிய காரணங்களாக அமையும். 1980 களின் பிற்பகுதியில் ''வீட்டுக் கொருவர் வெளி நாட்டில்'' என்ற புதிய சமூக விழுமியம் பிரகடனப்படுத்தாத முறையில் யாழ்ப்பாணத்தில் நிலவிற்று. இந்தப் போக்கின் வளர்ச்சிக் கட்டமாக — இதை உச்சக் கட்டம் என எழுத முடியாமல் உள்ளது — இன்றைய சூழல் இருக்கின்றது. ஒரு பிரதேசத்தினுள்ளேயே, சில மைல்கள் வித்தியாசத்திலேயே குடும்பங்களின் பிரிவு ஏற்பட்டுவிட்டது.

பிரிவு ஏற்படுத்துகின்ற சமூகத்தாக்கமும் முக்கியமானது. பிரிந்து போனவர் இதுவரை காலமும் ஆற்றிய சமூக பாகங்களை, பொறுப்புகளை அவரின் அன்புக்குரியவர்கள் பிரித்து அல்லது ஒட்டுமொத்தமாக ஏற்க வேண்டி வருகிறது. அந்தக் குடும்ப உறுப்பினர்கள் தத்தமது நிலைகளை, பாகங்களை மீள ஒழுங்கு படுத்த வேண்டி உள்ளது. உதாரணமாக ஓர் இளம் மனைவி கணவனைப் பிரிந்த நிலையில் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வருகிறது. சில குடும்பங்களில் சிறுவர்கள் திடீரென்று வயது வந்தவருக்கான பாகங்களை ஏற்பதையும் காண முடிகிறது.

வயோதிபர்களில் பிரிவு, ஓர் ஆதரவற்ற நிலையை ஏற்படுத்துகின்றது. பல தேவைகளுக்கு அவர்கள் — எஞ்சியுள்ள — இளையவர்களை நாட வேண்டியுள்ளது. பெற்றோரின் பிரிவினால் சிறுவர்களின் விருத்திக்கு தகுந்த மாதிரிகள் இல்லாமற் போகின்றன. உதாரணமாக ஓர் ஆண்பிள்ளைக்கு 'அப்பா' என்கிற ஆண்மாதிரி கிடைக்காமல் போவது, அப்பிள்ளை ஆணாக விருத்தியடைவதில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இறப்பு அல்லாத காரணங்களால் பிரிந்து தூரப் போன குடும்ப உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயும் நிறைய மாற்றங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

(மிகுதி அடுத்த வாரம்)

# பாலியல் கல்வி....

(முதலாம் பக்கத் தொடர்)

கசியாத தன்மைதான் அதிகம் எனலாம்.

பெண்களும் கூட ஆண்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதையே கருத்துக் கணிப்புகள் வெளியிடும் தகவல்கள் தெரிவிக்கின்றன. உறவு கொள்ளும் இடைவெளி, அடிக்கடி துணையை மாற்றுவது, பல்வேறுபட்ட உறவு முறைகள், திருமணத்துக்கு முந்திய உடல் உறவு, ஒத்த பாலாருடனான உறவு என்பவற்றில் இவர்களின் பங்குக்கும் குறைவில்லை.

மணமான ஆண்களில் 56 வீதத்தினரும், பெண்களில் 59 வீதத்தினரும் மாதமொன்றுக்கு சில தினங்கள் என்ற அடிப்படையிலும், தவிர 36 வீதமான ஆண்களும் 32 வீதமான பெண்களும் வாராவாரம் சில தடவைகளும் உறவினை நாடி வருகிறார்கள். ஆண்களும் சரி பெண்களும் சரி 7 வீதத்தினருக்கு இவ்வுறவு ஒரு தினசரித் தேவை ஆகிவிட்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை மணமாகாதவர்களை எடுத்துக் கொண்டால் 23 வீதமான ஆண்களும் 32 வீதமான பெண்களும் உடலுறவு கொள்ளாதவர்களாகவே இருக்கிறார்கள். மேலும் 51 வீத ஆண்களுக்கும் 47 வீத பெண்களுக்கும் திருமணத்துக்கு முந்திய உறவுகள் இடையிடையே சந்திக்காமல் இல்லை. ஆனால் மணமாகாதவர்களில் 26 வீதமான ஆண்களுக்கும் 20 வீதமான பெண்களுக்கும் இது ஒரு நாளாந்தத் தேவை ஆகிவிட்டது.

உறவின் இடைவெளியுடன் உறவுகொள்ளும் துணையினை அடிக்கடி மாற்றும் பிரச்சினையும் ஆராயப்பட்டபோது 'எய்ட்ஸ்' போன்ற நோய்களின் பரம்பலுக்கான சாத்தியங்கள் அங்கு மிக அதிகம் என்பது புலனாகிறது. வாழ்க்கைத் துணையையோ, பாலியற் துணையையோ தேர்ந்து விடத்துடிக்கும் இளவயதினர் மிகவும் நிதானமாகச் சிந்தித்து — கண்டவுடன் காதல் கொண்டு விடாமல் — 'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும்' காத்திருக்க வேண்டிய நிதானம் அவசியமாகிறது.

தெரிந்தெடுத்த பின்னே — உறவு கொண்ட பின்னே — துணையினை மாற்றப் புகுவது நோயைக் காவிச் செல்லவே உதவும். எனவே முடிவெடுக்க முந்திய நிதானம் மிக மிக அவசியம் ஆகிறது. காலம் கடந்துவிடாது. சிந்தித்தே செயற்படல் வேண்டிய நிலைமை.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் சுமார் 20 வீதமான ஆண்களும் 35 வீதமான பெண்களுமே ஒரேயொரு துணையுடன் காலம் கழித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏனையோர் எங்காவது 'எய்ட்ஸ்' போன்ற நோய்களை வாங்கி வரப்போவது நிச்சயமாகிறது. எய்ட்ஸுக்கு முந்திய மேகநோய் போன்ற பாலியல் நோய்களும் தாராளமாகவே பரவுகின்றன.

இவர்களில் 56 வீத ஆண்களும் 30 வீதமான பெண்களும் ஐந்துக்கு மேற்பட்ட துணைவர்களைக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் 17 வீதமான ஆண்களும் 10 வீதமான பெண்களும் மிக மோசமாக — இருபதும் அதற்கு மேற்பட்டவர்களோடும் — உறவு வைத்துக்கொண்டுள்ளனர். உயர் கல்வி நிறுவனங்களைச் சார்ந்தவர்களின் நிலைப்பாடுகளோ மேலும் கவலையளிப்பனவாகவே இருந்து வருகின்றன. அறிவுத் தரத்தில் உயர்ச்சிக்கு ஏற்ப இது விடயத்தில் எச்சரிக்கையாக அவர்கள் ஏனோ இருப்பதில்லை.

ஒத்த பாலாரிடையேயான உறவுகள் பற்றியும் அவை சட்ட பூர்வமாக்கப்படுவது பற்றியும் பத்திரிகைகளில் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. சுமார் பத்து சதவீதமானவர்களே இதில் நாட்டம் செலுத்துவது அவதானிக்கப்பட்ட போதும் இவர்கள் எதுவித கட்டுப்பாடும் இன்றி செயற்படுவதும் அடிக்கடி துணைகளை மாற்றுவதும் சிக்கலான நிலமைகளையே ஏற்படுத்துகின்றன. அத்துடன் இவர்களின் உறவுகள் திருப்தி இன்றி நிதானம் இழக்கும் போது பல்வேறு உடல் வாயில் உறுப்புக்கள் பயன்படுத்தப்படுதலினால் பல விதமான நோய்களுக்கும் ஆளாக வேண்டிய நிலைமையே எஞ்சுகிறது.

ஆண் — பெண் உறவிலும் சரி; ஒத்த பாலாரிடையேயும் சரி உறவுகொள்ளும் போது எத்தனை விகிதத்தினர் எந்த எந்த உறுப்புக்களையும், எந்த எந்த முறைகளையும் கைக்கொண்டு வந்தனர் எனவும் அவற்றின் பாதிப்புக்கள் எவையெவை எனவும் தெரிவுகள், பெறப்பட்டு வருகின்றன. அவற்றை எல்லாம் இப்பகுதியில் தந்துவிடலும் விளக்கிவிடுதலும் சாத்தியம் அற்றது.

எனினும் அவரவர் வழமைக்கு மாறான செயற்பாடுகளில் அதுவும் ஒருவருக்கு ஒருவர் என்ற விசுவாசமான வழக்கத்தினை கைவிட்டு — விலகி இறங்கும் போது நிலைமைகள் மோசமடைதலைத் தடுக்கவே இயலாமற் போய் விடும். மேலும் துள்ளும் இளமையைச் சற்று கட்டுப்படுத்த வேண்டும்; நிதானம் ஏற்பட்டு, தகுந்த துணையைத் தேடும் வயது எட்டப்படும் வரை — மனம் போன போக்கெல்லாம் விட்டுக் கொடுத்தால் — நிதானம் திரும்பியபின் கசக்க ஆரம்பிக்கும் வாழ்க்கை, உயிர் உள்ள வரை நரகமே.

தற்போது பெண்களும் பெருமளவில் வீட்டை விட்டுப் பல்வேறு துறைகளுக்கும் புறப்பட்டு விடுகிறார்கள். இருபாலாரும் எங்கும் கடமைக்குச் செல்வதால் அங்கெல்லாம் பலப்பல சிக்கல்கள் எழுவது தவிர்க்க முடிவதில்லை. இதைப் பற்றியும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

பாதுகாப்புத்துறையில் ஆள் பற்றாக்குறையைச் சமாளிக்க பெருமளவில் பெண்களும் படைகளில் சேர்க்கப்படுகின்றார்கள். இதேபோல் இதர பல வெளிக்கள நடவடிக்கைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்தே வருகிறது. இதனால் உலக வல்லரசுகள் உயிரியல் ரீதியான இயற்கையின் விளைவாக பல பிரச்சினைகளை சந்தித்தே வந்திருக்கின்றன.

ஏற்கனவே தொலைவில் தனிப்பட்ட வாழ்க்கை நடத்தும் படையினரின் வாழ்க்கை சிரமமானது. சாதாரண மனிதர்களையும் கிராமங்கள், நகரங்களையும் காண பல ஆயிரம் மைல்கள் செல்லவேண்டிய நிலையும் இருக்கும். இப்படியான நிலைமைகளில் இருபாலாரும் படைநடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் போது கட்டுப்பாடுகள் தளர்வது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது.

அதிலும் படைகளில் இருக்கும் பெண்களில் 50ற்கும் 60ற்கும் இடைப்பட்ட வீதத்தினர் பலவிதமான வற்புறுத்தலுக்கும் ஆளாக்கப்படுவதாகவே கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் இவர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது. எஞ்சிய 40 வீதத்தினரில் இவ்வித இம்சைகளுக்கு ஆளாக்கப்படாதோரும், மனம் விரும்பி பாலியற்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெண்களும் அடக்கம்.

படைப்பயிற்சி ஆரம்பமாகும் காலத்திலிருந்தே ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே பயிற்றுவிக்கப்படுவதும், ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை படைகளில் கணிசமான அளவு குறைவாகஇருப்பதும், பெண்கள் மீதான நெருக்கடிகளை அதிகரிக்கும் வாய்ப்புகளையே உருவாக்குகின்றன.

போர்முனைக்கு போகும் வேகத்தைவிட, தொழில் தேடியும், உலகினை வலம் வரலாம் என்ற எண்ணத்திலுமே பெண்கள் படைகளில் பெருமளவில் இணைவதாகவும் கூறப்படுகிறது.

பொஸ்னியாவில் நிலை கொண்டுள்ள சுமார் ஆயிரம் அமெரிக்கப் பெண் இராணுவத்தினரில் வாரத்தில் இருவராதல் கருவுறுதல் காரணமாக வெளியேற்றப்படுகின்றனர். விசாரணைகளின் போது வீட்டில் கிடைக்காத சுதந்திரம் பாசறையில் கிடைப்பதாகவும், இது ஓர் உயர்நிலைப் பள்ளிவாழ்க்கை என்றும் ஒரு பெண் சிப்பாய் கூறியிருக்கிறார்.

வளைகுடா யுத்தக் காலங்களில் 'Acadia' என்ற கப்பலில் இருந்த 360 பெண்களில் பத்து வீதமான மாலுமிகள்— 36 பேர்— கர்ப்பம் காரணமாக வெளியேறினார்கள். இவர்கள் யுத்தத்தை சந்திக்கப் பயந்துதான் கர்ப்பத்தை ஏற்கிறார்களா?— என்ற சந்தேகமும் வலுக்காமல் இல்லை.

பயிற்சி வழங்கும் ஓர் இராணுவ உத்தியோகத்தர் அண்மையில் 18 கற்பழிப்புகளை மேற்கொண்ட குற்றத்திற்காக இடைநிறுத்தப்பட்டதாக அமெரிக்கச் சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு பெண் விமானி (Lt. Kelly Flinn) கடமைக் காலத்தில் ஒரு சிவிலியனுடன் உறவு வைத்தமைக்காக இராணுவ நீதிமன்றத்தின்முன் கொண்டு வரப்பட்டுள்ளார்.

இத்தகவல்கள் பெண்களுக்கு மிகவும் பயன் உள்ளனவாக அமைதல் வேண்டும். தமது தொழில்களை அவர்கள் தெரிந்தெடுக்கும் போது —என்னதான் சம உரிமை பெண்ணுரிமை என்றெல்லாம் வாதம் பேசினாலும்— அங்கு பாதுகாப்பு நிலைமைகள் எப்படி இருக்கும் என்பதை கருத்தில் எடுத்தல் அவசியமாகிறது.

கட்டுப்பாடும் கடும் போக்கும் உடைய நிர்வாகம் இருக்கும் இடத்தில் பெண்கள் எத்துறையைத் தெரிவு செய்தாலும் அங்கே சிக்கல்கள் எழுவதில்லை.

பல்கலைக் கழகங்களையும் —ஏன் சில அலுவலகங்களையும் கூட — புதிதாக வந்தடையும் பெண்கள் பலவித இம்சைகளைப் பாலியல் ரீதியாக சந்திக்க வேண்டியநிலைமைகள் எழாமல் இல்லை. ஏற்கனவே இவர்கள்கொண்டிருக்கும் பாலியல் பற்றிய அடிப்படை அறிவும் எச்சரிக்கை உணர்வுமே இங்கும் பண்பாடு காத்து நிற்க உதவும்.

முன்னேற்றம் காணவேண்டிய இடங்களில் இந்த விடயங்கள் ஒரு தடைக்கல்லாக வந்து விழும் போது விட்டுக் கொடுப்பதா? இல்லை முன்னேற்றத்தை தியாகம் செய்து தன்னைக் காப்பதா?— எனப் போராடும் நிலைமையும் பெண்களுக்கு எழுகிறது. இப்பிரச்சினைகள் உலகளாவிய ரீதியில் ஆராயப்பட்டாலும், ஆங்காங்கே தனிப்பட தமது மேலதிகாரிகளிடமும் உயர் பதவிகளை வகிக்கும் வழி நடத்துநர்களிடமும் சிக்கித் தவிக்கும் பெண்களின் அவலங்கள் தணிந்தபாடில்லை.

இவர்கள் மனம் துணிந்து தமது பிரச்சினைகளை வெளி உலகினர்க்கு கொண்டுவர முற்படாதபோது பரீட்சைகளைக் கோட்டை விடுகிறார்கள்; பதவி உயர்வுகளைப் பெறாது விடுகிறார்கள்; அல்லது பதவிகளைத் துறக்கிறார்கள். சிலர் இவற்றுக்காக வேண்டி இணங்கியும் விடுகிறார்கள்.

அறிவியலில் முன்னேற்றம் ஏற்படும் போது பாலியல் பற்றிய அறிவும் அதிகரித்தே வருகிறது. இன்றைய குழந்தைகளிடம் போய் தம்பியை சாமி தந்தது, தங்கச்சியை ஆஸ்பத்திரியில் வாங்கியது என்றெல்லாம் சொன்னால் நம்பவா போகிறார்கள்? பெற்றோரின் திருமணப் போட்டோவில் தன்னைக் காண வில்லை என்று அழும் குழந்தைகளையும் இப்போது காண முடிவதில்லை.

வயது ஏற ஏற, தேவைக்கு ஏற்ப, பாலியல் பற்றியவிளக்கமும் கூடிக் கொண்டே வருமானால் எச்சரிக்கையான— பாதுகாப்புடன் வாழக்கூடிய — ஒரு புதிய சமுதாயம் உருவாகப் போவது உண்மைதான். சமுதாயத்தில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டால் அதுவும் படித்தவர்கள் ஒரு முன்மாதிரியாகச் செயற்பட்டால் எமது பண்பாட்டு பாரம்பரிய இலக்குகளை எளிதில் மீண்டும் எட்டிவிடலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து ஏற்பட்ட பல நெருக்கடிகளால் ஆட்டம் கண்டுள்ள ஐக்கிய முன்னணி அரசு

## பலவீனமான அரசியல் தலைவர் என்ற நிலையில் பிரதமர் குஜ்ரால்



மூப்பனார்

மூன்று மாத காலத்தில் தற்போது மூன்றாவது தடவையாக இந்தியாவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது.

ஐக்கிய முன்னணியில் உத்தியோக பூர்வமாக அங்கம் வகிக்கும் 13 கட்சிகளில் ஒன்றான திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேறுவதாக இவ்வாரம் அறிவித்திருப்பதே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் ஆகும்.

ஏற்கனவே ஜனதாதள் முன்னாள் தலைவரும் பீஹார் மாநில முதலமைச்சருமான லாலு பிரசாத் யாதவ்வினால் ஏற்பட்ட பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

அதற்குள் கருணாநிதி விடுத்த வெளியேறும் அறிவிப்பு இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் நிச்சயமற்ற நிலையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

இந்திய அரசியலில் தற்பொழுது இடம் பெற்றுவரும் நிகழ்வுகள் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான சூழ்நிலை உருவாகிவருவதாகவே அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### காங்கிரஸின் நோக்கம் பதவியைப் பிடிப்பதே

இந்தவருட முற்பகுதியில் இருந்து தேவகௌடா அரசை கண்டித்து வந்த காங்கிரஸ் குஜ்ரால் பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் தனது போக்கை சிறிது மாற்றிக் கொண்டது.

ஆனால் தற்பொழுதுமுதல் தடவையாக மீண்டும் காங்கிரஸின் கண்டனத்துக்கு ஐக்கிய முன்னணி அரசு உள்ளாகி வருகிறது.

இன்னும் ஒரு வருடகாலத்துக்கு குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியில் இருக்கும் என்றும்—


அடுத்த ஆண்டு ஒகஸ்ட் 15 சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போதும் டில்லி செங்கோட்டையில்குஜ்ராலே தேசியக் கொடியை ஏற்றி வைப்பார் என்றும்—காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதேசமயம் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை மிகவும் பலவீனமான அரசாங்கம் என்று சீதாராம் கேசரி கண்டிக்கவும் தவறவில்லை,

இன்னும் ஒரு வருட காலத்துக்கு ஐக்கிய முன்னணி அரசைப்பதவி கவிழ்க்கப் போவதில்லை என்று சீதாராம் கேசரி தெரிவித்த போதிலும் அதனை நம்ப குஜ்ரால் தயாரில்லை என்றே கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் தேவகௌடா தலைமையிலான அரசைக் கவிழ்த்து விட்டு தான் அரசு அமைக்கவே காங்கிரஸ் முயன்றது. இயலாத கட்டத்திலேயே குஜ்ரால் தலைமையிலான அரசுக்கு ஆதரவு அளித்தது.

ஆகவே பிரதமர் பதவியில் காங்கிரஸ் கண்வைத்திருப்பதால் குஜ்ரால் தலைமையிலான அரசு எந்த நேரமும் ஆபத்தை எதிர் நோக்கலாம்.



கருணாநிதி

தேவகௌடா அரசு பதவி கவிழ்ப்புக்குப் பின்பு ஐக்கிய முன்னணி எதிர் நோக்கிய—எதிர் நோக்கி வரும்—நெருக்கடி ஜனதாதள் கட்சியில் ஏற்பட்டுள்ள உள்கட்சிப் போராட்டம் ஆகும்.

### ஜனதா தள்ளில் உள்கட்சி போராட்டம்

ஐக்கிய முன்னணி அரசில் உள்ள 180 உறுப்பினர்களில் தனித்து 45 உறுப்பினர்களைக் கொண்ட பெரிய கட்சியாக விளங்குவது ஜனதாதள் ஆகும். பிரதமர் குஜ்ராலும் இக்கட்சியைச் சேர்ந்தவரே,

இலகுனா

என்.பி.சீலன்

இக்கட்சியின் தலைவராக இருந்தவர் பீஹார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ்.

இவர் 1980 ஆம் ஆண்டு நடந்ததாகக் கூறப்படும் பல கோடி ரூபா பெறுமதியான மாட்டுத் தீவன ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, இவர் மீது வழக்குத் தொடருவதற்கு சி.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவு, மாநில ஆளுநரின் அனுமதியையும் பெற்றுள்ளது.

இந்த நிலையில் இம் மாதம் 5 ஆம் திகதி லாலு பிரசாத் யாதவ் ஆதரவாளர்கள் ஜனதாதள் கட்சியில் இருந்து பிரிந்து தேசிய ஜனதாதள் (RASHTRIYA JANATA) என்ற கட்சியை உருவாக்கினர்.

16 லோக சபை எம்.பிக்களினதும் 9 ராஜ்ய சபை (மாநிலங்கள் அவை) உறுப்பினர்களினதும் ஆதரவு தேசிய ஜனதாதள் கட்சிக்கு கிடைத்துள்ளது. இவர்களில் மூவர் மத்திய அமைச்சர்கள்.

லாலு பிரசாத் யாதவ்வின் கட்சிக்குத் தாவிய இந்த மூன்று அமைச்சர்களையும் வெளியேற்றும்படி ஐக்கிய முன்னணியில் உள்ள மார்க்சியக் கட்சிகள் குஜ்ராலுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன.

ஐக்கிய முன்னணி அரசில் மார்க்சியக் கட்சிகளின் பலம் 53. ஆனால் இந்த மூன்று அமைச்சர்களையும் வெளியேற்ற குஜ்ரால் மறுத்து வருகிறார். அதே சமயம் ஐக்கிய முன்னணி அரசையே தொடர்ந்து ஆதரித்து வரப் போவதாகவும் தேசிய ஜனதாதள் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் தேசிய ஜனதாதள் மீது நெருங்குதல்களை ஏற்படுத்தினால் அது காங்கிரஸுடன் சேர்ந்து விடும் என்று குஜ்ரால் அஞ்சுகிறார். ஏற்கனவே பிளவுபட்டுள்ள பீஹார் சட்டசபையில் தனது பெரும்பான்மையை தொடர்ந்து தக்க வைப்பதில் லாலு பிரசாத் யாதவ் வெற்றி கண்டுள்ளார். சட்டசபையில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. காங்கிரஸ் எதிர்க்கவோ ஆதரிக்கவோ இல்லை.

அதே சமயம் தமிழ் நாட்டில் தி.மு.க. வும் மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸும் தமது பொது எதிரியான ஜெயலலிதாவை ஒழித்துக்கட்டுவதற்கு காங்கிரஸின் உதவியை நாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் நகர்வுகள் காங்கிரஸுக்குச் சாதகமாகவே சென்று கொண்டிருக்கின்றன.

### தி. மு. க. ஏற்படுத்திய நெருக்கடி

குறைந்த பட்ச பொதுத் திட்டங்கள் கூட இல்லாமல் தனி மனிதர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கும் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து செயற்பட தி. மு. க. தயாரில்லை என்று ஐக்கிய முன்னணி அரசில் இருந்து தமது கட்சி வெளியேறும் முடிவு குறித்து அறிவிக்கையில் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணி அரசில்



சீதாராம் கேசரி

இருந்து தமது கட்சி வெளியேறுகின்ற போதிலும் வெளியில் இருந்து ஆதரவு வழங்கப் போவதாகவும் கருணாநிதி அறிவித்துள்ளார்.

545 உறுப்பினர்கள் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் தி.மு.க 18உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

தொழில் அமைச்சர் முரசொலிமாறன்; பாதுகாப்பு துணை அமைச்சர் என். வி. என். சோமு மற்றும் பி. ஆர் பாலு, பி. வி. வெங்கட்ராமன் ஆகியோர் தி. மு. க. சார்பில் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர்.

ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேறுவதாக தி. மு. க. அறிவித்துள்ள போதிலும் இந்த நால்வரும் இன்னும் தமது அமைச்சர் பதவியைத் துறக்கவில்லை. எந்நேரமும் அவர்கள் பதவி துறக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தி. மு. க. வை மீண்டும் அரசில் சேர்க்க பிரதமர் குஜ்ரால் உட்பட உயர் மட்ட அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

### கருத்து வேறுபாடு ஏற்பட காரணம் என்ன?

அமைச்சர் பி. ஆர். பாலுவிடமிருந்து பெற்றோலியத்



குஜ்ரால்

துறையை எடுத்தது; அமைச்சரவை ஒதுக்கீடு ஆகியவற்றில் சமீபத்தில் ஐக்கிய முன்னணி அரசுக்கும் தி. மு. க. வுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவின.

மத்திய அரசினால் ஒதுக்கப்படும் தமிழகத்துக்கான உதவித் திட்டங்கள் குறித்தும் பிரதமர் குஜ்ராலுக்கும் தி. மு. க. தலைவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

பீஹார் மாநில முதல்வர் லாலுபிரசாத் யாதவ் பிரச்சினையிலும் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகளுக்கு முரணான கொள்கையை தி. மு. க. கொண்டுள்ளது.

அமைச்சரவையில் உள்ள லாலு பிரசாத் யாதவ்வுக்கு ஆதரவான மூன்று அமைச்சர்களையும் வெளியேற்றக் கூடாது என்று தி. மு. க. கோரி உள்ளது.

அத்துடன் தேசிய ஜனதாதள் ஐக்கிய முன்னணியில் இணையும் பட்சத்தில் அதற்கு தடையாக இருக்கக் கூடாது என்றும் தி.மு.க. தெரிவித்திருந்தது.

தேசிய ஜனதாதள்ளுக்கு தாம் தெரிவித்துள்ள ஆதரவை; அதன் தலைவர் லாலு பிரசாத் யாதவ்வின் மாட்டுத் தீவன ஊழலுக்கு ஆதரவாகக் கருதக்கூடாது என்று கருணாநிதி பின்னர் தெரிவித்திருந்தார்.

### ஜெயலலிதாவை நசுக்குவதே ஒரே நோக்கம்

நெருக்கடி காலத்தில் இந்திராகாந்தியினால் மிகவும் மோசமாக நடத்தப்பட்ட கட்சி தி. மு. க.

ஆனால் நெருக்கடி காலம் முடிவடைந்தவுடன் தனது பரம வைரியான இந்திரா காந்திக்கு நேசக்கரம் நீட்டி



லாலு பிரசாத் யாதவ்

னார் கருணாநிதி. 1977 பொதுத்தேர்தலில்காங்கிரஸ் கட்சி தோற்பதற்கு இந்த நெருக்கடி கால ஆட்சிதான் முக்கிய காரணமாக இருந்தது. அரசியல் லாபத்துக்காக எத்தகைய குத்துக்கரணத்தையும் அடிப்பதில் வல்லவர் கருணாநிதி.

தி. மு. க.வின் தற்போதைய குறிக்கோள் தமிழ் நாட்டில் தனது நிலையான ஆட்சி நடக்க வேண்டும். தனது எதிரியான ஜெயலலிதாவைத் தலை தூக்க விடக்கூடாது என்பதே.

இதனைச் சாதிக்கக்கூடிய எந்த ஓர் கட்சி மத்தியில் ஏற்பட்டாலும் அதனை ஆதரிக்கக் கருணாநிதி தயாராகி இருக்கிறார்.

அடுத்த அரசை அமைக்கக்கூடிய நிலையில் காங்கிரஸ் இருப்பதால் ஜெயலலிதா முந்திக்கொள்ள முன் தான் முந்திக்கொள்ள கருணாநிதி திட்டமிட்டுவருவதாக நம்பப்படுகிறது.

### மார்க்சிய கட்சிகள் போர்க்கோலம்

மார்க்சியக் கட்சிகளும் ஐக்கிய முன்னணிக்குள் நெருக்கடியைக் கொடுத்து வருகின்றன.

எரிபொருள் விலை உயர்வை இக்கட்சிகள் எதிர்க்கின்றன. விலை உயர்வு தவிர்க்க முடியாதது என்று நிதிஅமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்து வருகிறார்.

அத்துடன் அரசு நிறுவனங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதற்கும் மார்க்சியக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. லாலு பிரசாத் யாதவ் விவகாரத்திலும் மத்திய அரசு கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று இக்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

சமீபத்திய காலங்களில் இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களிலும்; காஷ்மீரிலும் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அதே சமயம் பாரதீய ஜனதாக்கட்சி சார்பாக குஜ்ரால் மிருதுவான போக்கைக் கடைப்பிடித்தாலும் பாரதீய ஜனதா, ஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக கடும் போக்கையே வெளியிட்டு வருகிறது.

தற்போதையநெருக்கடிகள் குறித்து ஆராய ஐக்கிய முன்னணியின் மத்திய குழு விரைவில் கூட இருப்பதாக ஆந்திர மாநில முதல்வரும் ஐக்கிய முன்னணியின் செயற்பாட்டாளருமான சந்திர பாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

இம்முறை அரசைக் கவிழ்க்காமல் அரசைக் கவிழ வைப்பதிலேயே காங்கிரஸ் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பிரதமராகப் பதவி ஏற்ற போது அரசியலில் ஒரு பெரும் மனிதராகக் கருதப்பட்ட குஜ்ரால் தற்போது பலவீன மானஅரசியல் தலைவர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org